REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2024 பெப்ரவரி 2 வெள்ளிக்கிழமை
# தினகரன்
THINAKARAN
தினகரன்
வரு. 92 இல. 29 | Friday 02, February, 2024 | 20 பக்கங்கள் | 50/-

## கூரை மீதான சோலார் மின்சாரத் திட்டம்
# தேசிய கட்டமைப்புக்கு 2023இல் 630 மில். யூனிட் மின்சாரம் இணைப்பு

மின்சார நுகர்வோருக்காக இலங்கை மின்சார சபை நடைமுறைப்படுத்திய மேற்கூரை சூரிய சக்தி திட்டத்தின் கீழ், 2023 இல், மாத்திரம் 630 மில்லியன் யுனிட் மின்சாரம் தேசிய கட்டமைப்பில் சேர்க்கப்பட்டதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது. நாடு முழுவதுமுள்ள வாடிக்கையாளர்கள் இந்த தனித்துவமான 06

# நாட்டின் அபிவிருத்தி, முன்னேற்றத்துக்கு வெளிநாட்டு உறவுகள், தொடர்புகள் அவசியம்
## ஜனாதிபதியின் பயணங்களை விமர்சிப்பது வீணானது



ஜனாதிபதியின் வெளிநாட்டுப் பயணங்கள் தொடர்பில் சிலரால் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை எனத் தெரிவித்த வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் தாரக்க பாலசூரிய, அபிவிருத்தியை நோக்கி நாட்டை வழிநடத்துவதற்கு வெளிநாட்டு தொடர்புகளை பலப்படுத்துவதும், புதிய வெளிநாட்டு உறவுளை ஏற்படுத்துவதும் அவசியம் என்றும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (01) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலே அவர் மேற்கண்டவாறு 06

## சுதந்திரதின ஒத்திகையில் படைவீரர்கள்



# காணி உறுதிப்பத்திரம் வழங்கும் தேசிய நிகழ்வு பெப்ரவரி 05 இல்.
## பத்தாயிரம் பேருக்கு காணி உரிமைகள்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



சுபீட்சமான எதிர்காலம் என்ற தொனிப்பொருளின் கீழ் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் அறிமுகப் படுத்தப்பட்டுள்ள 'உருமய' 06

# அமெரிக்க சட்டங்களுக்கு இணங்க இணையத்தள தலைவர்கள் இணக்கம்

சமூக வலைதளம் தொடர்பில் எதிர்காலத்தில் அமெரிக்க அரசாங்கம் மேற்கொள்ளும் சட்டங்களுக்கு இணங்குவதாக இணையத்தள சேவைகளை வழங்கும் சர்வதேச நிறுவனங்களின் தலைவர்கள் தமது 06

## ரூபா 16 பில்லியன் செலவில்
# 16 இலட்சம் மாணவருக்கு பகலுணவு வழங்கும் திட்டம்
## மார்ச் முதல் நடைமுறையாகிறது சர்வதேச மொழிகளிலும் கவனம்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டிலுள்ள பாடசாலைகளில் முதலாம் தரம் முதல் தரம் ஐந்து வரை கல்விகற்கும்16 இலட்சம் மாணவர்களுக்கு எதிர்வரும் மார்ச் மாதம் முதல் பகல் உணவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். இத்திட்டத்துக்காக 16 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அமைச்சர், இதற்கிணங்க நாளொன்றுக்கு ஒரு மாணவருக்கான பகலுணவுச்செலவு 110 ரூபாவாக அதிகரித்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தேசிய பாடசாலைகளில் சர்வதேச மொழிகளைக் கற்பிப்பதற்காக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள 162 பட்டதாரிகளுக்கு நியமனக் கடிதங்களை வழங்கும் நிகழ்வில் உரையாற்றுகையிலேயே, அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார். 06

# மின் இணைப்பை பெறுவோருக்கு தவணைமுறையில் கட்டண வசதி

**லோரன்ஸ் செல்வநாயகம்**



புதிய மின் இணைப்புகளை பெற்றுக் கொள்ள விண்ணப்பிப்பவர்களுக்கு தவணை முறையில் கட்டணத்தை செலுத்த வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

ஒரே தடவையில் பணத்தை செலுத்த முடியாதுள்ள விண்ணப்பதாரர்களுக்கு தவணை முறையில் அதனை செலுத்துவதற்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக எரி சக்தி, மின் சக்தி அமைச்சர் கஞ்சன 06

## போதைப்பொருள் வியாபாரத்தில்
# கைத்தொலைபேசிகளூடான இரகசிய பணப்பரிமாற்றங்கள்
## கட்டுப்படுத்த விசேட வேலைத்திட்டம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



போதைப்பொருள் கொள்வனவின் போது கையடக்கத் தொலைபேசி மூலம் பணத்தைப் பெற்றுக் கொள்ளும் முறைமையை கட்டுப்படுத்துவதற்கு விசேட வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக 06

## இரண்டு வயதுக் குழந்தைக்கு உலக சாதனை விருது



அதிகபட்ச பெருக்கல் அட்டவணைக்கு பதிலளித்த இரண்டு வயதுக் குழந்தைக்கு சர்வதேச சாதனை புத்தகத்தல் விருது வழங்கப்பட்டுள்ளது. குழந்தை திருகோண மலையைச் சேர்ந்த 2 வயதும் 10மாதமும் நிரம்பிய சிறுமி தாரா பிரேம்ராஜ் இந்த சாதனையைப் படைத்துள்ளார். கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் இதற்கான விருதை வழங்கி உள்ளார்.

# அஸ்வெசும: புதிய விண்ணப்பங்கள் பெப்ரவரி 10 முதல் ஏற்கப்படும்



அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவுக்கான 400,000 புதிய விண்ணப்பங்கள், எதிர்வரும் 10 முதல் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

ருவன்வெல்ல பகுதியில், ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே, அவர் 06

# தாய்லாந்து பிரதமரின் இலங்கை விஜயம் ஒரு நாளாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது



**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டின் 76 ஆவது சுதந்திர தின நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காக விஷேட சர்வதேச அதிதியாக வருகை தரும் தாய்லாந்து பிரதமர் ஸ்ரேத்தா தவிசினின் 06

# கோரிக்கைக்கு தீர்வின்றேல் பஸ் கட்டணம் உயரும்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பஸ் உரிமையாளர் சங்கங்கள் விடுத்துள்ள கோரிக்கைகளுக்கு தீர்வு கிடைக்காவிடின், எதிர்வரும் 2 வாரங்களில் பஸ்கட்டணத்தை 10 வீதத்தால் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுமென தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் 06

# அமைச்சர் கெஹெலியவுக்கு வெளிநாட்டுப் பயணத்தடை
## சி ஐ டியில் இன்று ஆஜராகவும் மாளிகா கந்த நீதிமன்றம் உத்தரவு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



சுற்றாடல் அமைச்சரும் முன்னாள் சுகாதார அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல்ல வெளிநாடு செல்வதற்கு நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

மாளிகாகந்த நீதவான் நீதிமன்றம் நேற்று (01) அமைச்சருக்கான இந்த வெளிநாட்டு பயணத் தடையை விதித்தது. அத்துடன் இன்றைய 06

# நிகழ்நிலை காப்பு சட்டம் நேற்றிலிருந்து நடைமுறை
## மூன்று சட்டமூலங்களில் கையெழுத்திட்டு சபாநாயகரால் சான்றுரை



**லோரன்ஸ் செல்வநாயகம்**

நிகழ்நிலை காப்பு சட்டம் நேற்று முதல் நடைமுறைக்கு வந்தது. அத்துடன் மேலும் இரண்டு சட்டங்களும் நடைமுறைக்கு வருகின்றன. 06



## 03 எரிபொருள் விலைகளில் திருத்தங்கள்

# தமிழரசுக் கட்சி தேசிய மாநாட்டை நடத்துமாறு வேண்டுகோள்

இலங்கை தமிழரசுக் கட்சியின் 17 ஆவது தேசிய மாநாட்டை விரைவில் நடத்துமாறு கட்சியின் முன்னாள் பிரதி பொதுச்செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்,ஏ,சுமந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் சிவஞானம் சிறிதரனுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் அவர், 06

# ஆறு மாவட்டங்களில் மண்சரிவு அபாயம்



நாட்டின் ஆறு மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், பதுளை, கண்டி, கேகாலை, நுவரெலியா, இரத்தினபுரி மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்களில் மண்சரிவு இடம்பெறலாமென எச்சரிக்கப்பட்டுள்ளது. பதுளை மாவட்டத்தின் மீகாஹாகிவுல, கேகாலை மாவட்டத்தின் கேகாலை, மாத்தளை மாவட்டத்தின் கொடபொல ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு 06

# சுகாதார சேவையில் படையினர் களமிறங்கல்
## தொழிற்சங்க போராட்டம் நோயாளர்களை பாதிக்காமலிருக்க முன்னேற்பாடுகள்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

சுகாதாரத்துறை தொழிற்சங்கங்கள் நேற்று (01) வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்ததால், நோயாளிகளுக்கான அன்றாட சேவைகளை முன்னெடுக்கும் வகையில் இராணுவத்தினர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டதாக சுகாதார அமைச்சு தெரிவித்தது. 06

# கடவுச்சீட்டு கட்டணங்கள் இரு மடங்காக அதிகரிப்பு



கடவுச்சீட்டு வழங்குவதற்கான கட்டணம் நேற்று முதல் (01) இரட்டிப்பாக்கப்பட்டுள்ளது. 5,000 ரூபாவாக இருந்த சாதாரண சேவை கடவுச்சீட்டு கட்டணம் 10,000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக குடிவரவு குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது. இவ்விலை திருத்தம் ஒன்லைன் மற்றும் நேரடி பிரிவுகளுக்கு செல்லுபடியாகுமென, குடிவரவுத்துறை 06

# டிஜிட்டல் மயமாக்கல் நடவடிக்கையில் லேக் ஹவுஸ் நிறுவனமும் கால்பதிப்பது காலத்தின் தேவையாகும்

## லேக் ஹவுஸ் நிறுவன டிஜிட்டல் ஊடக நிலைய திறப்பு விழாவில் நிறுவன தலைவர் பேராசிரியர் ஹரேந்திர காரியவசம் தெரிவிப்பு



டிஜிட்டல் மயமாக்கல் தற்போதைய உலகின் எதிர்காலமாக மாறியுள்ள நிலையில் பத்திரிகையின் தாய் வீடு என்னும் பெயரை பாதுகாத்து பாரம்பரியத்துக்கு அப்பால் சென்று லேக்ஹவுஸ் நிறுவனமும் அதனை எதிர்கொள்ள வேண்டும் என லேக் ஹவுஸ் நிறுவனத்தின் தலைவர் ஹரேந்திர காரியவசம் நேற்று முன்தினம் (31) தெரிவித்தார். லேக்ஹவுஸில் புதிதாக நிறுவப்பட்ட டிஜிட்டல் மீடியா நிலையத்தை தலைவர் உள்ளிட்ட பணிப்பாளர் சபையின் தலைமையில் (31) திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் கூறியதாவது:

இவ்வருட கடமையினை ஆரம்பித்த முதல் நாளில், நிறுவன உறுப்பினர்களிடம் உரையாற்றுகையில், நான் பல வாக்குறுதிகளை வழங்கினேன். இன்று எனக்கு மிகவும் மகிழ்ச்சியான மற்றும் பெருமையான நாள். புத்தாண்டில் கொடுத்த வாக்குறுதியின்படி ஜனவரி 31ஆம் திகதிக்குள் பல சாதனைகளை அடைந்துள்ளோம். அதற்கான திறன் நம்மிடம் இருப்பது முக்கிய காரணம்.

லேக்ஹவுஸ் வரலாற்றில் இந்த வருடம் பொன் எழுத்துக்களால் எழுதப்படும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். இன்றிலிருந்து தொடங்கி அங்கத்தவர்களுக்கு பல வெற்றிகளை அனுபவிக்க முடியும் என்பது நிச்சயம்.

"டிஜிட்டல் உலகம் என்பது எதிர்கால உலகமாகும். நம் மக்கள் எப்போதும் படிக்க விரும்புகிறார்கள். உலகில் பலரும் படிக்கிறார்கள். ஆனால் வாசிக்கும் முறை மாறிவிட்டது, அதற்கு நாம் முகம் கொடுக்க வேண்டும். அதற்காக மாற வேண்டியது அவசியம். இன்று நாம் இந்த மாற்றத்தைத் தொடங்குகிறோம். லேக்ஹவுஸ் மூலம் டிஜிட்டல் இதழியல் உள்ளிட்ட டிஜிட்டல் துறைகளை மேம்படுத்த வேண்டும். இதற்காக நாங்கள் குறைவின்றி முதலீடு செய்து வருகிறோம். இவை நிறுவனத்தின் எதிர்கால முதலீடுகள்.

இந்த டிஜிட்டல் நிலைய பணிகளை நிறைவு செய்வதற்கு அர்ப்பணிப்பு செய்த அனைவருக்கும் நன்றியை தெரிவிப்பதோடு, குறிப்பாக சட்டம் மற்றும் நிதிப் பணிப்பாளர் ஜனக ரணதுங்கவை



இந்த நேரத்தில் நினைவுபடுத்த வேண்டும். இந்த வேலைக்குப் பின்னால் ஏராளமானோரின் அர்ப்பணிப்பு உள்ளது. இன்று நாம் பார்ப்பது அவர்களின் முயற்சியின் விளைவு, எதிர்காலத்தில் நிறுவனத்தின் வளர்ச்சிக்கான முடிவுகளை நாங்கள் அச்சமின்றி எடுப்போம்.

நமது எதிர்காலம் டிஜிட்டல் மயமாக்கலில் உள்ளது. பத்திரிகையின் தாய் வீடு என்னும் நாமத்தை என்றென்றும் நிலைநிறுத்தி, பாரம்பரியத்தைத் தாண்டி, நடவடிக்கையை எடுப்பதன் மூலம் லேக் ஹவுஸ் நிறுவனத்தை உலகில் பிரபலப்படுத்த நடவடிக்கை எடுப்போம் என்றார்.

லேக்ஹவுஸ் சட்ட மற்றும் நிர்வாக பணிப்பாளர் சட்டத்தரணி ஜனக ரணதுங்க இங்கு உரையாற்றுகையில், "உலக ஊடகங்கள் இன்று மாறி வருகின்றன. பாரம்பரிய ஊடகங்கள் குறைந்து வரும் நேரத்தில் டிஜிட்டல் மீடியா வளர்ந்து வருகிறது. கடந்த 5 ஆண்டுகளில் மட்டும் நம் நாட்டில் இணையதளத்தை பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்துள்ளது. குறிப்பாக 9 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் இணையத்தை பயன்படுத்துகின்றனர். இது மக்கள்தொகையில் 40% சதவீதம். எங்களுக்கு இந்த புதிய ஊடகம்தான் எதிர்காலம் என்பது தெளிவாகிறது. அந்த தொழில்நுட்பத்தை நாம் தொடரவில்லையென்றால் நாம் தொடர்ந்து செல்வது மிகவும் கடினம். அமரர் டி ஆர் விஜயவர்த்தன அவர்கள் ஆரம்பித்த பயணத்தை நாம் நூறு ஆண்டுகள் கடந்து வந்துள்ளோம். இன்றும் அந்த பயணத்தை மேற்கொண்டு வருகின்றோம். அந்த பாரம்பரியத்தை பேணி எதிர்காலத்தை நோக்கிய பயணத்தை ஆரம்பித்துள்ளோம். அதுக்கு தேவையான ஒன்றே இன்று திறந்து வைக்கப்படும் ஊடக டிஜிட்டல் நிலையம். அது இன்றியமையாத அம்சமாகும்.

எமது முன்னாள் தலைவர் ஊடக அமைச்சின் செயலாளர் அனுச பெல்பிட்ட இப்பணிக்கு எமக்கு உத்வேகத்தை வழங்கியவராவார். இவ்வேளையில் அவரை நினைவு கூருகின்றோம். அத்துடன் தற்போதைய தலைவர் உள்ளிட்ட நிர்வாக சபையினரையும் இந்த நேரத்தில் நினைவுகூர வேண்டும். மாதத்திற்கு 15 மில்லியன் டிஜிட்டல் தள பயனாளர்களை நாம் கொண்டுள்ளோம். நாம் நமது பயனாளர்களை மேலும் அதிகரிக்க வேண்டும். இந்த பணிக்கு பங்களித்த அனைவருக்கும் நன்றி கூற விரும்புகிறேன்.

லேக்ஹவுஸ் நிறுவனத்தின் ஆசிரியர் குழு பணிப்பாளர் சிசிர பரணதந்திரி, பொது முகாமையாளர் சுமித் கொத்தலாவல, மேலதிக பொது முகாமையாளர் விராஜித் பொயிஸ், பிரதி பொது முகாமையாளர்களான சிந்தக யாப்பா, சந்தன பண்டார, பிரமிதா ஜயமஹா, நிறுவன செயலாளர் சுதர்ஷி பிரசங்கா, நிறுவன வெளியீடுகளின் பிரதம ஆசிரியர்கள் மற்றும் பலர் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

வீ.ஆர். வயலட்

# நகர்வலம்



## நல்லெண்ண விஜயத்திற்குப்பிறகு பாகிஸ்தான் கடற்படைக்கப்பல் 'சைப்' நாடு திரும்பியது





இலங்கைக்கான மூன்று நாள் நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்டிருந்த பாகிஸ்தான் கடற்படைக் கப்பல் "சைப்" கொழும்பு துறைமுகத்திலிருந்து நேற்று (01) புறப்பட்டுச் சென்றது. இதன்போது இலங்கை கடற்படை வீரர்களால் சம்பிரதாய பிரியாவிடையும் வழங்கப்பட்டது.

இவ்விஜயத்தின்போது, கப்பலின் கட்டளை அதிகாரி கேப்டன் முஹம்மது அலி மேற்கு கடற்படைத் தளபதியையும் சந்தித்தார். இதில் வருகை தந்த பாகிஸ்தான் கடற்படை அதிகாரிகள், இலங்கை கடற்படையின் பல்வேறு பிரிவுகளையும் பார்வையிட்டதுடன், இலங்கை கடற்படையால் ஏற்பாடு செய்யப்பட்ட நட்புறவு விளையாட்டு நிகழ்விலும் கலந்துகொண்டனர். மேலும் இலங்கை கடற்படை அதிகாரிகளும் பாகிஸ்தான் கடற்படைக்கப்பலான "சைப்" இணையும் பார்வையிட்டனர்.

இவ்விஜயத்தின் சிறப்பம்சமாக, நேற்று முன்தினம் (31) மாலை கொழும்பு துறைமுகத்தில் பாகிஸ்தான் கடற்படைக் கப்பலில் இரவு விருந்துபசாரமொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்நிகழ்வில் அமைச்சர்கள், அரசியல் பிரமுகர்கள், தூதரகப்படை உறுப்பினர்கள் இலங்கை ஆயுதப்படைகளின் சிரேஷ்ட மற்றும் ஓய்வுபெற்ற அதிகாரிகள், பாதுகாப்பு ஆலோசகர்கள், இணைப்பாளர்கள், பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராலயத்தின் அதிகாரிகள் மற்றும் ஊடகப் பிரதிநிதிகள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

இங்கு கருத்துத் தெரிவித்த கப்பலின் தளபதி கேப்டன் முஹம்மது அலி, பாகிஸ்தானுக்கும் இலங்கைக்கும் இடையே வலுவான உறவு இருப்பதாகவும் இருநட்பு நாடுகளுக்கும் இடையிலான வலுவான இராஜதந்திர, பொருளாதார, கலாசார மற்றும் பாதுகாப்பு உறவுகளின் வெளிப்பாடாக இந்த விஜயம் அமைந்துள்ளதாகவும் தெரிவித்தார். இறுதியில், பாகிஸ்தான் இலங்கை நட்புறவை நினைவுகூரும் வகையில் கேக்வெட்டும் நிகழ்வும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன் உட்பட பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராலய அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

## ஷசீந்திர ராஜபக்ஷவுக்கு அமைச்சர் ஜீவன் வாழ்த்து



நீர்ப்பாசனம் மற்றும் நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சராக அண்மையில் பதவியேற்றுள்ள ஷசீந்திர ராஜபக்சவுக்கு, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

நீர்வழங்கல் அமைச்சால் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்களுக்கு உயிரிழந்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த முழுமையான ஒத்துழைப்புகளை வழங்கியது போல ஷசீந்திர ராஜபக்சவும் வழங்குவார் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இலங்கை வாழ் மக்களுக்கு சுத்தமான – சுகாதார பாதுகாப்பான குடிநீரை வழங்குவதே எமது பிரதான நோக்கமாகும். அந்த இலக்கை அடைவதற்கு எமது அமைச்சு துரிதமாக செயற்பட்டு வருகின்றது எனவும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் குறிப்பிட்டுள்ளார்.

## கலைஞர்களுக்கு விருது வழங்கல் நிகழ்வு



(அஷ்ரப் ஏ சமத்)

ஸ்ரீலங்கா அரச சேவையாளர்கள் சங்க ஏற்பாட்டில் திறமைகளை வெளிக்கொணர்ந்த அரச திணைக்களங்கள், அமைச்சுக்களின் உள்ள கலைஞர்களுக்கு விருது வழங்கல் நிகழ்வு கொழும்பு தாமரை தடாகத்தில் (30) நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம அதிதியாக மத விவகார, கலாசார அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க வெற்றிபெற்ற கலைஞர்களுக்கு விருதுகளை வழங்கி வைத்தார். இந்நிகழ்வில் முதலாம் இடங்களைப் பெற்ற தமிழ், சிங்கள நிகழ்ச்சிகள் மேடையேற்றப்பட்டன. குருந்திரைப்படம், நாடகம், சங்கீதம், நாட்டியம், சிறந்த திரைப்பட தயாரிப்பாளர், புகைப்படக் கலைஞர், ஒலி ஒளிபரப்பாளர் போன்றவற்றில் விருதுகளும் வழங்கப்பட்டன.

இந் நிகழ்வில் பௌத்த மத விவகார கலாசார அமைச்சின் செயலாளர் சோமரத்ன, மேலதிகச் செயலாளர் திலக் ஹெட்டியாரச்சி கலாசாரத் திணைக்களத்தின் பணிப்பாளர்கள் மற்றும் சிரேஷ்ட கலைஞர்கள் மற்றும் மத்தியஸ்தர்களும் கலந்து சிறப்பித்தனர்.

## 25 வருட காலம் சேவையாற்றியோர் கௌரவிப்பு



லேக்ஹவுஸ் நிறுவனத்தில் 25வருட கால சேவையை பூர்த்தி செய்தவர்களுக்கான கௌரவிப்பு விழா (31) லேக்ஹவுஸ் நிறுவன கேட்போர் கூடத்தில் நிறுவனத்தலைவர் பேராசிரியர் ஹரேந்திர காரியவசம் தலைமையில் நடைபெற்றபோது எடுத்த படம்.

## கொழும்பில் இலவச கல்விக் கருத்தரங்கு

தமிழ் மொழிமூலம் கல்விகற்கும் தரம் 09, தரம் 10 மாணவர்களுக்கான கற்றல் கற்பித்தல் நுட்பமுறைகளுடன் கூடிய இலவச கல்விக் கருத்தரங்கு எதிர்வரும (04) ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணிதொடக்கம் மாலை 05.00 மணிவரை சட்டத்தரணி தேவசேனாதிபதி தலைமையில் இல.111, பொன்சின்ரோட் கொழும்பு 13 இல் அமைந்துள்ள அருள் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

இதன் மூலம் தமிழ்மொழி மூலம் கல்விகற்கும் க.பொ.த சாதாரண தர மற்றும் உயர்தர மாணவர்களின் தேர்ச்சி அடைவு மட்டத்தை அதிகரிப்பது இதன் நோக்கமாகும். (தரம் 9 வகுப்பு மாணவர்களுக்கான இலவசக் கல்விக் கருத்தரங்கு பகல் 01.00 மணி தொடக்கம் மாலை 04.00 மணிவரை நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது.)

கணிதம், விஞ்ஞானம், தமிழ், வரலாறு, ஆங்கிலம், வணிகக்கல்வியும் கணக்கீடும் ஆகிய பாடங்களுக்கான விரிவுரைகளை தேர்ச்சி பெற்ற வளவாளர்கள் வழங்குவர். கருத்தரங்கு முற்றிலும் இலவசமாக நடைபெறுவதோடு இலவச பாடக் குறிப்புக்களும் இதன்போது வழங்கப்படும்.

## கொழும்பு தமிழ்ச் சங்கம் நடத்தும் இலக்கியக் களம்

கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் பேரவை உறுப்பினர் திருமதி வசந்தி தயாபரன் தலைமையில் இன்று (02) வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ள இலக்கியக்களம் நிகழ்ச்சியில் "கோகிலா மகேந்திரனின் சந்தனச் சிதறல்கள் ஒரு பார்வை" என்னும் தலைப்பில் ஓய்வுநிலை ஆசிரியர் திருமதி இராசலட்சுமி கெங்காதரன் உரை நிகழ்த்தவுள்ளார்.

## கடந்த வருடத்தில் 63 கோடி சூரிய படல மின் இணைப்பு நுகர்வோருக்கு வழங்கிவைப்பு

### மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் நொயெல் பிரியந்த

(லோரன்ஸ் செல்வநாயகம்)

இலங்கை மின்சார சபை மின் பாவனையாளர்களுக்காக நடைமுறைப்படுத்தியுள்ள கூரைகளில் சூரிய மின்சார பெனல்களை பொருத்தும் திட்டத்தின் கீழ் கடந்த வருடத்தில் மாத்திரம் 63 கோடி மின் அலகுகளை தேசிய மின் விநியோக இணைப்பில் இணைத்துள்ளதாக சபையின் ஊடகப் பேச்சாளர் நொயெல் பிரியந்த தெரிவித்துள்ளார்.

இந்த செயற்திட்டத்துக்காக நாடளாவிய ரீதியிலுள்ள மின் பாவனையாளர்களின் முழுமையான ஒத்துழைப்பு கிடைத்துள்ளதாகவும், சம்பிரதாய மின் பாவனைக்கு அப்பால் புதிய முறையில் நவீன தொழில்நுட்பத்தில் அனுபவத்தைப் பெற்றுக் கொண்டு தேசிய மின் இணைப்புக்கு மின்சாரத்தை விற்பனை செய்வதற்கு மின் பாவனையாளர்களை ஊக்கப்படுத்தியுள்ளமை விசேட அம்சமாகுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த செயற்பாடுகளின் போது பல்வேறு தொழில்நுட்ப சிக்கல்களுக்கு தீர்வு பெற்றுக் கொடுக்க முடிந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# எரிபொருள் விலைகளில் திருத்தங்கள்

எரிபொருள் விலையில் திருத்தம் மேற்கொள்ளப்படுவதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் ஐ.ஓ.சி. நிறுவனமும் அறிவித்துள்ளன. இதன்படி, ஒக்டேன் 92 ரக பெற்றோல் ஒரு லீற்றரின் விலை ஐந்து ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் அதன் புதிய விலை 371 ரூபாவாகியுள்ளது. ஒக்டேன் 95 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை எட்டு ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதால் புதிய விலை 456 ரூபாவாகியுள்ளது. ஓட்டோ டீசல் ஒரு லீற்றரின் விலை ஐந்து ரூபாவால் அதிகரிக்கப்பட்டு, அதன்புதிய விலை 363 ரூபாவாகி உள்ளது. சுப்பர் டீசல் ஒரு லீற்றரின் விலை 7 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதால், புதிய விலை 468 ரூபாவாக அறிவிக்கப்பட்டுள்ளது. மண்ணெண்ணெய் ஒரு லீற்றரின் விலை 26 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு, புதிய விலை 262 ரூபாவாக பதிவாகியுள்ளது. இதேவேளை, சினோபெக் நிறுவனமும் எரிபொருள் விலையில் திருத்தத்தை மேற்கொண்டுள்ளது. இதன்படி, ஒக்டேன் 92 ரக பெற்றோல் ஒரு லீற்றரின் புதிய விலை 368 ரூபாவாகவும், ஒக்டேன் 95 ரக பெற்றோல் ஒரு லீற்றரின் புதிய விலை 456 ரூபாவாகியுமுள்ளது. ஓட்டோ டீசல் ஒரு லீற்றரின் விலை 360 ரூபாவாகவும், சுபர் டீசல் ஒரு லீற்றரின் விலை 07 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலை 468 ரூபாவாகியுள்ளது.



# சினிமாத்துறையை சர்வதேச தரத்திற்கு உயர்த்த நிர்வாக கட்டமைப்பில் மாற்றங்கள்

நாட்டின் சினிமாவை சர்வதேச தரத்திற்கு உயர்த்தும் வகையில் தரமான மாற்றங்களை கொண்டு வர விரைவில், தேசிய திரைப்பட அபிவிருத்தி ஆணைக் குழு நிறுவப்படுமென போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத் துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன தெரிவித்தார். 77 வருடத்தை பூர்த்தி செய்த தேசிய பேசும் சினிமா படம் மற்றும் 52 வருட நிறைவை பூர்த்தி செய்யும் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தை கொண்டாடும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் இதனை தெரிவித்தார். தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் தரங்கணி திரையரங்கில், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது. இங்கு பேசிய அமைச்சர்:

"ஐம்பத்திரண்டு வருட தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன வரலாற்றில் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சராக இருந்து நன்றி தெரிவிக்கும் இத்தருணத்தில் பங்களிப்பது மகிழ்ச்சியளிக்கிறது. அரச திரைப்படக் கூட்டுத்தாபனத்தை உருவாக்குவதற்கு முன்னோடியாக இருந்தவர் முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா. உலகின் முதல் பெண் பிரதமர், தனியார் துறையாக இருந்த திரைத்துறையை, அரச துறைக்கு மாற்றியிருந்தார்.

இந்நிறுவனத்தை தேசிய திரைப்பட அபிவிருத்தி ஆணைக்குழுவாக மாற்றுவதற்கான சட்ட வரைவு , துறைசார் அறிஞர்களின் கருத்துகளுக்கு மதிப்பளித்து தயாரிக்கப்பட்டது. இச்சட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு, தேசிய அபிவிருத்தி ஆணைக் குழு திரைத்துறையில் உள்ள அனைத்து படைப்பாளிகளுக்கும் ஆதரவு மற்றும் ஊக்கம் அளிப்பதன் மூலம் திரைப்படத் துறையை சர்வதேச தரத்திற்கு உயர்த்தலாம். இதற்காக, இதன் கட்டமைப்புக்களில் மாற்றங்கள் செய்யப்படவுள்ளன.

இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் ஸ்தாபகரான மறைந்த பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் திருவுருவப் படத்திற்கு அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் பத்து கலைஞர்களுக்கு ஒய்வூதியமும் வழங்கப்பட்டது. இலங்கை சினிமாவின் 77வது ஆண்டு நிறைவை ஒட்டி "சித்ரபட" சிறப்பு இதழும் வெளியிடப்பட்டது.

தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சட்டத்தரணி தீபால் சந்ரரத்ன, தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளர் ரவி பிரசாத் களுபஹன, தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் இயக்குநர்கள் குழு உறுப்பினர்கள், சிரேஷ்ட நடிகர்கள், ஒளிப்பதிவாளர்கள், கலைஞர்கள் எனப் பலரும் இதில் கலந்துகொண்டனர்.



# தேசிய கொடியை அவமதித்தால் கடும் நடவடிக்கை

தேசிய கொடியை அவமதிப்பவர்கள் மற்றும் முறையற்ற விதத்தில் கொடியை பயன்படுத்துவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமென, பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் எச்சரிக்கை விடுத்துள்ளார். இவற்றை கண்காணிப்பதற்கு தனி குழு அமைப்பக்கப்பட்டுள்ள தாகவும் தேசபந்து தென்னகோன் மேலும் தெரிவித்துள்ளார்.

# சனத் நிஷாந்தவுக்கு எதிரான மனு இன்று விசாரணைக்கு எடுக்க முடிவு

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் அமரர் சனத் நிஷாந்தவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணையை, பெப்ரவரி (02) இன்று முன்னெடுக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

இம்மனு மீதான விசாரணை யோஹித ராஜகருணா மற்றும் தம்மிக்க கணேபொல ஆகியோர் உள்ளடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் குழாம் முன்னிலையில் நேற்று (01) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. பிரதிவாதியான சனத் நிஷாந்த மரணமடைந்துள்ள நிலையில், நீதிமன்றத்தை அவமதித்த குற்றம் தொடர்பான மனு தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளும் வகையிலேயே, இன்று (02) இந்த மனு மீதான விசாரணையை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. நீதிமன்ற அதிகாரிகள் சங்கம் மற்றும் இரு சட்டத்தரணிகளான பிரியலால் சிறிசேன, விஜித குமார ஆகியோரால் மேற்படி மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பி டத்தக்கது.

# பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஸ்ரீதரன் எம்பியுடன் சந்திப்பு

இலங்கை தமிழரசுக்கட்சியின் புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் ஶ்ரீதரனை இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஆண்ட்ரூ பெட்ரிக் சந்தித்து கலந்துரையாடினார். இசந்திப்புக் குறித்து பிரித்தானிய உயர்ஸ்தானிகர் தனது எக்ஸ் (X) தளத்தில் குறிப்பிட்டுள்ளதாவது,

இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ள ஶ்ரீதரனுடனான சந்திப்பு ஒரு பயனுள்ளதாக அமைந்தது. வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள தமிழ் சமூகத்திற்குள் காணப்படும் முக்கிய விடயங்கள் குறித்து நாம் கலந்துரையாடினோம். இவ்வாறு பிரித்தானிய தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.



# ஜனவரியில் இரண்டு இலட்சம் சுற்றுலா பயணிகள் வருகை

## தாமரை கோபுரத்தை பார்வையிட்ட பெண்ணுக்கு பரிசு

இரண்டு இலட்சம் சுற்றுலாப்பயணிகள் ஜனவரியில் நாட்டுக்கு வந்துள்ளனர். ஜனவரி ஆரம்பத்திலிருந்து கடந்த 30 வரை சுமார் 201,687 சுற்றுலாப் பயணிகள்

நாட்டுக்கு வந்ததாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. இவர்களில் பெரும்பாலானோர் இந்தியர்களாவர். மேலும்ரஷ்யா, பிரிட்டன் மற்றும் ஜெர்மனியிலிருந்தும் பயணிகள் வந்துள்ளனர்.

இதேவேளை, கடந்த 16 மாதங்களில் 50,000 சுற்றுலாப் பயணிகள் தாமரை கோபுரத்தை பார்வையிட்டதாக தாமரை கோபுர நிர்வாகப் பணிப்பாளர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

50,000 வது சுற்றுலாப்பயணியாக பல்கேரிய பெண் ஒருவர் நேற்று (31) இந்த கோபுரத்தை பார்வையிட்டதுடன், அவருக்கும் சிறப்பு பரிசு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




# புதிய படைக்கலச் சேவிதர் கடமைகளைப் பொறுப்பேற்பு

பாராளுமன்றத்தின் ஏழாவது படைக்கலச் சேவிதராக குஷான் சம்பத் ஜயரத்ன நேற்றுமுன்தினம் (31) கடமைகளைப் பொறுப்பேற்றார். பாராளுமன்றத்தின் ஆறாவது படைக்கலச் சேவிதராக கடமையாற்றிய நரேந்திர பெர்னாந்து (30) ஓய்வுபெற்ற நிலையில், ஏழாவது படைக்கலச் சேவிதராக குஷான் சம்பத் ஜயரத்ன பதவியை பொறுப்பேற்றுக் கொண்டார். புதிய படைக்கலச் சேவிதர் குஷான் சம்பத் ஜயரத்னவுக்கு சம்பிரதாயபூர்வமாக செங்கோல் மற்றும் படைக்கலச் சேவிதரின் வாளை கையளிக்கும் நிகழ்வு பாராளுமன்ற சபை மண்டபத்தின் வெள்ளிக் கதவுக்கு அருகில் இடம்பெற்றது.

ஓய்வு பெறும் படைக்கலச் சேவிதர் நரேந்திர பெர்னாந்துஇவற்றைக் கையளித்தார்.

குஷான் சம்பத் ஜயரத்ன 1994 முதல் 2007 வரை இலங்கை கடற்படையில் பணியாற்றினார். தனது சேவைக்காலத்தில் விசேடமாக அதிவேக தாக்குதல் படைப்பிரிவில் இவர் இணைந்திருந்தார்.

# ரயிலில் ஏற்றப்படும் பொருட்கள், பொதிகளின் கட்டணங்கள் அதிகரிப்பு

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

ரயில்களில் அனுப்பப்படும் பொதிகள் மற்றும் பொருட்களுக்கு இதுவரை காலம் அறவிடப்பட்டு வந்த கட்டணங்கள் நேற்று முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

விசேட வர்த்தமானி அறிவித்தலுக்கிணங்க பார்சல்கள் மற்றும் பொருட்கள் போக்குவரத்து கட்டணங்கள், அதனோடிணைந்த ஏனைய கட்டளைகளுக்கான கட்டணங்களிலும் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதற்கிணங்க இதுவரை காலம் ரயிலில் போக்குவரத்து செய்யப்படும் பார்சல்களின் பாரத்தை அளவிட்டு ரயில் நிலையங்களுக்கிடையிலான தூரத்தையும் கணித்து வற்வரியுடன் அதற்கான கட்டணம் அறவிடப்பட்டது. புதிய கட்டண நடைமுறையின் கீழ், போக்குவரத்து கட்டணத்திற்கு மேலதிகமாக பார்சலில் உள்ள பொருளின் பெறுமதியை அடிப்படையாக வைத்து கட்டணம் அறவிடப்படவுள்ளது.

அந்த வகையில் லொத்தர் சீட்டுக்கள், மருந்து வகைகள், டயர், கண்ணாடி, மின் மற்றும் இலத்திரனியல் உபகரணங்களுக்கான பொதியின் பெறுமதி 0 முதல் 1000 ரூபாய் வரையிலான பெறுமதி கொண்டதாயின் அவற்றுக்கு கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

எனினும், பொதியின் பெறுமதி 1000 முதல் 5000 ரூபா வரையிலானதெனின் 1.5 வீதம் என்பதுடன் 5000 முதல் 10.000 வரையான பெறுமதிக்கு 2.25 வீதம், பார்சலின் பெறுமதி 10.000 ரூபாவிலிருந்து 20.000 ஆயிரம் ரூபாவாக காணப்பட்டால் 3 வீதமாகவும் 20.000ற்கும் அதிகமான பெறுமதியான பார்சலுக்கு 4.5 வீதம் என்ற அடிப்படையிலும் கட்டணம் அறவிடப்படவுள்ளதாக ரயில்வே பிரதி பொது முகாமையாளர் என்.ஜே இடிபொல தெரிவித்துள்ளார்.


## பெறுகை அறிவித்தல்

**வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சு**
**வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்**

**உடவளவ பழக்கப்பட்ட யானை தடுப்பு நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள யானைகளுக்கு இலைக் கொப்புகள் மற்றும் கித்துல் தண்டுகளை கொள்வனவு செய்தல் – 2024**

## விலைமனுக்கோரல்

வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் தலைவரால் உடவளவ யானைகள் தடுப்பு நிலையத்தில் யானைகளுக்கு கீழ்க்காணும் உணவுகளை வழங்குவதற்காக பொருத்தமான கேள்வதாரர்களிடமிருந்து தேசிய போட்டி கேள்வி முறையின் கீழ் பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| கேள்வி இலக்கம் | விடயம் | ஒரு நாளைக்கு தேவைப்படும் கி.கி. (kg) அளவு | வருடாந்த தேவைப்பாடு (பொதுவான) kg | குறைந்தபட்சம் வழங்க வேண்டிய அளவு kg |
|---|---|---|---|---|
| WL/2/17/03/ Leaves/2024 | கித்துல் தண்டுகள் | 500 | 182,500 | ஒரு தொகை குறைந்த பட்சம் எந்த வகையிலும் அல்லது பல வகைகளில் பொதுவாக ஒரு முறையில் குறைந்தபட்சம் 1100 கி.கி. மற்றும் முழு அன்றாட சேகரிப்பு 2100 கி.கி. ஆக இருத்தல் வேண்டும் |
| | கித்துல் கொப்புகள் | 400 | 146,000 | |
| | பலா கொப்புகள் | 400 | 146,000 | |
| | கலப்பு கொப்புகள் (எரபது, கொரக்காய், அம்பரெல்லா, வாழைத்தண்டு, அத்திக்காய், சோள பாகங்கள், போ, கிரிநுக, ஈரம்ப்பலா, போட்டா வெல் மற்றும் பெகேரியா மியுடிகா, Co3, சனல் ரம்புக், பசொவ் போன்ற புல் வகைகள்) குறைந்தபட்சம் இலை கொப்பு வகைகள் மூன்றாவது உட்படுத்தப்படல் வேண்டும் | 400 | 146,00 | |
| | தென்னம் கொப்புகள் | 400 | 146,000 | |

1. பத்தரமுல்ல, ஜயந்திபுர வீதி, இல. 811/ஏ என்ற இடத்தில் வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் (நிதி) இடம் தொ. பே. இல. 011-2871537 கேள்விதாரர்களுக்கு தகவல்களை பெற்றுக் கொள்ள முடிவதுடன் அவ்அலுவலகத்திலேயே வார நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை கேள்வி ஆவணங்களைப் பரீட்சிக்கலாம்.
2. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள கேள்வி ஆவணங்களை வார நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.00 வரை அலுவலக நாட்களில் எழுத்துமூல வேண்டுதலை பணிப்பாளர் (நிதி) இடம் சமர்ப்பித்து மீளளிக்கப்படாத ரூ. 6,650.00 தொகையை தலைமையகத்தின் காசாளரிடம் செலுத்தி 2024.02.21 வரை கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
3. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்கள் 2024.02.22 பி.ப. 2.00 இற்கு முன்பு பத்தரமுல்ல ஜயந்திபுர வீதி, இல. 811/ஏ, வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் (நிதி) அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் அல்லது பதிவுத் தபாலில் அனுப்பலாம். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.
4. கேள்வி ஆவணங்கள் 2024.02.22 பி.ப. 2.00 இற்கு கேள்விதாரர்கள் அல்லது கேள்விதாரர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
5. கேள்வி ஆவணங்களுடன் ரூ. 241,000.00 கொண்ட செல்லுபடியாகும் காலம் 90 நாட்கள் கொண்ட கேள்விப் பிணையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
6. எந்தக் கேள்வியையும் ஏற்றுக் கொள்ளல் நிராகரித்தல் ஒரு பகுதியை ஏற்றுக் கொள்ளல் அல்லது எந்தக் காரணம் கூறாமலேயே நிராகரிக்கும் உரிமை பெறுகைக் குழுவிற்கு உரியது
7. கேள்விகளை தயாரித்தல் ஒப்படைப்பதற்காக கேள்விதாரர்களுக்கு ஏற்படும் செலவுகள் பற்றிய பெறுகைக் குழுவின் தலைவர் பெறுப்புக்கூற மாட்டார்.

**தலைவர் - பெறுகைக் குழு,**
**வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்,**
**இல. 811/ஏ, ஜயந்திபுர வீதி, பத்தரமுல்ல.**

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

சோபகிருது வருடம் தை மாதம் 19ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ரஜப் பிறை 21

### குறள் தரும் சிந்தனை

கோளில் பொறியின் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை

உடல், கண், காது, மூக்கு, வாய் எனும் ஐம்பொறிகள் இருந்தும், அவை இயங்காவிட்டால் என்ன நிலையோ அதே நிலைதான் ஈடற்ற ஆற்றலும் பண்பும் கொண்டவனை வணங்கி நடக்காதவனின் நிலையும் ஆகும்.

# நோயாளர்களைப் பாதிக்கும் தொழிற்சங்க நடவடிக்கைகள்

வடக்கு, கிழக்கு உட்பட நாடெங்கிலும் உள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் நேற்று வேலைநிறுத்த தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. அரசாங்க சுகாதார சேவையைச் சேர்ந்த 72 தொழிற்சங்கங்கள் முன்னெடுத்த இத்தொழிற்சங்க நடவடிக்கையின் விளைவாக வைத்தியசாலைகளின் வழமையான சேவைகள் பெரிதும் பாதிக்கப்பட்டன. குறிப்பாக வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவு, கிளினிக்குகள், தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கான வசதிகளை வழங்குதல் உள்ளிட்ட பல சேவைகளையும் வழமை போன்று வழங்க முடியாத நிலைக்கு வைத்தியசாலைகள் உள்ளாகின.

இந்த வேலைநிறுத்த தொழிற்சங்க நடவடிக்கைகளால் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவுகளும் தங்கியிருந்து சிகிச்சை பெறுபவர்களுக்கு சேவை அளிக்கும் பிரிவுகளும் வழமை போன்று வசதிகளை வழங்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டன. அப்பாவி நோயாளர்கள் வெளிநோயாளர் சிகிச்சை பிரிவுகளிலும் கிளினிக்குகளிலும் சிகிச்சை பெற்றுக்கொள்வதில் நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்தனர்.

இத்தொழிற்சங்க நடவடிக்கையினால் அப்பாவி நோயாளர்கள் பாதிக்கப்படுவதைக் குறைத்துத் தவிர்ப்பதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் சுகாதார அமைச்சு முன்னெடுத்துள்ளது. அந்த அடிப்படையில் நாட்டின் பிரதான வைத்தியசாலைகளில் இராணுவத்தினர் மனிதாபிமான சேவையில் ஈடுபடுத்தப்பட்டனர். இதன் ஊடாக இவ்வேலைநிறுத்த தொழிற்சங்க நடவடிக்கையால் அப்பாவி நோயாளர்கள் சுகாதார சேவைகளைப் பெற்றுக் கொள்வதில் கடும் நெருக்கடிக்கு உள்ளாவது தவிர்க்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

அரசாங்க சுகாதாரத் துறையைச் சேர்ந்த 72 தொழிற்சங்கங்கள் இந்த வேலைநிறுத்த தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்த போதிலும், அப்பாவி நோயாளர்களின் நலன்களை முன்னிலைப்படுத்தி இராணுவத்தினர் மனிதாபிமான சேவைகளை முன்னெடுத்தனர். அவர்களது சேவைகளை மக்கள் பெரிதும் பாராட்டியுள்ளனர்.

அரசாங்க வைத்தியர்களுக்கு வழங்கப்படுவது போன்று தங்களுக்கும் 35 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் என்று கோரியே இத்தொழிற்சங்கங்கள் இவ்வேலைநிறுத்தத் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்துள்ளன.

ஆனால் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளான நாடு, கட்டம் கட்டமாக மீட்சி பெற்று தற்போதுதான் மறுமலர்ச்சிப் பாதையில் பிரவேசித்து இருக்கின்றது. இந்தச் சூழலில் இவ்வாறு அதிகரித்த கொடுப்பனவுக் கோரிக்கையை முன்வைத்து இத்தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருக்கின்றது. இது நியாயமற்றதும் ஏற்றுக்கொள்ள முடியாததுமான கோரிக்கை என்பதுதான் மக்களின் கருத்தாகும்.

பொருளாதார நெருக்கடிக்கு உள்ளானதன் தாக்கங்கள் இன்னும் முழுமையாக நீங்காத நிலை நாட்டில் காணப்படுகிறது. அதன் அழுத்தங்களும் அசௌகரியங்களும் மக்களில் தாக்கம் செலுத்தும் வகையில் உள்ளன. அதனால் பொருளாதார நெருக்கடியில் நாட்டையும் மக்களையும் முழுமையாக மீட்டெடுப்பதற்கான முயற்சிகள் முன்னுரிமை அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இவ்விதமான சூழலில்தான் இவ்வாறான அதிகரித்த தொகைக் கொடுப்பனவு கோரிக்கை சுகாதார அமைச்சின் கீழுள்ள தொழிற்சங்கங்களால் முன்வைக்கப்பட்டிருக்கிறது. அதனை அடிப்படையாகக் கொண்டு வேலைநிறுத்த தொழிற்சங்க நடவடிக்கையும் மேற்கொள்ளப்படுகின்றது.

ஆனால் தொழிற்சங்க நடவடிக்கையொன்றை முன்னெடுப்பதற்கு முன்வைக்கப்படும் கோரிக்கை சம்பந்தப்பட்ட தரப்பினரால் ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவும் நியாயமானதாகவும் இருக்க வேண்டும். இவ்வாறு முன்வைக்கப்படும் கோரிக்கைக்கு அமைய கொடுப்பனவு அதிகரிப்பு மேற்கொள்ளப்படுமாயின் அரசாங்கத்தின் ஏனைய துறையினரும் அதேவிதமான கோரிக்கையை முன்வைக்கப் பின்னிற்க மாட்டார்கள். இதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. அவ்வாறு ஒவ்வொரு துறையினரும் இவ்விதமான கொடுப்பனவு அதிகரிப்பு கோரிக்கையை முன்வைத்தால் நாட்டின் நிலை என்னவாகும்? என்பன குறித்து இவ்விதமான கோரிக்கையை முன்வைக்கும் தொழிற்சங்கங்கள் முன்கூட்டியே எண்ணிப் பார்க்க வேண்டும்.

மேலும் சுகாதார தொழிற்சங்கங்களின் கொடுப்பனவு அதிகரிப்பு கோரிக்கைக்கும் அப்பாவி நோயாளர்களுக்கும் இடையில் நேரடி சம்பந்தம் கிடையாது. மக்களின் வரிப்பணத்தில் முன்னெடுக்கப்படும் சேவைகளில் சுகாதாரத்துறையும் ஒன்றாகும்.

இந்நிலையில் தங்களது கோரிக்கையை அடைந்து கொள்வதற்காக மக்களை பணயக் கைதிகளாக்க தொழிற்சங்கங்கள் முனையலாகாது. அது நியாயமான காரியமும் அல்ல.

அதேநேரம் என்னதான் கோரிக்கை என்றாலும் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடி அவற்றுக்கு நியாயமான தீர்வைப் பெற்றுக்கொள்ளவே முயற்சி செய்ய வேண்டும். அதுவே ஏற்றுக்கொள்ளத்தக்க தொழிற்சங்க தர்மம். அதை விடுத்து அப்பாவி நோயாளர்களை அசௌகரியங்களுக்கும் நெருக்கடிகளுக்கும் உள்ளாக்கும் வகையில் எந்தவொரு தொழிற்சங்க நடவடிக்கையையும் முன்னெடுக்கலாகாது.

ஆகவே சுகாதார தொழிற்சங்கங்கள் நாட்டினதும் மக்களினதும் நலன்களுக்கு முன்னுரிமை அளித்து செயற்பட வேண்டும். அப்போதுதான் எந்தவொரு தொழிற்சங்க நடவடிக்கையும் மக்களால் நியாயமான கண்கொண்டு நோக்கப்படக்கூடியதாக இருக்கும்.

editor.tkn@lakehouse.lk

# மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் கொடியேற்ற உற்சவத்தில் கொல்லிமலை சித்தர் சுவாமிகள்

சித்தர்கள் ஞானபீடம் அறக்கட்டளை மற்றும் பன்னாட்டு கலாசார சர்வசமய ஆய்வுமையம் என்ற அமைப்பின் ஸ்தாபகரான வாழும் கொல்லிமலை சித்தர் சுவாமிகள் இன்று 2 ஆம் திகதி மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான மாசிமக கொடியேற்ற உற்சவத்தில் கலந்துகொண்டு அடியார்களுக்கு அருளாசி வழங்குகின்றார்.

ஆன்மிகமும் பொதுநலத்தொண்டும் சிர மேற்கொண்டு வாழ்ந்து வரும் சித்தர் அவர்கள் தனது சித்தர் பரம்பரையில் 4 ஆவது தலைமுறை சித்தராக பிறந்து வாழ்ந்து வருபவராவார். சித்தர்கள் ஞானபீடம் அறக்கட்டளை ஊடாக அவர் வறிய மக்களுக்கு பல்வேறு உதவிகளைப் புரிந்து வருகிறார்.



தனது பன்னாட்டு கலாசார சர்வசமய ஆய்வுமையத்தின் ஊடாக உலகெங்கும் ஆன்மிக சுற்றுப்பயணம் மேற்கொண்டு 'யாதும் ஊரே யாவரும் கேளீர்' என்ற கோட்பாட்டுக்கமைய தனது ஆன்மீக உபதேசமான 'பிரபஞ்சத்துள் நாம், பிரபஞ்சமே நாம்' என்ற தனது ஆன்மிக கொள்கைகளை உணர்த்தும் வகையில் தனது முத்திரையை பதித்து வருபவர் அவர். பல்லாயிரக்கணக்கான சீடர்களை உலகெங்கிலும் உருவாக்கி, மக்களுக்கு ஆன்மிகக் கருத்துக்களை எளிய முறையில் தன் சித்தர் பாரம்பரிய முறைபடி எடுத்துக்கூறி அனைவரையும் அறவழியிலும் ஆன்மீக நெறியிலும் அழைத்துச் சென்று சிறப்புடன் வாழவைப்பவர். இவரின் நோக்கம், ஒரே உலகம், ஓரே கடவுள், அனைவரும் ஒருதாய் மக்களாய் வாழவேண்டும் என்பதேயாகும்.

இமயமலை, கொல்லிமலை, அகத்தியர் மலை, சஞ்சீவி மற்றும் இந்தியாவிலிருந்து பல்வேறு மலைகளிலிருந்து காணக்கிடைக்காத அரிய சஞ்சீவி மூலிகைகளுடன் இலங்கை வந்திருக்கும் சுவாமிகள் இலங்கை மக்கள் சுபீட்சமாக வாழவும் மனஅமைதி, உடல் ஆரோக்கியம் நீண்ட ஆயுள் பெற்று வாழவும், ஒவ்வொரு மனிதனின் பிறவி இரகசியத்தை அறிந்து அனைத்து பிரச்சினைகளையும் சஞ்சீவி மூலிகை கொண்டும், யாகத்தின் மூலமும், தீர்வு காண செய்கிறார்.

உலக மக்கள் சுபீட்சமாக செல்வச்செழிப்புடன் வாழவும், இலங்கையில் இயற்கை அனர்த்தங்களிலிருந்து மக்களைப் பாதுகாக்கவும், பொருளாதார பிரச்சினையிலிருந்து இலங்கையும் மக்களும் மீள்வதற்கும், இலங்கைவாழ் மக்களுக்கு தெய்வஆசி வேண்டியும், அரிய பெரிய சஞ்சீவி மூலிகைகளை கொண்டு கொழும்பில் யாகங்களை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மக்களின் பிரச்சினைகளைக் கண்டறிந்து அவற்றுக்கு நிரந்தரத்தீர்வு காணவும், வாழும் கொல்லிமலை சித்தர் சுவாமிகளை சந்தித்து அருளாசி பெற விரும்பும் அடியார்கள் 0701998471, 0777318030 ஆகிய எண்களுடன் தொடர்பு கொண்டு முன்பதிவு செய்து கொள்ளலாம்.

**பிரபஞ்ச ஆச்சாரியார்...**
*(வாழும் கொல்லிமலை சித்தர் சீடன்)*

# பாராளுமன்றத்தின் புதிய படைக்கல சேவிதர் கடமைகளை பொறுப்பேற்பு



இலங்கைப் பாராளுமன்றத்தின் 7 ஆவது படைக்கலச் சேவிதராக குஷான் சம்பத் ஜயரத்ன நேற்றுமுன்தினம் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

பாராளுமன்றத்தின் 6 ஆவது படைக்கச் சேவிதராகக் கடமையாற்றிய நரேந்திர பெர்னாந்து ஓய்வுபெற்ற நிலையில், 7 ஆவது படைக்கலச் சேவிதராக குஷான் சம்பத் ஜயரத்ன பொறுப்பேற்றுக் கொண்டார்.

ஓய்வுபெற்ற படைக்கலச் சேவிதர் நரேந்திர பெர்னாந்து புதிய படைக்கலச் சேவிதர் குஷான் சம்பத் ஜயரத்னவுக்கு சம்பிரதாயபூர்வமாக செங்கோல் மற்றும் படைக்கலச் சேவிதரின் வாள் கையளிக்கும் நிகழ்வு பாராளுமன்ற சபை மண்டபத்தின் வெள்ளிக்கதவுக்கு அருகில் இடம்பெற்றது.

குஷான் சம்பத் ஜயரத்ன 1994 ஆம் ஆண்டு முதல் 2007 ஆம் ஆண்டு வரை இலங்கை கடற்படையில் பணியாற்றினார். தனது சேவைக்காலத்தில் விசேடமாக அதிவேக தாக்குதல் படைப்பிரிவில் இணைந்திருந்த அவர், அதற்கு வினைத்திறான சேவையை வழங்கியிருந்தார். இதன் பின்னர் 2007 ஆம் ஆண்டு உதவிப் படைக்கலச் சேவிதராக இலங்கைப் பாராளுமன்ற சேவையில் இணைந்து கொண்டதுடன், 2018 ஆம் ஆண்டு பிரதிப் படைக்கல சேவிதராக நியமிக்கப்பட்டார். இதற்கு அமைய நேற்றுமுன்தினம் வரை குறித்த பதவியில் அவர் பணியாற்றியிருந்தார்.



குஷான் ஜயரத்ன ஹொரகஸ்முல்ல ஆரம்பப் பாடசாலை மற்றும் கிரிஉல்ல விக்ரமஷீலா தேசிய பாடசாலை ஆகியவற்றில் ஆரம்பக் கல்வியைப் பெற்றதுடன், இரண்டாம் நிலைக் கல்வியைக் கொழும்பு நாளந்த கல்லூரியில் பூர்த்திசெய்தார்.

இவர் முகாமைத்துவம் தொடர்பான தனது முதலாவது பட்டத்தை ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பல்கலைக்கழகத்தில் பெற்றுக் கொண்டதுடன், இலங்கை கடற்படையின் 12 ஆவது உள்ளீர்க்கப்பட்ட குழுவின் சிறந்த கடற்படை அதிகாரியாகவும் தேர்ச்சிபெற்றார்.

அத்துடன், அவர் மொரட்டுவை பல்கலைக்கழகத்தில் வணிக முகாமைத்துவம் தொடர்பில் முதுமாணிப் பட்டத்தையும், கொழும்பு பல்கலைக்கழகத்தின் மனிதவள முகாமைத்துவம் தொடர்பான முதுமாணி பட்டத்தையும் பெற்றுள்ளார்.

விசேடமாக ஜயரத்ன மனிதவள முகாமைத்துவப் பட்டத்தில் குழுவின் முதலாவது மாணவராகவும் தேர்ச்சி பெற்றார். அத்துடன், கணினி தொடர்பில் லைசியம் சர்வதேச பாடசாலையிலும், இராஜதந்திரம் மற்றும் சர்வதேச விவகாரம் தொடர்பில் பண்டாரநாயக்க சர்வதேச இராஜதந்திர பயிற்சி நிறுவனத்தில் டிப்ளோமாக்களையும் பூர்த்தி செய்துள்ளார்.

மேலும், பங்களாதேஷில் பிரதி லெப்டினட் தொழில்நுட்ப பாடநெறியையும் பூர்த்தி செய்துள்ளார். குஷான் ஜயரத்ன ரக்பி மற்றும் கிரிக்கெட் ஆகிய விளையாட்டுக்களில் தனது திறமையை வெளிப்படுத்தியுள்ளார்.

முன்பள்ளி ஆசிரியையான டிரோஷி பியன்விலவை மணந்துள்ள இவருக்கு ஒரு மகன் மற்றும் ஒரு மகள் உள்ளனர்.

# மனிதாபிமான ரீதியில் நேசக்கரம் நீட்டும் கிழக்கு புற்றுநோயாளர் பராமரிப்பு நிலையம்

புற்றுநோயினால் பாதிக்கப்பட்டு உடலாலும் உள்ளத்தாலும் வலுவிழந்த தமது கடைசி நிமிடங்களோடு போராடும் அன்பான உறவுகளுக்கு நேசக்கரம் நீட்டி இன்று தேசிய ரீதியில் தனக்கென பெரும் தடயத்தை உருவாக்கியிருக்கிறது கிழக்கு புற்றுநோயாளர் பராமரிப்பு நிலையம் (நுய ளவநசn ஊயnஉநச ஊயசந ர்ழளிi உந).

புற்றுநோயினால் பாதிக்கப்பட்டு தங்களது வீடுகளில் வைத்து பராமரிக்க வசதியற்ற நோயாளர்களுக்கும் புற்றுநோயின் ஆரம்ப நிலையில் சிகிச்சை பெற்று வரும் தூரப் பிரதேச நோயாளர்களுக்கும் கிழக்கு புற்றுநோயாளர் பராமரிப்பு நிலையம் (EASCCA HOSPICE) உதவி புரிந்து வருகின்றது.





**இனமத பேதமற்ற ரீதியில் அரவணைக்கும் EASCCA HOSPICE நிலையம் ஏறாவூரில்**

இந்நோயாளர்கள் தற்காலிகமாகத் தங்கியிருந்து வைத்தியசாலைக்குச் சென்று தமக்குரிய சிகிச்சையை பெற்றுக் கொள்வதற்காக மட்டக்களப்பு ஏறாவூர் பிரதேசத்தில் கிழக்கு புற்றுநோயாளர் பராமரிப்பு நிலையம் தனவந்தர்கள், கொடையாளிகள், புத்திஜீவிகளின் முழுமையான பங்களிப்புடன் இயங்கி வருகிறது.

மட்டக்களப்பு ஏறாவூர் பற்று சவுக்கடி வீதி எனும் பிரதேசத்தில் அமைந்திருக்கும் இந்நிலையம் 2015 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. சுமார் ஏழு கோடி ரூபாவுக்கு மேற்பட்ட நிதியில் அந்நிலையம் அமையப் பெற்றுள்ளது. கடந்த 13.01.2019 இல் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டு நான்கு வருடங்களாக இன மத வேறுபாடில்லாமல் இலங்கையர் யாவருக்குமான தேசிய வேலைத் திட்டத்தினை மையப்படுத்தி இயங்கி வருகிறது.

அந்நிலையம் வரையறுக்கப்பட்ட தேசிய கம்பனியாக பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் இலங்கை புற்றுநோயா ளர்கள் வைத்திய நிபுணர்கள் ஒன்றியத்தின் அனுசரணையுடனும் சுகாதார அமைச்சின் பதிவுச் சான்றிதழுடனும் இந்நிலையம் இயங்கி வருகிறது.

இதன் போசகராக ஜாமிஆ நளீமிஆ இஸ்லாமிய கலாபீடத்தின் முதல்வர் ஏ.ஸீ. அகார் முஹம்மத், ஸ்தாபக தலைவராக டொக்டர் ஏ. இக்பால் பணியாற்றுகின்றனர்.

ஐந்து சமூக நிறுவனங்களின் தலைவராக இருக்கும் எஸ்.எல்.எம். பௌஸ் பொதுச்சபையின் தவிசாளராகவும் பணிப்பாளராகவும் உள்ளார். LOD நிறுவனத்தின் தலைவர் எஸ். ஆப்துல் மஜீட் பணிப்பாளர் சபையின் தவிசாளராக உள்ளார். பணிப்பாளர் குழுமமொன்றும் புத்திஜீவிகள் மற்றும் நிபுணத்துவம் வாய்ந்த ஆலோசனை சபையொன்றும் இந்நிலையத்தினை மிகவும் சிறப்பாக வழிநடத்தி வருகின்றது.

இப்பராமரிப்பு நிலையத்தில் நோயாளர்கள் தனித்தனியான அறைகளில் முற்றிலும் இலவசமாக பராமரிக்கப்படுகிறார்கள். ஆண்களுக்கு வேறாகவும் பெண்களுக்கு வேறாகவுமென விசாலமான விடுதி வசதிகள் இங்கு காணப்படுகின்றன. விசேட தேவையுடைய நோயாளர்களுக்கு தனிப்பட்ட வசதிகளுடன் கூடிய நோயாளர் பராமரிப்பு அறைகள் காணப்படுகின்றன.

நன்கு பயிற்றுவிக்கப்பட்ட தாதியர்களின் கீழ் 24 மணிநேர பராமரிப்புச் சேவைகள் இங்குள்ள நோயாளர்களுக்கு வழங்கப்படுகின்றன. நோயாளர்களை உள ரீதியாக வலுப்படுத்தவும் நம்பிக்கையூட்டவும் ஆலோசனை வழிகாட்டல்களும் இங்கு வழங்கப்படுகின்றன. அதேநேரம் நோயாளர்களுக்கு நாளாந்த வைத்திய பரிசோதனைகளும் இடம்பெற்று வருகின்றன. இங்கு தங்கியிருக்கும் நோயாளர்கள் வார நாட்களில் கதிர் வீச்சு, ஊசி மருந்தேற்றல் சிகிச்சைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு சிகிச்சைகளின் பின்னர் மீண்டும் பராமரிப்பு நிலையத்திற்கு அழைத்து வரப்படுகின்றனர். இதற்காக அம்புலன்ஸ்டன் கூடிய குளிரூட்டப்பட்ட வாகன வசதிகளும் உள்ளன. அவசர சிகிச்சைப் பிரிவும் இங்கு உருவாக்கப்பட்டுள்ளது.

இங்கு பராமரிப்பில் உள்ள நோயாளர்களுக்கு புற்று நோயாளர் பராமரிப்பு நிலையத்தில் உள்ள தோட்டத்தில் இயற்கை முறையில் விளையும் கனி வர்க்கம் காய்கறிகளை உணவுக்காக வழங்குகிறார்கள். இதற்காகவே 5 ஏக்கர் கொண்ட தோட்டம் மற்றும் பண்ணைகள் உருவாக்கப்பட்டு அதன் மூலமாகவே நோயளர்களை நேர்த்தியான முறையில் உபசரித்து வருகின்றார்கள். ஆத்தோடு இங்கு ரம்மியமான சுற்றுச் சூழலும் அழகிய பூங்கா வசதிகளும் நோயாளிகள் தங்கள் கவலைகளை மறந்து சிகிச்சை பெற உதவுகின்றது.

சிறிய உள்ளக விளையாட்டுகளில் ஈடுபடுவதற்கும் ஏற்ற வகையில் பொழுதுபோக்கு மையங்கள் இங்கு அமையப்பெற்றுள்ளன. புற்று நோயால் பாதிக்கப்பட்டு இன்னல்படும் உறவுகளின் நலனுக்காக பொழுதுபோக்கு நிலையமொன்றும் அமையப்பெற்றுள்ளது. இப்பொழுதுபோக்கு கட்டடத்தினுள் தொலைக்காட்சி, கரம்போர்ட், டாம்போட், பெட்மிண்டன் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பொழுதுபோக்கு மையத்திற்கு வெளியில் அமைந்திருக்கும் 'நேச்சர் கோணர்' எனும் பொழுதுபோக்கு மையத்தில் பறவைகள், மீன்தொட்டிகள், முயல்கள் போன்றன காணப்படுகின்றன.

இலங்கையின் நாலாபுறத்திலிருந்தும் இன மத வேறுபாடின்றி ஆயிரத்துக்கும் மேற்பட்ட நோயாளர்கள் இந்நிலையத்தின் மனநிறைவான பராமரிப்பு சேவையினை முற்றிலும் இலவசமாக பெற்றிருக்கிறார்கள். இலங்கையின் எப்பாகத்தைச் சேர்ந்த புற்றுநோயாளர்களுக்கும் முழுக்க முழுக்க இலவசமான சேவைகளை இந்நிலையம் வழங்கி வருகிறது.

அமைதியான இயற்கை சூழலில் நேர்த்தியான கட்டடக் கலை வடிவமைப்புடன் அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய ஓர் நட்சத்திர ஹோட்டல் ஒன்றுக்கு இ ணையாக காட்சியளிக்கும் இந்நிலையத்தில் charity Shop ஒன்றும் அமைந்துள்ளது. இதனால் வரும் சிறிய வருமானம் இந்நிலையத்தின் நிதியத்திற்குச் செல்கிறது. அதேபோல நீடித்து நிலைத்திருக்கும் வருமான மூலமாக sustainable donation முறையும் தற்போது அமைக்கப்பட்டு வரும் சமூக மையக் கட்டடமும் காணப்படுகின்றன. மேலும் சில தனவந்தர்கள் கொடையாளிகள் நிலையத்திலுள்ள நோயாளர்களின் ஒரு நாள் உணவுக்கான செலவை பொறுப்பெடுத்துக் கொள்கின்றனர். இந்நிலையத்திற்கு நன்கொடை வழங்குவதற்கும் ஒரு நாள் உணவுச் செலவை பொறுப்பெடுப்பதற்கும் யாராவது விரும்பினால் இந்நிலையத்தோடு தொடர்பை மேற்கோண்டு மனிதாபிமானப் பணிக்கு பங்களிப்பை நல்கமுடியும்.

கிழக்கு புற்ற நோயாளர் பராமரிப்பு நிலையமானது நோயாளர்களுக்கான பராமரிப்பு நிலையமாக மட்டுமல்லாமல் தாதியர் கல்லூரி மாணவர்கள், மருத்துவபீட மாணவர்கள், சமூகசேவை கற்கைகளை மேற்கொள்ளும் மாணவர்கள் தங்களது கல்வி நடவடிக்கைகளுக்கான பயிற்சிகளை மேற்கொள்ளக்கூடிய ஒரு தளமாகவும் திகழ்கிறது.

**இர்ஷாத் இமாமுதீன்...**
*(கிண்ணியா தினகரன் நிருபர்)*

# ராஜீவ் கொலை வழக்கில் விடுதலையான ரொபர்ட் பயஸ் உண்ணாவிரத போராட்டம்!

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் விடுதலை செய்யப்பட்டுள்ள ரொபர்ட் பயஸ் திருச்சி அகதிகள் சிறப்பு முகாமில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை முதல் காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி வருகிறார்.

தாம் உட்பட சாந்தன், முருகன், ஜெயக்குமாரை இலங்கைக்கு அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரிரொபட் பயஸ் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார். விடுதலை செய்யப்பட்டு ஒன்றரை ஆண்டுகள் ஆனபோதும் சிறை கொட்டகையில் இருந்து விடுவிக்கப்படவில்லை. முகாமில் எனது உரிமைகளுக்கோ, உணர்வுகளுக்கோ எந்த மதிப்பும் இல்லை என திருச்சி மாவட்ட ஆட்சியர் பிரதீப் குமார் மூலமாக முதல்வர் மு. க. ஸ்டாலினுக்கு ரொபட் பயஸ் மனு அனுப்பியுள்ளார்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 32 ஆண்டுகளுக்கு மேலாக சிறைவாசம் அனுபவித்து வந்த நிலையில், ஏறக்குறைய ஒன்றை ஆண்டுகளுக்கு முன்பு உச்சநீதிமன்றத்தால் அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

"ஆனால் சட்டத்தின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டாலும் இன்னும் சிறை வாழ்வில் இருந்து விடுவிக்கப்படவில்லை. சிறப்பு முகாம் எனப்படும் மற்றொரு சிறையில்தான் அடைத்தார்கள்" என அவர் உருக்கமாக எழுதியுள்ளார்.



"திருச்சியில் உள்ள சிறப்பு முகாமில் ரொபர்ட் பயஸ், ஜெயக்குமார், சாந்தன், முருகன் ஆகியோர் அடைத்து வைக்கப்பட்டுள்ளோம். சிறப்பு முகாம் எனப்படுவது சிறையை விட கொடுமையானதாக இருக்கிறது. மேலும் இங்கு நடைப்பயிற்சி செய்வதற்கோ நண்பர்களைப் பார்ப்பதற்கோ முடியவில்லை. சிறைவாசிகளோடு பழகுவதற்கும் கூட எந்தவித அனுமதியும் வழங்கப்படுவதில்லை. சிறப்பு முகாமில் அடைக்கப்பட்ட நாளில் இருந்து பல மாதங்கள் ஆரம்பத்தில் அறையிலேயே தங்க வைக்கப்பட்டதால் பல நோய்களுக்கு உள்ளாகி உள்ளனர். மேலும் எனது உடல் நலத்தை சரி செய்ய நடைப் பயிற்சி செய்ய அனுமதி கேட்டும் இதுவரை எந்த அனுமதியும் வழங்கப்படவில்லை. இதனால் எனது உடலில் பல நோய்கள் வந்துள்ளன.

கடந்த மாதம் திருச்சி அரசு மருத்துவமனை சென்று ஆய்வு செய்தபோது இரத்த அழுத்தம், கொழுப்பு, சிறுநீரகக்கல், மூட்டுவலி இருப்பதாக மருத்துவர்கள் சான்றிதழ் வழங்கியுள்ளார்கள். அதனால் கடந்த 22.1.2024 அன்று மீண்டும் மாவட்ட ஆட்சியருக்கு நடைப் பயிற்சி செய்ய அனுமதி கேட்டு கடிதம் எழுதியும் இதுவரை எந்தவித பதிலும் இல்லை.

இந்த முகாமில் எனது உரிமைகளுக்கோ, உணர்வுகளுக்கோ, எந்த மதிப்பும் இல்லை. அதனால்தான் சாந்தன் உடல்நல குறைபாட்டால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். அதே நிலை தொடர்ந்தால் நாம் இங்கேயே இறப்பது உறுதி. இதற்கு இங்குள்ள அதிகாரிகளே பொறுப்பேற்க வேண்டும். அகதிகள் நேரடியாக பிறநாடு செல்வதற்கு இலங்கை அரசு கடவுச்சீட்டு வழங்கிட அனுமதி வழங்கி வருகிறது. அதற்கு இலங்கை தூதரகம் அழைத்துப் போய் கடவுச்சீட்டு பெறவும் அனுமதி கேட்டுள்ளேன். இதுவரை எந்த பதிலும் கிடைக்காததால் வேறு வழியின்றி காலவரையற்ற உண்ணா மறுப்பு போராட்டத்தை முன்னெடுக்கிறேன்" என்று தன்னுடைய மனுவில் அவர் குறிப்பிட்டுள்ளார்.



# அல்-அக்ஸாவின் மகத்துவம்

இஸ்லாத்தில் ரஜப் மிக முக்கிய மாதங்களில் ஒன்றாகும். இம்மாதத்தில்தான் அல்லாஹ்தஆலாவின் ஏற்பாட்டில் ஜிப்ரீல் (அலை) அவர்கள் முஹம்மத் (ஸல்) அவர்களை இஸ்ரா (இரவு)ப் பயணம் மூலம் மக்காவில் இருந்து ஜெரூஸலத்திலுள்ள பைத்துல் முக்கதிஸுக்கு அழைத்து சென்றார்கள்.

இதனை அல்லாஹ்தஆலா அல் குர்ஆனில், **'(அல்லாஹ்) மிகப் பரிசுத்தமானவன். அவன் (முஹம்மத் ஸல்) என்னும் தன் அடியாரை(க் கஃபாவாகிய) சிறப்புற்ற பள்ளியிலிருந்து (வெகுதூரத்தில் இருக்கும் பைத்துல் முக்கத்திஸிலுள்ள) மஸ்ஜிதுன் அக்ஸாவுக்கு ஒரே இரவில் அழைத்துச் சென்றான். (அவ்வாறு அழைத்துச் சென்ற) நாம் அதனைச் சூழவுள்ளவை சிறப்புற்று ஓங்க அபிவிருத்தி அடையச் செய்திருக்கிறோம். நம்முடைய அத்தாட்சிகளை அவருக்கு காண்பிப்பதற்காகவே (அங்கு அழைத்துச் சென்றோம்). நிச்சயமாக (உங்களது இறைவன்) செவியுறுபவனாகவும் உற்று நோக்கினவனாகவும் இருக்கின்றான் (17:1)** என்று குறிப்பிட்டுள்ளான்.

இவ்வசனத்தின் ஊடாக மாபெரும் உண்மைகளை அல்லாஹ் எடுத்தியம்பியுள்ளான். இற்றைக்கு 1400 வருடங்களுக்கு முன்னர் இப்போது போன்று உலகம் வளர்ச்சி அடைந்திருக்கவில்லை. ஒரு பிரதேசத்தில் இருந்து மற்றொரு பிரதேசத்திற்கு பயணிப்பது என்பது நாட்கணக்கில் மாதக் கணக்கில் செல்ல வேண்டியதாகும். அதுவும் கால்நடையாகவோ அல்லது கழுதை, ஒட்டகம் போன்ற மிருகங்களிலோ தான் பயணிக்க வேண்டும். அவற்றைத் தவிர இப்போது போன்று வாகனங்கள், விமானங்கள் வசதிகள் எதுவும் அன்று இருக்கவில்லை.

அப்படியான ஒரு சூழலில் மக்காவில் இருந்த நபி (ஸல்) அவர்கள் ஒரே இரவில் வெகுதொலைவிலுள்ள பைத்துல் முக்கத்திஸுக்கு அல்லாஹ்வின் ஏற்பாட்டின் ஊடாக அழைத்து செல்லப்பட்டார்கள். இதன் நிமித்தம் புராக் எனும் வாகனம் பயன்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாகனமானது கோவேறு கழுதையைவிடச் சிறியதும் கழுதையை விடப் பெரியதுமான வெள்ளை நிறத்தில் அமைந்த நீளமானது' என்று 'முஸ்லிம்' கிரந்தத்தில் பதிவாகியுள்ளது.

இப்போது போன்று அறிவியல் ரீதியில் வளர்ச்சி அடையாத அன்றைய காலகட்டத்தில் இடம்பெற்ற இச்சம்பவத்தை பலரும் ஆச்சரியத்துடன் நோக்கினார்கள். சந்தேகம் தெரிவித்தார்கள். ஆயிரத்துக்கும் மேற்பட்ட கிலோ மீற்றர்களுக்கு அப்பாலுள்ள ஒரு இடத்திற்கு ஒரே இரவில் சென்று திரும்புவதும் அன்று இலகுவான காரியமாக இருக்கவில்லை. ஆனால் நபி (ஸல்) அவர்கள் மக்காவுக்கும் பைத்துல் முக்கதிஸுக்கும் இடையில் மேற்கொண்ட பயணத்தின் போது தாம் அவதானித்த விடயங்களை எடுத்துக்கூறி தமது பயணத்தின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்தினார்கள். அதன் ஊடாக சந்தேகத்திற்கு இடமின்றி நபி (ஸல்) அவர்களின் இஸ்ரா பயணத்தை ஸஹாபாக்கள் ஏற்றுக்கொண்டனர்.

அதேநேரம் அல்லாஹ்தஆலா, இறைத்தூதர் (ஸல்) அவர்களை நாம் ஏன் இவ்வாறு அழைத்து சென்றோம் என்பதையும் இதே வசனத்தில் குறிப்பிட்டிருக்கின்றான். 'நாம் அதனைச் (பைத்துல் முக்கதிஸை) சூழவுள்ளவை சிறப்புற்று ஓங்க அபிவிருத்தி அடையச் செய்திருக்கிறோம். நம்முடைய அத்தாட்சிகளை அவருக்கு காண்பிப்பதற்காகவே அங்கு அழைத்து சென்றோம்' என்றும் சுட்டிக்காட்டியுள்ளான்.

இதன் ஊடாக மக்காவிலிருந்து பைத்துல் முக்கதிஸுக்கு நபி (ஸல்) அவர்கள் அழைத்து செல்லப்பட்டதன் நோக்கம் தெளிவுபடுத்தப்படுகிறது. அல்லாஹ்வின் அத்தாட்சிகளைக் காண்பிக்க அன்னார் அங்கு அழைத்த செல்லப்பட்டிருக்கிறார். பைத்துல் முக்கதிஸும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களும் அல்லாஹ்வின் அத்தாட்சிகள் நிறைந்தவை என்பதை இவ்வசனம் எடுத்தியம்பப்படுகிறது.

இவ்வாறு மகத்துவம் மிக்க இஸ்ரா பயணமாக அழைத்து செல்லப்பட்ட நபி (ஸல்) அவர்கள் அங்கு சென்றதும் பைத்துல் முக்கதிஸின் கதவில் தாம் பயணித்த வாகனத்தை கட்டி வைத்து விட்டு நபிமார்கள் அனைவருக்கும் இமாமாக நின்று இரண்டு ரக்அத் தொழுகை நடாத்தினார்கள்.

அதன் பின்னர் அங்கிருந்து அல்லாஹ்வை சந்திப்பதற்காக மிஃராஜ் (விண்ணுலக) யாத்திரையை மேற்கொண்டார்கள். இப்பயணத்தின் போது பல நபிமார்களையும் சந்தித்து சென்ற நபி (ஸல்) அவர்களுக்கு நரகம், சுவர்க்கம் காட்டப்பட்டது. ஐம்பது நேரத் தொழுகையையும் அல்லாஹ் வழங்கினான். ஆனாலும் நபிமார்களின் ஆலோசனைகளுக்கு அமைய அதனை ஐந்து நேரத் தொழுகையாக அல்லாஹ்வின் அங்கீகாரத்துடன் குறைத்து பெற்றுக் கொண்ட நபி (ஸல்) அவர்கள் பைத்துல் முக்கதிஸுக்கு திரும்பித் தான் மக்காவை வந்தடைந்தார்கள்.

ஆனால் அல்லாஹ் நாடி இருந்தால் மக்காவில் இருந்த நபி (ஸல்) அவர்களை நேரே மிஃராஜ் மூலம் தன்னிடம் அழைத்திருக்கலாம். அல்லது மிஃராஜ் அழைத்திருந்த நபி (ஸல்) அவர்களுக்கு தொழுகையை வழங்கி நேரே மக்காவுக்கு அனுப்பி இருக்கலாம். அவை எதுவும் அல்லாஹ்வுக்கு முடியாத காரியமல்ல.

அல்லாஹ்வின் அத்தாட்சிகள் பூமியின் பல பிரதேசங்களிலும் நாடுகளிலும் விரவிக் காணப்படுகின்றது. அப்படியிருந்தும் ஜெரூஸலத்திற்கு நபி (ஸல்) அவர்களை அழைத்து சென்றதோடு அல்லாஹ்வை சந்திப்பதற்கான மிஃராஜ் பயணத்தை ஆரம்பிக்கும் பூமியின் தளமாக அல் அக்ஸாவை அவன் நிர்ணயித்ததன் ஊடாக பைத்துல் முக்கதிஸின் முக்கியத்துவம் தெளிவாகிறது.

பைத்துல் முக்கதிஸும் பலஸ்தீனும் இறை நம்பிக்கையின் பூமியுடன் இச்சம்பவத்தின் ஊடாக இணைத்து வைக்கப்பட்டது. இறை நம்பிக்கையுடனும் இறைநம்பிக்கையின் பூமியுடனும் பைத்துல் முக்கதிஸும் பலஸ்தீனும் பிண்ணிப் பிணைக்கப்பட்டிருக்கிறது. இது அல்லாஹ்வின் ஏற்பாட்டின்படி இணைக்கப்பட்டதேயன்றி நபி (ஸல்) அவர்களின் விருப்பத்தில் இடம்பெற்றதல்ல. நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் பயணம் மேற்கொள்ள முன்னரான மக்கா காலத்தில் இறை நம்பிக்கையுடனும் இறைநம்பிக்கை பூமியுடனும் இணைக்கப்பட்ட போதிலும் நபி (ஸல்) அவர்கள் வபாத்தாகி இரண்டாம் கலீபா உமர் (ரழி) அவர்களின் ஆட்சிக் காலத்தில் தான் இஸ்லாமிய ஆட்சியின் கீழ் வந்தது என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் அல்லாஹ்வை வணங்கி வழிபடுவதற்காக பூமியில் நிர்மாணிக்கப்பட்ட இரண்டாவது மஸ்ஜித் தான் பைத்துல் முக்கதிஸாகும்.

ஐவேளைத் தொழுகையை அல்லாஹ்விடம் பெற்று வந்த நபி (ஸல்) அவர்கள் 16, 17 மாதங்கள் பைத்துல் முக்கதிஸை கிப்லாவாக நோக்கியே தொழுகையை நிறைவேற்றினார்கள். அதனையே ஸஹாபாக்களும் பின்பற்றினார்கள். (ஆதாரம்: புஹாரி)

உலகம் இருக்கும் வரையும் பிறக்கும் முஸ்லிம்கள் மூன்று இடங்களுக்கு தான் புனித யாத்திரை மேற்கொள்ள முடியும். அதற்கே இஸ்லாம் அங்கீகாரம் வழங்கியுள்ளது. அவற்றில் ஒன்று மக்காவிலுள்ள கஃபா, இரண்டு மதீனாவிலுள்ள மஸ்ஜிதுன் நபவி, மூன்று ஜெரூஸலத்திலுள்ள அல் அக்ஸா ஆகும். (ஆதாரம்: புஹாரி, முஸ்லிம்) இவற்றைத் தவிர வேறு எந்தவொரு இடத்திற்கும் இறைநம்பிக்கையாளர்கள் புனித யாத்திரை மேற்கொள்ள முடியாது.

அத்தோடு கஃபாவில் நிறைவேற்றப்படும் ஒவ்வொரு தொழுகைக்கும் ஒரு இலட்சம் நன்மைகளும் மஸ்ஜிதுன் நபிவியில் நிறைவேற்றப்படும் ஒவ்வொரு தொழுகைக்கும் ஆயிரம் நன்மைகளும் அல் அக்ஸாவில் நிறைவேற்றப்படும் ஒவவொரு தொழுகைக்கும் 500 நன்மைகளும் கிடைக்கப்பெறும் என்று நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

அதேநேரம் அல் அக்ஸாவை சூழவும் பலஸ்தீனிலும் பல இறைத்தூதர்கள் வாழ்ந்துள்ளார்கள். இறைவழிபாடுகளில் ஈடுபட்டுள்ளார்கள். அடக்கம் செய்யப்பட்டுள்ளார்கள்.

இவ்வாறு சிறப்புக்கள் பெற்று விளங்கும் இம்மஸ்ஜித் குறித்து நபி (ஸல்) அவர்கள் பல சந்தர்ப்பங்களில் சிலாகித்துக் கூறியுள்ளார்கள். இருந்தும் கூட அல் அக்ஸாவின் பெறுமதியும் மகத்துவமும் உணரப்படாத நிலையைப் பரவலாக அவதானிக்க முடிகிறது. ஆகவே அல் அக்ஸாவினதும் பலஸ்தீனினதும் மகத்துவம் சிறப்பு அறிவோம். அவற்றுக்காக அல்லாஹ்விடம் பிரார்த்திப்போம்.

மர்லின் மரிக்கார்...

## ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk



# இஸ்லாமிய சமூகத்தின் பண்புகள்

இஸ்லாமிய சமூகம் நடுநிலைப் பண்பு கொண்டது. இதனை அல் குர்ஆன் 'நீங்கள் மனிதர்களுக்கு சான்று பகர்வதற்காகவும் நபியவர்கள் உங்களுக்கு சான்று பகர வேண்டும் என்பதற்காகவும் நாம் உங்களை நடுநிலைச் சமூகமாக படைத்தோம் (2:143) என்று குறிப்பிடுகிறது.

இது ஒரு கொள்கைச் சமூகமாகும். இச்சமூகத்துக்கு அகீதா என்ற நம்பிக்கை கோட்பாடும் ரிஸாலத் என்ற இறை வழிகாட்டலும் உள்ளன. இது ஒரு இனத்துக்குச் சொந்தமான இனவாத சமூகமோ ஒரு பிரதேசத்துடன் சுருங்கிய பிரதேசவாத அல்லது தேசியவாத சமூகமோ ஒரு மொழியுடன் வரையறுத்துக்கொண்ட மொழிசார்ந்த சமூகமோ அல்ல. மாறாக இது ஒரு சர்வதேச சமூகம். இஸ்லாமிய சமூகத்தை சார்ந்தவர்களில் பல இனத்தவர்கள், பிரதேசத்தவர்கள், நிறத்தவர்கள், பல மொழிகளைப் பேசக்கூடியவர்கள் காணப்படுவார்கள். ஒரே வகையான நம்பிக்கைகளும் (அகீதா) ஒரே வகையான சட்டதிட்டங்களும் (ஷரீஆ) ஒரே வடிவத்திலான பண்பாடுகளும் (கியம்) ஒரே திசையை (கஃபா) நோக்கியும் அவர்கள் இருப்பார்கள்.

இஸ்லாமிய சமூகத்தைச் சேர்ந்தவர்கள் வித்தியாசமான மொழியை பேசுவார்கள். பலதரப்பட்ட இனங்களையும் பிரதேசங்களையும் சார்ந்திருப்பார்கள். எனினும் அவர்களது இணைப்பு மொழியாக அரபு மொழி காணப்படும். அவர்களது வணக்கங்களினதும், அறிவினதும், நாகரிகத்தினதும் மொழியாக அரபு மொழி காணப்படுகிறது. இஸ்லாமிய சமூகத்திற்கு பெரும் பங்களிப்பு வழங்கிய பல மேதைகள் அரபிகளல்லர்.

ஹதீஸ் துறைக்குப் பெரும் பங்காற்றிய இமாம்களான புஹாரி, முஸ்லிம், திர்மிதி போன்றவர்களோ, இஸ்லாமிய சட்டத்துறைக்கு பங்காற்றிய இமாம் அபூ ஹனீபா (ரஹ்) அவர்களோ, அரபு இலக்கணம், அணியிலக்கணம் போன்றவற்றுக்கு பங்களித்த இமாம் ஸீபவைஹி, இமாம் ஸஜ்ஜாஜ் போன்ற மேதைகளோ, அல்குர்ஆனின் மொழியியல் அற்புதத்தை விளக்கிய 'கஷ்ஷாப்' என்ற அல்குர்ஆன் விரிவுரையாளர் இமாம் ஸமக்ஷரீ அவர்களோ அரபிகளல்லர்.

இச்சமூகத்தில் அரேபியர் அரேபியர் அல்லாதோர், வெள்ளையர் கறுப்பர், மேற்கத்தேயர் கிழக்கத்தேயர், ஐரோப்பியர் ஆபிரிக்கர், ஆசியர், அமெரிக்கர், அவுஸ்திரேலியர் என்ற வேற்றுமைகள் கிடையாது. இஸ்லாம் அவர்களை ஒரே வார்த்தையில் இணைக்கிறது. மனிதர்கள் மத்தியில் காணப்படும் பிரிவுகளை நீக்குகிறது. இனவாதம், மதவாதம், குலவாதம், சாதியம், நிறவாதம், மொழிவாதம், பிரதேசவாதம் போன்ற அனைத்து பாகுபாடுகளையும் மறுக்கிறது. அனைவரையும் ஒன்றுபட்ட மனித சமூகமாக நோக்குகிறது. இவர்களுக்கிடையே ஆழமான சகோதரத்துவத்தை ஏற்படுத்த முனைகிறது. இந்த சகோதரத்துவத்தின் அடிப்படையாக ஒரே இறைவன், ஒரே வேதம், ஒரே தூதர், ஒரே வழிகாட்டல் என்ற பிணைப்பு இணைக்கிறது.

இதனையே அல்லாஹ் 'இதுதான் நேரான பாதை. அதனையே பின்பற்றுங்கள். வேறுபட்ட வித்தியாசமான பாதைகளைப் பின்பற்ற வேண்டாம். அது நீங்கள் பயணிக்கவேண்டிய பாதையிலிருந்து உங்களை வேறெங்கோ செலுத்திவிடும். இது உங்களுக்கான உபதேசமாகும். இதன்மூலம் நீங்கள் இறையச்சம் உள்ளவர்களாக மாறலாம் (6:153) என்று குறிப்பிடுகின்றான். ஒரு முஸ்லிம் தனது தாய் நாட்டையோ மக்களையோ நேசிப்பதனை அவற்றை நினைத்து சந்தோசப்படுவதனை சங்கடமான ஒன்றாக கருத மாட்டான். மனிதர்கள் உருவாக்கியுள்ள சில சட்டகங்களான தேசியம், நாடு, இனம் போன்றவற்றை இஸ்லாம் மறுப்பதில்லை. ஒன்றுபட்ட இஸ்லாமிய சமூகம் என்ற கருத்துடன் இவை மோதுவதுமில்லை.

இச்சமூகம் மனிதர்களுக்காக, மனிதர்கள் பயன் பெறுவதற்காக, அவர்கள் நேர்வழியை அடைவதற்காக அவர்களை மகிழ்விப்பதற்காக உருவாக்கப்பட்டதாகும். 'மனிதர்களுக்காக வெளியாகிய சமூகத்திலே நீங்கள்தான் சிறந்த சமூகம்' (3:110) என்று குறிப்பிட்டுள்ள, அல்லாஹ், 'நன்மையை ஏவுவதிலும் தீமையை தடுப்பதிலும் அல்லாஹ்வை நம்புவதிலும்தான் (இச்சமூகத்தின் சிறப்பு) இருக்கிறது' (3:110) என்றுள்ளான்.

இச்சமூகம் தெய்வீக வழிகாட்டலைச் சார்ந்துள்ள மானுடப்பண்புள்ள பண்பாடுகளை மேலாகக் கருதுகின்ற சர்வதேச சமூகமாகும். இச்சமூகத்துக்கான வழிகாட்டல்களை இரண்டு விடயங்களின் மூலம் சுருக்கமாக குறிப்பிடலாம். ஒன்று அல்லாஹ்வை நம்பிக்கை கொள்வதாகும். அடுத்தது மனித குலத்தை சத்தியம் மற்றும் நல்ல விடயங்களின்பால் அழைப்பதாகும். இதனையே அல்குர்ஆன் 'நன்மையை ஏவி தீமையை தடுத்தல்' என்று குறிப்பிடுகிறது. 'நன்மை' என்பது செறிவான கருத்துள்ள ஒரு சொல்லாகும். நம்பிக்கைகளில் சத்தியத்தைப் பேணுதல், பேச்சில் உண்மையைக் கடைப்பிடித்தல், கருத்துக்களில் சரியானதைப் பின்பற்றல், செயல்பாடுகளில் நல்லவற்றை செய்தல், நடவடிக்கைகளில் சாதுர்யமாக நடந்துகொள்ளல் போன்ற கருத்துக்களை இது தருகின்றது. 'தீமை' என்பது இவற்றின் மறு வடிவமாகும். அசத்திய நம்பிக்கைகளும் பொய்யான பேச்சுக்களும் மயக்கமான பிழையான கருத்துக்களும் தீங்கான செயல்பாடுகளும் வழிகேடான நடவடிக்கைகளும் இதில் உள்ளடங்குகிறது.

அப்போதுதான் குறைகள் நிறைகளாக மாற்றமடையும். சீர்கெடுக்கப்பட்டவைகள் சீர்படுத்தப்படும். 'உங்களில் ஒரு சமூகம் நல்லவற்றின்பால் அழைப்பு விடுத்துக் கொண்டும் நன்மைகளை ஏவிக்கொண்டும் தீமைகளை தடுத்துக்கொண்டும் இருக்கட்டும். அத்தகையவர்கள்தான் வெற்றியாளர்கள். (3:104)

இச்சமூகம் வரலாறு நெடுக பல சோதனைகளுக்கு முகம்கொடுத்துள்ளது. என்றாலும் அப்துல் காதிர் ஜீலானி, அபூ ஹாமித் அல் கஸ்ஸாலி, இமாதுத்தீன் ஸன்கீ, நூருத்தீன் ஸன்கீ, ஸலாஹுத்தீன் ஐயூபி, ஸைபுத்தீன் குத்ஸ் போன்றவர்கள் மரணித்திருந்த சமூகத்தை உயிர்ப்பித்து இருக்கிறார்கள். சிதறியிருந்தவர்களை திரட்டிவிட்டார்கள். சமூகத்திடம் சக்தியும் உயிரோட்டமும் மீள ஏற்பட்டுவிட்டது.

இன்று வேறுவகையான சவால்களை முஸ்லிம் சமூகம் எதிர்கொண்டுள்ளது. சமூகத்தை சார்ந்தவர்களின் துணையுடன் உள்ளேயிருந்து உடைக்கப்பார்க்கிறார்கள். அதன் தனித்துவத்தையும், நம்பிக்கைகளையும் மாற்ற முனைகிறார்கள். இத்தகைய சவால்களை ஒற்றுமையின் மூலம்தான் வெற்றிகொள்ளலாம். இஸ்லாத்தை நாம் ஒன்றுபட்டுக் கடைப்பிடிக்க வேண்டும். 'நாங்கள் இழிவான ஒரு சமூகமாக இருந்தோம். இஸ்லாத்தின் மூலம் அல்லாஹ் எங்களை கண்ணியப்படுத்தினான். அதுவல்லாத ஒன்றின்மூலம் கண்ணியத்தை எதிர்பார்த்தால் எம்மை அல்லாஹ் இழிவாக்கிவிடுவான்' என்ற உமர் (ரழி) அவர்களின் கூற்று இங்கு ஞாபகப்படுத்தத்தக்கது. (ஆதாரம் தபரானி)

'இச்சமூகத்தில் முன்னால் வந்தவர்களை சீர்படுத்திய விடயங்கள்தான் பின்னால் வருகின்றவர்களையும் சீர்படுத்தும். ஆரம்பத்தில் வந்தவர்களை அல்குர்ஆனும் நபிகளாரின் வழிமுறைகளும் 'நீங்கள் அனைவரும் அல்லாஹ்வின் கயிற்றை பற்றிப்பிடித்துக்கொள்ளுங்கள். பிரிந்துவிட வேண்டாம்' (3:103) என்ற கோஷமும்தான் சீர்படுத்தியது' என்றால் அது மிகையாகாது.

அஷ் ஷெய்க் யூ.கே றமீஸ்...
எம்.ஏ. (சமூகவியல்)

# பிறருக்கு நன்மைகள் செய்வோம்!



இஸ்லாம் இறை வணக்கத்திலும் பிறருக்கு நன்மைகள் செய்வதிலும், தான தர்மங்கள் செய்வதிலும், போட்டி போடுவதைத் தான் எதிர்பார்க்கிறது. சிலர், தான் மட்டுமே நன்றாக வாழ வேண்டும். மற்றவர்கள் எப்படிப்போனாலும் கவலையில்லை என்ற கருத்தைக் கொண்டுள்ளனர். இன்னும் சிலர் இதையும் தாண்டி பொறாமை எண்ணம் கொண்டவர்களாக இருப்பார்கள். இவ்வாறான எதிர்மறை எண்ணத்தை இஸ்லாம் தடை செய்கிறது.

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், நீங்கள் வாழ்வதற்குப் பிறர் வீழ வேண்டுமெனப் போட்டியிட்டுக் கொள்ளாதீர்கள்' என கூறினார்கள். (ஆதாரம்: முஸ்லிம்)

எமக்கு எதுவெல்லாம் நடக்கக்கூடாது என நாம் நினைப்போமோ, அது மற்றவருக்கும் நடக்கக்கூடாது என்ற எண்ணம் இருக்க வேண்டும். எதிரிக்கு பதிலுக்குப் பதிலடி கொடுப்பதினால் அவனை வென்று விட முடியாது. அவனுக்கும் நன்மை செய்வதன் மூலம் அவனை வெல்ல வேண்டும்.

இது தொடர்பில் அல் குர்ஆன், 'நன்மையும் தீமையும் சமமாகாது. நீர் தீமையை மிக அழகியதைக் கொண்டு தடுத்துக் கொள்வீராக. அப்பொழுது, எவருக்கும் உமக்குமிடையே பகைமை இருந்ததோ, அவர் உற்ற நண்பரைப் போல் ஆகிவிடுவார் (41:34) என்று குறிப்பிட்டுள்ளது.

போட்டி, பொறாமை என்பதெல்லாம் பணத்திலோ, பதவி சுகத்திலோ, பழிவாங்கும் தன்மையிலோ, தீயசெயல்களிலோ இருக்கக்கூடாது. போட்டி என்பது நன்மையான காரியங்களில் அமைய வேண்டும். இத்தகைய போட்டியைத்தான் இஸ்லாம் ஊக்குவிக்கிறது.

இது குறித்து நபி (ஸல்) அவர்கள் குறிப்பிடும் போது, இரண்டு விஷயங்களைத் தவிர வேறு எதற்காகவும் போட்டி , பொறாமைப்படக்கூடாது. அவை: 1) ஒரு மனிதருக்கு அல்லாஹ் குர்ஆ னின் ஞானத்தை வழங்கினான். அதை அ வர் அல்லும் பகலும் ஓதி (அதன் படி செயல்பட்டு) வருகிறார். இதைக்கண்ட மற்றொருவர், 'இவ ருக்கு வழங்கப்பட்டதைப் போன்றே எனக்கும் வழங்கப்படுமானால் இவரைப் போன்றே நானும் செயல்படுவேனே' என்று ஆதங்கத்துடன் கூறினார். 2) மற்றொருவருக்கு அல்லாஹ் செல்வத்தை வழங்கினான். அவர் அதை உரிய வழியில் செலவிடுகிறார். இதைக் காணும் மற்றொருவர், இவருக்கு வழங்கப்பட்டதைப் போன்று எனக்கும் வழங்கப்பட்டால், இவரைப் போன்றே நானும் செயல்படுவேன்' என்கிறார். (ஆதாரம்: புஹாரி)

நபித்தோழர்களான அபூபக்கர் (ரழி), உமர் (ரழி) இடையே நன்மை செய்வதில் போட்டி இருந்தது. இதுபற்றி உமர் (ரழி) அவர்கள் குறிப்பிடும் போது, 'ஒரு நாள் நபி (ஸல்) அவர்கள் எங்களுக்கு தர்மம் செய்வது குறித்து ஏவினார்கள். செல்வம் என்னிடம் நிறைவாக இருந்ததால் இது எனக்கு ஒரு வாய்ப்பாக அமைந்துவிட்டது. இதுவரைக்கும் நான் அபூபக்கர் (ரழி) அவர்களை எந்த நன்மையிலும் முந்த முடியவில்லை. இன்றைய தினம் நான் போட்டி போட்டு, கூடுதலாக தர்மம் செய்து முந்திவிட வேண்டி, நபியவர்களிடம் எனது சொத்தில் சரி பாதியை கொண்டு வந்து கொட்டினேன். அதற்கு நபி (ஸல்) அவர்கள், 'நீர் உமது குடும்பத்தாருக்கு என்ன விட்டு வந்தீர்?' என கேட்க... 'நான் பாதி சொத்தை விட்டு வந்துள்ளேன்' என்று கூறினேன். பிறகு, அபூபக்கர் (ரழி) தம்மிடமுள்ள அனைத்தையும் நபியிடம் கொண்டு வந்து கொடுத்தபோது, 'நீர் உமது குடும்பத்தாருக்கு என்ன விட்டு வந்தீர்' என நபி (ஸல்) கேட்டதும் 'நான் இறைவனையும், இறைத்தூதரையும் மட்டுமே மிச்சம் வைத்து வந்துள்ளேன்' என்றார். இதைப் பார்த்த உமர் (ரழி), அபூபக்கர் (ரழி) அவர்களைப் பார்த்து 'நான் எதிலும் எப்போதும் உம்மை முந்திவிட முடியாது' என்றார். (நூல்: திர்மிதி)

ஆகவே இஸ்லாமிய வழிகாட்டல்களுக்கு அமைய இறைவிசுவாசிகள் வாழ்வொழுங்கை அமைத்துக் கொள்ள வேண்டும். அது மிகவும் இன்றியமையாததாகும்.

மின்ஸார் இப்றாஹிம்...

# விவசாய, கைத்தொழில் துறையை மீளக் கட்டியெழுப்புவது அவசியம்

யாழ்ப்பாணம் மற்றும் வலிகாமம் வடக்கு தெல்லிப்பளை பிரதேச அபிவிருத்தி குழுக் கூட்டம் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவர் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையில் வலிகாமம் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இக்குழு கூட்டத்தில் குறிப்பாக 2024 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்ட பன்முகப்படுத்தப்பட்ட நிதியை உபயோகித்து நடைமுறைப் படுத்தவுள்ள அபிவிருத்தி திட்டங்களை இணங்காணுதல் மற்றும் அது தொடர்பில் பேச்சுவார்த்தை



நடத்துவதில் கவனம் செலுத்தப்பட்டது.

இதன் போது கருத்து தெரிவித்த அமைச்சர்;

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்படும் பன்முகப்படுத்தப்பட்ட நிதி, பல வருடங்களுக்குப் பின்னர் இம்முறை வரவுசெலவு திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளது. இந்நிதியை உபயோகித்து தற்போது வீழ்ச்சியடைந்துள்ள நாட்டின் பொருளாதாரத்தை மீள கட்டியெழுப்புவதற்கான விவசாய மற்றும் கைத்தொழில் திட்டங்களை ஆரம்பிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்படுவது அவசியமாகும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

# கொழும்பு ஊடகவியலாளர் நட்புறவு கிரிக்கெட் போட்டி

கொழும்பு ஊடகவியலாளர்கள் சங்கத்தினால் வருடாந்தம் நடாத்தும் "கொழும்பு ஊடகவியலாளர் நட்புறவு கிரிக்கெட் போட்டி" இரண்டாவது தடவையாக நாளை சனிக்கிழமை (03) பிடகோட்டையிலுள்ள அங்கம்பிட்டிய விளையாட்டு மைதானத்தில் காலை 7 மணிக்கு ஆரம்பமாகி மாலை வரை நடைபெறவுள்ளது. சங்க உறுப்பினர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் நட்புறவை வளர்க்கும் நோக்கில் இது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதோடு மாலை பரிசளிப்பு விழாவும் இடம்பெறவுள்ளது.

# இன்றைய பலன்கள்

(02.02.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
சொந்த தொழிலில் புதிய வாடிக்கையாளர் வருகையும் அவர்களால் வருமானமும் கிடைக்கும். ஒரு சிலர் கொடுத்த வாக்கை காப்பாற்ற முடியாமல் பிரச்சினைகளையும் சந்திக்க நேரிடும்.



**ரிஷபம் :**
கூட்டுத்தொழில் வியாபாரத்தில் முன்னேற்றமான போக்கு காணப்படும். தொழில் வளர்ச்சியில் நல்ல திருப்பங்களை காண்பீர்கள்.



**மிதுனம்:**
வருமானம் எதிர்பார்க்கும் அளவுக்கு கிடைக்காது. கூட்டுத் தொழிலில் மூலப்பொருட்கள் பற்றா குறையால் தொழில் முன்னேற்றம் தடைப்படும்.



**கடகம்:**
கூட்டுத் தொழில் முயற்சியின் வியாபாரம் சுமாராக நடைபெற்றாலும் வளக்கமான லாபம் குறையாது. தொழில் போட்டிகளை சமாளிக்க கூட்டாளிகளுடன் ஆலோசிப்பீர்கள்.



**சிம்மம்:**
பணியாளர்களின் குறைகளை நிவர்த்தி செய்ய கூட்டாளிகளுடன் கலந்து பேசுவீர்கள். குடும்பத்தில் அமைதி நிலவும்.



**கன்னி:**
சொந்தத் தொழில் செய்பவர்களுக்கு புது ஒப்பந்தங்கள் மூலம் வேலைப்பழு அதிகரிக்கும். மூலப்பொருட்கள் வாங்கி சேர்ப்பீர்கள்.



**துலாம்:**
புதிய வாடிக்கையாளரால் தொழில் ரீதியான முன்னேற்றம் ஏற்படலாம். கூட்டு தொழில் செய்பவர்கள் வியாபாரத்தில் அதிக லாபம் பெறுவார்கள்.



**விருச்சிகம்:**
கூட்டுத் தொழில் வியாபாரத்தில் வழக்கமான லாபம் காணப்படும். பணியாளர்களை அடிக்கடி கண்காணித்து அவர்களுக்குள் நிலவும் மன வேறுபாடுகளை அகற்றுவீர்கள்.



**தனுசு:**
கூட்டு வியாபாரம் சுமாராக நடைபெற்றாலும் வழக்கமான லாபம் குறையாது. குடும்பத்தில் சிறு சிறு பிரச்சனைகள் தோன்றி மறையும்.



**மகரம்:**
கூட்டு வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் காணப்படும். நிலுவையில் இருக்கும் பணத்தை வசூலிக்க முயற்சி செய்வீர்கள்.



**கும்பம்:**
வாடிக்கையாளர்களின் திருப்தி மகிழ்ச்சி தருவதாக இருக்கும். கூட்டுத் தொழில் செய்பவர்கள் வியாபாரத்தில் வருமானத்தை பெருக்க கூட்டாளிகளுடன் கூடி ஆலோசிப்பீர்கள்.



**மீனம்:**
கூட்டுத் தொழில் வியாபாரம் வழக்கம்போல் நடைபெறும். வாடிக்கையாளர்களிடம் உள்ள பணத்தை வசூலிக்க முயற்சிப்பீர்கள்.



## சுகாதார சேவையில்...

நோயாளர்களின் நலன்கருதி சுகாதார சேவைகளை சுமுகமாக முன்னெடுத்துச் செல்வதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

சுகாதாரத்துறை தொழிற்சங்கங்கள் நேற்றுக் காலை 6.30 மணி முதல் வேலை நிறுத்த போராட்டமொன்றை ஆரம்பித்துள்ளன. மருத்துவர்களுக்கு வழங்கப்படும் 35 ஆயிரம் ரூபா கொடுப்பனவை தமக்கும் வழங்குமாறு கோரியே, இப்போராட்டத்தை ஆரம்பித்ததாக தொழிற்சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. அதே வேளை, நாடளாவிய ரீதியில் 72 சுகாதாரத்துறை தொழிற்சங்கங்களின் ஊழியர்கள் நேற்று மேற்கொண்ட இப்போராட்டத்தால், தடைப்பட்டிருந்த சுகாதார சேவை நடவடிக்கைகளை தடையின்றி முன்னெடுப்பதற்கு தேவையான வகையில் படையினரை சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுத்ததாக இராணுவத் தளபதி விக்கும் லியனகே தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க மேற்கு, கிழக்கு, மத்திய மற்றும் வன்னி பாதுகாப்புப் படைத் தலைமையக தளபதிகளின் மேற்பார்வையில் கொழும்பு மற்றும் கண்டி தேசிய வைத்தியசாலைகள், களுபோவில, காலி கராப்பிட்டிய, மஹாமோதர, பேராதனை, அனுராதபுரம் மற்றும் குருநாகல், மாத்தறை, பலாங்கொடை, எஹேலியகொட, நாவலப்பிட்டி, பதுளை, கம்பளை, மீரிகம, ஹோமாகம மற்றும் கேகாலை உட்பட 26 வைத்தியசாலைகளில் படையினர் அன்றாட சுகாதார சேவை நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

தற்போது மேற்படி வைத்தியசாலைகளில் தேவைக்கு ஏற்ப, சுமார் 700 இராணுவத்தினர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அவசர நிலை ஏற்பட்டால் மேலதிக படையினரை அனுப்புவதற்கும் தயார் நிலையில் உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## நாட்டின் அபிவிருத்தி...

தெரிவித்தார். இங்கு மேலும் கருத்து தெரிவித்த இராஜாங்க அமைச்சர்,

"ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் வெளிநாட்டு அமைச்சர் ஆகியோர் சுவிட்சர்லாந்து டாவோஸ் நகரில் நடைபெற்ற உலக பொருளாதார மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்றிருந்தனர். அங்கு வர்த்தகச் சமூகத்தையும் சந்தித்தனர். இலங்கையை மீளக் கட்டியெழுப்புவது தொடர்பிலான தீர்க்கமான பேச்சுவார்த்தைகள் அங்கு முன்னெடுக்கப்பட்டன. இலங்கைக்கு முதலீட்டாளர்களை அழைத்து வருவது தொடர்பிலும் அங்கு பேசப்பட்டது.

அதேபோல், உகண்டாவின் கம்பாலா நகரில் நடைபெற்ற அணிசேரா மாநாட்டில் உலகின் செல்வந்த நாடுகளுடன் செயலாற்றும் விதம் குறித்து ஜனாதிபதி தெளிவுபடுத்தினார். 2050 உலக பொருளாதாரத்திற்கு ஏற்ற வகையில், இலங்கை பொருளாதாரத்தில் ஏற்படுத்த வேண்டிய மாற்றங்கள் குறித்தும் அங்கு அவர் கலந்துரையாடியிருந்தார்.

பின்னர் G77 மற்றும் சீன தென் துருவ மாநாட்டில் பங்கேற்றிருந்த ஜனாதிபதி, காலநிலை அனர்த்தங்கள் மற்றும் தொற்றுநோய் நிலைமைகளுக்கு முகம்கொடுப்பது பற்றிக் கலந்துரையாடினார். மட்டுமன்றி பசுமை பொருளாதாரத்திற்கான மாற்றம் தொடர்பிலும் ஆலோசிக்கப்பட்டது.

ஜனாதிபதியின் வெளிநாட்டுச் சுற்றுப் பயணங்கள் தொடர்பில் முன்வைக்கப்படும் விமர்சனங்கள் ஆதாரமற்றவையாகும். இவ்வாறான சர்வதேச மாநாடுகளில் பங்கேற்பதால் உலக நாடுகளுக்கும் எமக்கும் இடையிலான தொடர்புகள் பலப்படுகின்றன.

## அமைச்சர் கெஹெலியவுக்கு...

தினம் (02)அமைச்சர் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் ஆஜராக வேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அதேவேளை, முன்னாள் சுகாதார அமைச்சரான அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல சி.ஐ.டி.யினரின் விசாரணைக்கு செல்லாமைக்கான காரணம் தொடர்பில் ஆராய்வதற்கு நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது. அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவுக்கு நேற்று முன்தினம் சி.ஐ.டி.யில் ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த அந்த நேரத்தில் அவர், வேறு நீதிமன்ற வழக்கு தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தாரா என்பது தொடர்பில் ஆராயுமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

முன்னாள் சுகாதார அமைச்சரான அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவை கடந்த (31) காலை 9 மணிக்கு குற்றத்தடுப்பு விசாரணை திணைக்களத்தில் ஆஜராகுமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் அவர் வேறு ஒரு வழக்கு விடயமாக மேல் நீதிமன்றத்திற்கு அந்நேரத்தில் சென்றிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் உண்மை நிலையை ஆராயுமாறு அந்த அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. அந்த வழக்கு காரணமாக அவரால் குற்றத்தடுப்பு விசாரணை திணைக்களத்துக்கு வரமுடியாமல் போனதா என்பது தொடர்பில் தற்போது விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சம்பந்தப்பட்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

## தாய்லாந்து பிரதமரின்...

இரண்டு நாள் இலங்கை விஜயம் திடீரென அவருக்கு ஏற்பட்டுள்ள சுகவீனம் காரணமாக ஒரு நாள் விஜயமாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எவ்வாறெனினும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பின் பேரில் தாய்லாந்து பிரதமர் சுதந்திர தின விழா நிகழ்வில் கலந்து கொள்வார் என்றும் அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இன, மத பேதங்களின்றி உலகின் முன்னிலையில் இலங்கையை சிறந்த முறையில் முன்னேற்றும் வகையில் அரசியல், சமூக, பொருளாதார ரீதியில் சிறந்த சகவாழ்வை கட்டியெழுப்பும் வகையில் இலங்கை மற்றும் தாய்லாந்துக்கிடையில் இரு தரப்பு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்படவுள்ளமை அவரது வருகையின் முக்கிய நோக்கமாகும் என்றும் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## நிகழ்நிலை காப்பு சட்டம்...

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன மேற்படி நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்தில் கையொப்பமிட்டு சான்றுரைப்படுத்தியதையடுத்து நேற்று முதல் அந்த சட்டம் நடைமுறைக்கு வருகிறது. மேற்படி சட்டமூலம் ஜனவரி மாதம் 23 மற்றும் 24 ஆம் திகதிகளில் பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டது.

இந்த வகையில் நேற்று சபாநாயகர் அந்த சட்ட மூலத்தை சான்றுரைப் படுத்தியதால், அந்த சட்டமூலம் 2024 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க நிகழ்நிலைக் காப்புச் சட்டமாக நடைமுறைக்கு வருகிறது. அத்துடன், பாராளுமன்றத்தில் விவாதம் நடத்தப்பட்டு திருத்தங்களுடன் கடந்த ஜனவரி 09 இல், நிறைவேற்றப்பட்ட தேசிய நீரளவை சட்டமூலம் மற்றும் ஜனவரி மாதம் 10 இல், நிறைவேற்றப்பட்ட நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனமொன்றை அவமதித்தல் சட்டமூலம் ஆகியவற்றிலும் சபாநாயகர் தனது கையொப்பத்தையிட்டு சான்றுரைப் படுத்தியுள்ளார்.

இதற்கமைய மேற்படி சட்டமூலங்கள் 2024 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க தேசிய நீரளவை சட்டம் மற்றும் 2024 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனமொன்றை அவமதித்தல் சட்டமாக நடைமுறைக்கு வருகின்றன.

## தமிழரசுக் கட்சி...

இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார். தேசிய மாநாட்டையொட்டி கடந்த (27) இடம்பெற்ற மத்திய செயற்குழு கூட்டத்தில், எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பிலும் அக்கடிதத்தில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை தமிழரசுக் கட்சி வரலாற்றில் வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்யப்பட்ட தலைவர் என்ற அடிப்படையில், பதவியேற்வு விழா வைபவ ரீதியாக நடைபெற வேண்டியது கட்டாயமானது என்றும் சுமந்திரன் எம்பி,சுட்டிக்காட்டியுள்ளார்.

மக்கள் மத்தியில் உள்ள சந்தேகங்களுக்கும் விமர்சனங்களுக்கும் முற்றுப்புள்ளி வைக்கும் வகையில், காலம் தாழ்த்தாது பகிரங்க பொது நிகழ்வை நடத்துமாறும் அக்கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது.

## கடவுச்சீட்டு கட்டணங்கள்...

தெரிவித்துள்ளது. இதேவேளை, புகையிரதத்தில் கொண்டு செல்லப்படும் பொருட்கள் மற்றும் பொதிகளுக்கான விலைக் கட்டணங்களும் நேற்று முதல் அமுலுக்கு வரும் வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதன்படி, 50 ரூபாவாக இருந்த குறைந்தபட்ச கட்டணம் 150 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளதாக புகையிரத போக்குவரத்து பிரதி பொது முகாமையாளர் என்.ஜே. இடிபொல தெரிவித்தார்.

## ஆறு மாவட்டங்களில்...

உட்பட்ட பகுதிகளுக்கு, இரண்டாம் நிலை மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுக்கப்படுவதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மின் இணைப்பை பெறுவோருக்கு...

விஜேசேகர தெரிவித்துள்ளார். அதேவேளை மின்சார சபையினால் மக்களுக்கு வழங்கப்படும் ஏனைய சேவைகளிலும், இதுபோன்று தவணை முறை பணம் செலுத்தல் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் வகையில் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த தவணை முறை பணம் செலுத்தல் வசதிகள் துரிதமாக நடைமுறைப்படுத்தப்படுவதுடன், இது தொடர்பில் விரைவில் அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். அமைச்சின் அதிகாரிகள் மற்றும் பெற்றோலியக் கூட்டத்தாபன அதிகாரிகள், மின்சார சபை அதிகாரிகள், உள்ளிட்ட அமைச்சின் கீழ் வரும் நிறுவனங்களின் அதிகாரிகளுடன் அமைச்சில் மேற்கொள்ளப்பட்ட விசேட பேச்சு வார்த்தையிலேயே, அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இந்த வருடத்தின் மின்சார உற்பத்தி திட்டம், மின் கட்டண அறவீடு, சேவைகளுக்கான செலவு, மின்சார உற்பத்திக்கு தேவையான எரிபொருளுக்கான செலவு உள்ளிட்ட முக்கிய பல விடயங்கள், இந்த பேச்சு வார்த்தையில் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளதாக மின்சார சபை அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

## அமெரிக்க சட்டங்களுக்கு இணங்க...

இணக்கப்பாட்டை வெளியிட்டுள்ளனர். மேடா (Metaஆநவய), டிக்டொக் (Tiktok ) ஸ்னெப் (sna ) டிஸ்கோர்ட் (discord ) மற்றும் டுவிட்டர் (twitter ) என இனங்காணப்படும் தற்போதைய எக்ஸ் (x ), உள்ளிட்ட பிரதான சமூக ஊடக நிறுவனங்கள் ஐந்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நிறைவேற்று அதிகாரிகள் அமெரிக்க காங்கிரஸ் சபை நீதிமன்றக் குழுவிடம்

நேற்று முன்தினம் அழைக்கப்பட்டு, இதன் நடவடிக்கைகள் தொடர்பில் வினவியபோதே மேற்படி அதிகாரிகள் தமது இணக்கப்பாட்டை வெளியிட்டுள்ளனர்.

சமூக ஊடகங்களில் நிலவும் பாதுகாப்பற்ற நிலைமை காரணமாக சமூகத்துக்கு ஏற்படும் பாதிப்புகள் மற்றும் அழுத்தங்களை நிறுத்துவதற்கு சம்பந்தப்பட்ட நிறுவனத்தினால் முடியாமற் போனதாலேயே, இது தொடர்பில் இவர்கள் வினவப்பட்டனர்.

மேற்படி குழுவில் சமூக ஊடகங்களின் மூலம் பல்வேறு தரப்பினருக்கும் ஏற்படும் பாதிப்புகளை இல்லாதொழிப்பதற்கு இவர்களால் சுயாதீனமாக முடியாமற் போயுள்ளதால் எதிர்காலத்தில் அமெரிக்க அரசாங்கம் மேற்கொள்ளும் சட்டங்களுக்கு இணக்கம் தெரிவிப்பதாக இந்நிறுவனங்களின் தலைவர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

## தேசிய கட்டமைப்புக்கு...

தேசிய நோக்கத்துக்கு தங்கள் ஆதரவை வழங்கியுள்ளதாகவும் சபை தெரிவித்துள்ளது. மின்சாரத்தைப் பயன்படுத்தும் பாரம்பரிய முறைக்குப் புறம்பாக புதிய தொழில்நுட்ப அனுபவத்தைப் பெற்று, மின்சாரத்தை தேசிய கட்டமைப்புக்கு விற்பனை செய்யும் நோக்கின் பக்கம் நுகர்வோர்கள் திரும்பியிருப்பது பாராட்டத்தக்கது.

(நுகர்வோரில் இருந்து ப்ரோசூமருக்கு / நுகர்விலிருந்து மின்சார உற்பத்திக்கு மாறுதல்). பல்வேறு பொறியியல் மற்றும் தொழில்நுட்ப சிக்கல்களுக்கு தீர்வுகளை வழங்குவதன் மூலம், சோலார் பேனல் அமைப்புகளை தேசிய கட்டமைப்பில் சிறந்த முறையில் சேர்க்கும் பணியில் ஈடுபட்டுள்ள மின்சார சபை ஊழியர்களின் பணியை பாராட்ட வேண்டுமென்றும் சபை தெரிவித்துள்ளது. மின்சார சபையுடன் இணைந்து வாடிக்கையாளர்கள் மேற்கொள்ளும் சுற்றுச்சூழலுக்கு உகந்த இச்செயற்றிட்டங்கள் நாட்டில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பயன்பாட்டை ஊக்குவிக்குமென்றும் மின்சார சபை தெரிவித்துள்ளது.

## கைத்தொலைபேசிகளுடான...

பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்துள்ளார்.நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களையும் உள்ளடக்கும்

வகையில் இவ்விஷேட வேலைத்திட்டம் நேற்று முன்தினம் (31) ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அன்றைய தினம் பிற்பகல் 4 மணிமுதல் இரவு 8 மணிவரை மேற்கொண்ட நடவடிக்கையின் போது, இவ்வாறு கையடக்கத் தொலைபேசி மூலம் பணத்தைப் பெற்றுக் கொடுக்கும்1964 நிலையங்களும் 2131 அனுமதி பெறாத தனியார் தொடர்பாடல் நிலையங்களும் reload and bill payment நடமாடும் உபகரணங்கள் காணப்படும் 1074 நிலையங்களும் அத்துடன் இனங்காணப்பட்டன. வர்த்தக வங்கிக் கிளைகளுடனான 1202 இடங்களும் இவ்வாறு இனங்காணப்பட்டுள்ளன. இதன்போது 316 நபர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர். இவர்களில் போதைப்பொருள் வர்த்தகத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் 20 பேர் மற்றும் ஏனைய குற்றச்செயல்களுடன் சம்பந்தப்பட்ட 11 பேரும் உள்ளடங்குவதாக அவர் தெரிவித்துள்ளார்.

## அஸ்வெசும:...

இதனைக் குறிப்பிட்டுள்ளார். அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவுக்கான பயனாளர்களை தெரிவு செய்வதில், பல்வேறு தரப்பினரிடமிருந்தும் முன்மொழிவுகள் பெறப்பட்டன. இதற்கமைய அதில் திருத்தங்களை மேற்கொள்ளவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அத்துடன், கடந்த காலங்களில் அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவுக்கான நிபந்தனைகள் கடுமையாக இருந்தன. இதனால் கொடுப்பனவுகளை பெறத்தவறியோர், இம்முறை விண்ணப்பிக்க முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவுகளை பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை 1,700,000 கடந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## காணி உறுதிப்பத்திரம்...

வேலைத்திட்டத்தில், விவசாய சமூகத்தினருக்கு அரசாங்க காணிகளில் முழுமையான உறுதிப்பத்திரங்கள் வழங்கப்படவுள்ளன.இதற்கான

தேசிய வைபவம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் தம்புள்ளை ரன்கிரி விளையாட்டரங்களில் இம்மாதம் 05 இல்,நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் 10 ஆயிரம் பேருக்கு காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கப்படவுள்ளன.

எந்தவொரு காணி உரிமையும் இல்லாத மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ள இரண்டு மில்லியனுக்கும் அதிகமான மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுக்கும் வகையில், உருமய வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுவதாக சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். இந்நிகழ்வின் போது ரன்பூமி, ஜயபூமி மற்றும் சுவர்ணபூமி ஆகிய காணி உறுதிப்பத்திரங்கள் 10 ஆயிரம் பேருக்கும் அதிகமானோருக்கு வழங்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

## 16 இலட்சம் மாணவருக்கு...

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அமைச்சர், 2024ஆம் ஆண்டுக்கான பாடசாலை இலவச பாடப் புத்தகங்களை அச்சிடும் பணிகள் நிறைவுபெற்றுள்ளன.

அந்த வகையில் பாடசாலைகள் ஆரம்பமானதும் மூன்றாம் தவணை நிறைவடைவதற்கு முன் இலவச பாடப் புத்தகம் மற்றும் இலவச பாடசாலை சீருடைத் துணிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு ள்ளது.

சர்வதேச மொழிகளை கற்பது தொடர்பில் தற்போது மாணவர்கள் மத்தியில் மிக அதிகமான கேள்விகள் காணப்படுகின்றன. இதனை கவனத்தில் கொண்டு தற்போது பாடசாலைக் கட்டமைப்பில் இடம்பெறும் சர்வதேச மொழிகளைக் கற்பிக்கும்

பாடசாலைகளின் எண்ணிக்கையை விரிவுபடுத்தவும் புதிய வெளிநாட்டு மொழிகளை அறிமுகப்படுத்துவத ற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

பிரான்ஸ், ஜப்பான், சீனா, கொரியா, இந்தி, ஜேர்மன் போன்ற மொழிகளை கற்பிப்பதற்காக அரசாங்கப் பாடசாலைகளில் பொருத்தமான பட்டதாரி ஆசிரியர்களை நியமிப்பதற்கு அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளது.

இதனடிப்படையிலேயே நியமனக் கடிதங்கள் வழங்கப்படுமென்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கோரிக்கைக்கு தீர்வின்றேல்...

கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார். டீசலின் விலை நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் லீற்றருக்கு ஐந்து ரூபாவால் அதிகரிக்கப்பட்டது. இந்நிலையில் 22 ரூபா நட்டத்தை எதிர்கொள்ள நேர்ந்துள்ளதால், அதற்கிணங்க பஸ்கட்டணத்தை 10 ரூபாவால் அதிகரிப்பதற்கு தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இவ்வாறு பஸ் கட்டணம் அதிகரிக்கப்படும் போது ஆகக்குறைந்த பஸ் கட்டணமாக தற்போது அறவிடப்படும் 30 ரூபாவை 35 ரூபாவாக அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலை அதிகரித்ததையடுத்து பஸ் கட்டணங்களை அதிகரிப்பது தொடர்பில் ஊடகங்களுக்கு அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பின் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

# இந்திய மீனவர்கள் 18 பேரும் நிபந்தனையில் விடுதலை

(மன்னார் குறூப் நிருபர்)

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட 18 இந்திய மீனவர்களும் நிபந்தனை அடிப்படையில் நேற்றுமுன்தினம் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வழக்கு விசாரணைகளின் போதே இவர்கள் நிபந்தனை அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார், தாழ்வுபாடு கடல் பகுதியை அண்மித்த பகுதிக்குள் சட்டவிரோதமாக உள்நுழைந்து 2 ரோலர் படகுகளில் மீன்பிடியில் ஈடுபட்ட போதே கடந்த 16ஆம் திகதி கடற்படையினரால் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைதான 18 இந்திய மீனவர்களும் அவர்கள் பயன்படுத்திய இரண்டு ரோலர் படகுகளும் கடற்படையினரால் தாழ்வுபாடு கடற்படை முகாமுக்கு கொண்டுவரப்பட்டன.

அதன்பின்னர் 18 கடற்றொழிலாளர்களும் மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இவர்கள் விசாரணைகளின் பின்னர் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளால் கடந்த 17 ஆம் திகதி மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். இதன் போது இவர்களை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

பணிப்பாளரின் அனுமதியின்றி இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டமை, இலங்கை கடற்பரப்பில் கடற்றொழிலில் ஈடுபட்டமை, மற்றும் இலங்கையில் தடை செய்யப்பட்ட இழுவைமடி தொழிலை முன்னெடுத்தமை ஆகிய மூன்று குற்றச்சாட்டுக்கள் இவர்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்டன.

குற்றச்சாட்டுக்களை விசாரணைக்கு உட்படுத்திய நீதவான் 1 ஆம் மற்றும் 2 ஆம் குற்றச்சாட்டுகளுக்கு 12 மாதங்களும், 3 ஆவது குற்றச்சாட்டுக்கு 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறை தண்டனையும் வழங்கப்பட்டு நிபந்தனை அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டனர்.

மேலும் படகு தொடர்பான வழக்கு விசாரணைகள் எதிர்வரும் மார்ச் மாதம் 20 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

அன்றைய தினம் படகின் உரிமையாளரை நீதிமன்றில் ஆஜராகுமாறும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# வடக்கின் உதயம்

## மன்னாரில் முதியவர்களுக்கான விசேட மருத்துவ முகாம்



(மன்னார் குறூப் நிருபர்)

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட அடம்பன் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் முதியவர்களுக்கான விசேட மருத்துவ முகாம் மற்றும் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

அடம்பன், ஆண்டாங்குளம், உயிலங்குளம் ஆகிய கிராம சேவகப்பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மருத்துவ தேவைகளை நிறைவேற்ற முடியாத 60 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களின் நலன்கருதி விசேட மருத்துவ முகாம் மற்றும் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

அநுராதபுரம் மற்றும் மன்னார் மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலகங்களில் முதியவர்களுக்கான விசேட செயற்றிட்டங்களை மெதடிஸ் திருச்சபை டெவ்லிங் நிறுவனம் நடாத்தி வருகிறது.

அதன் ஒரு பகுதியாக நேற்றையதினம் இலவச மருத்துவ முகாம் மற்றும் தெரிவு செய்யப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு மருத்துவ உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் மன்னார் அடம்பன் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெற்றது.

மருத்துவ முகாமின் ஆரம்ப நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசாங்க க.கனகேஸ்வரன், முன்னாள் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஸ்ரான்லி டிமேல், மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன், பொது சுகாதார பரிசோதகர் உட்பட மூன்று கிராம சேவகப்பிரிவுகளைச் சேர்ந்த 150 மேற்பட்ட முதியவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## வடதாரகை திருத்தப் பணிகள் ஆரம்பம்; ரூ.32 இலட்சம் செலவாகுமென மதிப்பீடு

யாழ்.விசேட நிருபர்



யாழ்ப்பாணம் , குறிகாட்டுவான் நெடுந்தீவுக்கு இடையில் சேவையில் ஈடுபடும் வடதாரகை படகினை திருத்தம் செய்வதற்கு 32 இலட்சம் ரூபா செலவாகும் என கடற்படை தெரிவித்துள்ளது.

கச்சத்தீவு திருவிழாவிற்கு முன்னர் வடதாரகை படகை திருத்தம் செய்யுமாறு , யாழ்.மாவட்ட செயலாளர் அறிவுறுத்தியமைக்கிணங்க , திருத்த வேலைக்காக காங்கேசன்துறை கடற்படை முகாமில் தரித்து நிற்கும் வடதாரகை படகின் திருத்த வேலைக்கான மதிப்பீட்டை கடற்படையினர் மேற்கொண்டனர்.

இதன்போது , திருத்த பணிகளுக்காக 32 இலட்சம் ரூபா செலவாகும் எனவும் திருத்த பணிகள் முன்னெடுக்கப்படும் போது மேலும் பழுதுகள் காணப்பட்டால் , அவற்றினை திருத்தம் செய்வதற்கு மேலதிக பணம் தேவைப்படுமென வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கடற்படை தெரிவித்துள்ளது.

இதேவேளை குறிகாட்டுவான் நெடுந்தீவுக்கு இடையில் பயணிகள் சேவையில் ஈடுபடும் குமுதினி படகு நேற்றையதினம் வியாழக்கிழமை முதல் சேவையில் ஈடுபடுமென வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

படகின் திருத்த வேலைக்காக 75 ஆயிரம் ரூபா செலவானதாக தெரிவிக்கப்படுகிறது.

## அச்சுவேலி இளைஞன் மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம் குறூப் நிருபர்)

யாழ்ப்பாணத்தில் பொலிஸ் உத்தியோகத்தர்களின் தாக்குதலில் படுகாயமடைந்த இளைஞரொருவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் கடமைபுரியும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவரே தாக்குதலில் ஈடுபட்டதாக பாதிக்கப்பட்டோர் தெரிவிக்கின்றனர். அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் அளிக்கப்பட்ட முறைப்பாடு தொடர்பில் விசாரணைக்கு செல்லாதமையால் பொலிஸார் வீதியில் தன்னை கடுமையாக தாக்கியதாக பாதிக்கப்பட்டவர் வைத்தியசாலை பொலிஸாருக்கு முறையிட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## யாழில் போதை மாத்திரைகள் மீட்பு

(யாழ்.விசேட நிருபர்)

போதை மாத்திரைகளை விற்பனை செய்யும் நோக்குடன் உடைமையில் வைத்திருந்த ஒருவர் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் யாழ்.நகரில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவரிடமிருந்து 2000 மேற்பட்ட போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். யாழ்.நகரை அண்மித்த பகுதியில் வைத்தே சந்தேகநபரை பொலிஸார் கைது செய்ததாகவும், அவரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## கிளிநொச்சி விபத்தில் சிக்கிய இளைஞன் யாழ்.போதனாவில் உயிரிழப்பு

(கரவெட்டி நிருபர்)

கிளிநொச்சி பகுதியில் விபத்தில் சிக்கி படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த இளைஞன் ஒருவன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி ஊற்றுப்புலம் பகுதியைச் சேர்ந்த மகதீஸ் அபிசாகன் (வயது 20) எனும் இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

தலைக்கவசம் இன்றி வேகமாக மோட்டார் சைக்கிளை செலுத்தி சென்ற வேளை வேகக்கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானதாக மரண விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது.

## கோவிற்குடியிருப்பில் கிராம மட்ட அபிவிருத்தி திட்ட முன்மொழிவு நிகழ்ச்சி

### பொதுமக்கள் முன்மொழிவுகள் சமர்ப்பிப்பு

(சாவகச்சேரி விசேட நிருபர்)



கோவிற்குடியிருப்புக் கிராமத்தில் 2024ஆம் ஆண்டுக்கான கிராம மட்ட பன்முகப்படுத்தப்பட்ட அபிவிருத்தித் திட்ட முன்மொழிவு நிகழ்ச்சித்திட்டம் அண்மையில் நடைபெற்றது.

கோவிற்குடியிருப்புக் கிராமத்தின் கிராம அலுவலர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் தலைமையில் கடற்றொழிலாளர் ஒய்வு மண்டபத்தில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் கிராம மட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு கிராம மட்ட அபிவிருத்திக்கான முன்மொழிவுகளைச் சமர்ப்பித்திருந்தனர்.

இதன்போது கிராமத்திலுள்ள கடற்றொழிலாளர் ஓய்வு மண்டபத்தைப் புனரமைத்து பொதுநோக்கு மண்டபமாக பயன்படுத்தல், உதயசூரியன் முன்பள்ளிக்கு முன் மண்டபம் அமைத்தல், உப்புக்கேணிக் குளத்திற்கு ஒரு பக்க பாதுகாப்பு வேலி அமைத்தல், உதயசூரியன் மற்றும் மகிழங்கேணி கிராம வீதிகளில் மதவு அமைத்தல் உள்ளிட்ட அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் யோசனைகள் முன்வைக்கப்பட்டன.

மேற்படி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்திற்கு 382 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதால் மாவட்டத்தின் சகல கிராம உத்தியோகத்தர்கள் பிரிவுகளிலும் அபிவிருத்தித் திட்டத்திற்கான முன்மொழிவுகளை பொதுமக்களிடம் பெற்றுக்கொள்ளும் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன.

இத்திட்டத்தின் கீழ் சுற்றுலாத்துறையை விருத்தி செய்யும் திட்டங்கள், குடிநீர் விநியோக கருத்திட்டம், மதஸ்தானங்களில் சூரியப்படலம் அமைத்தல், கிராமப்புற மருத்துவமனை அபிவிருத்தி, நீர்ப்பாசனக் குளம், வாய்க்கால் புனரமைப்பு, பாடசாலை வீதிகள், விவசாய வீதிகள் புனரமைப்பு, காட்டு விலங்குகளிலிருந்து பயிர்களைப் பாதுகாப்பதற்கான திட்டங்கள் உள்ளிட்ட பல அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க முடியுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## பாதுகாப்பான புலம்பெயர்வு; திருமலையில் விழிப்புணர்வு

தம்பலகாமம் குறூப் நிருபர்



மனிதவள திணைக்களத்தின் ஏற்பாட்டில் திருகோணமலை பட்டணமும்சூழலும் பிரதேச செயலகமானது, திருகோணமலை நகர சபையின் பொது நூலகத்துடன் இணைந்து இளைஞர்களுக்கு பாதுகாப்பான புலம்பெயர்வு தொடர்பாக விழிப்புணர்வு நிகழ்வை நேற்றுமுன்தினம் புதன்கிழமை (31) நடத்தியது.

சர்வதேச புலம்பெயர்தலுக்கான அமைப்பின் மூலம் திருகோணமலை நகர சபை பொது நூலக மண்டபத்தில் நகர சபைச் செயலாளர் வெ.இராஜசேகர் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றதுடன், பாதுகாப்பான புலம்பெயர்வு தொடர்பாக இதன்போது விளக்கமளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் திருகோணமலை நகர சபையின் நிர்வாக உத்தியோகத்தர் என்.பரமேஸ்வரன், பிரதம நூலகர் நா.யோகேஸ்வரன், நூலகர் றிம்சானா , நூலக உதவியாளர்களான உ.ரஜனிக்காந்தன், அ.அச்சுதன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## ஏ.எம்.எம். ரமீஸ் கல்விமாணி பட்டம் பெற்றார்



மஹியங்கனை, பங்கரகம்மன முஸ்லிம் மகா வித்தியாலய உப அதிபர் ஏ.எம்.எம். ரமீஸ் தேசிய கல்வி நிறுவகத்தில் கல்விமாணி பட்டத்தைப் பெற்றுக் கொண்டுள்ளார். பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் இவருக்கு இப்பட்டம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

சமூக சேவைகளில் அதிக ஈடுபாடு காட்டும் ஆசிரியர் ரமீஸ், பங்கரகம்மனவைச் சேர்ந்த சமூக சேவையாளர் மர்ஹூம் அப்துல் மஜீத் மற்றும் நபிஸா உம்மா தம்பதிகளின் புதல்வராவார்.

## காரைதீவில் புதிய உறுப்பினர் தெரிவு

மாளிகைக்காடு குறூப் நிருபர்

காரைதீவு பிரதேச செயலக சமுர்த்தி மகா சங்க கட்டுப்பாட்டு நிறைவேற்று சபைத் தெரிவு, பிரதேச செயலாளர் சிவஞானம் ஜெகராஜன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் சமுர்த்தி தலைமைப் பீட முகாமையாளர் எம்.எம்.ஹச்சி முகம்மட், சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி முகாமைத்துவ பணிப்பாளர் மற்றும் மகா சங்க உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.இதன்போது, இந்த வருடத்துக்கான புதிய உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

## ஊடு பயிர்ச் செய்கை திட்டம்; தும்பங்கேணியில் விழிப்புணர்வு

பாண்டிருப்பு தினகரன் நிருபர்



ஊடு பயிர்ச் செய்கை மூலம் நிலக்கடலை விதை உற்பத்தி தொடர்பான விழிப்புணர்வூட்டும் நிகழ்வொன்று திக்கோடை விவசாய போதனாசிரியர் பிரிவுக்குட்பட்ட தும்பங்கேணி பிரதேசத்தில் அண்மையில் நடைபெற்றது.

திக்கோடை விவசாய போதனாசிரியர் எஸ்.சசிகுமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் எம்.பரமேஸ்வரன், உதவி விவசாய பணிப்பாளர்களான எஸ்.சித்திரவேல், நித்தியா நவரூபன், தெற்கு வலய விவசாய போதனாசிரியர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், விவசாயிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட விவசாய திணைக்களத்தின் ஏற்பாட்டில் ஊடு பயிர்ச் செய்கைக்கான விதைகள் வழங்குவது, தற்போதைய விவசாய திட்டம் தொடர்பாக இதன்போது விளக்கமளிக்கப்பட்டதுடன், விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட வாழைச் செய்கையில் ஊடு பயிராக செய்கை பண்ணப்பட்ட நிலக்கடலை அறுவடையும் நடைபெற்றது.

இதன்போது விவசாயிகளின் குறைநிறைகள், தேவைகள் தொடர்பாக கேட்டறியப்பட்டதுடன், அவற்றுக்கான தீர்வு விரைவாக பெற்றுக்கொடுக்கப்படுமெனவும், பிரதி விவசாய பணிப்பாளர் தெரிவித்தார்.

## சம்மாந்துறையில் நினைவுநூல் வெளியீடும் பரிசளிப்பு நிகழ்வும்!

தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி (2023ஆம் ஆண்டு) நினைவுநூல் வெளியீட்டு நிகழ்வும் பரிசளிப்பு நிகழ்வும் சம்மாந்துறையில் அமீர் அலி பொது நூலகத்தில் நாளை சனிக்கிழமை (03) காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது .

இரண்டு அமர்வுகளாக நடைபெறவுள்ள இந்நிகழ்வுகளின் முதலாவது அமர்வில் பிரதம அதிதியாக முன்னாள் அமைச்சரும் திகாமடுல்ல மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான பி.தயாரத்தின கலந்துகொள்ளவுள்ளார்.

இதன்போது சம்மாந்துறையின் ஓர் ஆளுமையாக மதிக்கப்பட்ட மர்ஹூம் அமீர் அலி நினைவுநூல் வெளியிடப்படவுள்ளது.

சம்மாந்துறை பிரதேச சபைச் செயலாளர் எம்.கே.கே.முஹம்மத் தலைமையில் நடைபெறவுள்ள இரண்டாவது அமர்வில் பிரதம அதிதியாக தென்கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி நூலகர் கலாநிதி எம்.எம். மஷ்ரூபா கலந்துகொள்ளவுள்ளார்.

இதன்போது வாசிப்பு மாதத்தையொட்டிய பரிசில்கள் வழங்கப்படவுள்ளதுடன், கொரியமொழி பயிற்சியை பூர்த்தி செய்தவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

சம்மாந்துறை பிரதேச சபை நூலகர் குழு ஏற்பாடு செய்துள்ள இந்நிகழ்வுகளுக்கு சம்மாந்துறையின் முக்கியஸ்தர்கள் பலர் சிறப்பு அதிதிகளாக அழைக்கப்பட்டுள்ளனர்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
புதன் 2024.01.31
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5376 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 36,119,608.00
ஆங்கில எழுத்து Q — வெற்றி இலக்கங்கள் 2 6 1 3 9 6
பரிசுக்கு பரிசு சீட்டிழுப்பின் பெறுபேறுகளுக்காக www.nlb.lk என்ற இணையத்தளத்துக்குள் பிரவேசிக்கவும்.

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3618 — சீட்டிழுப்பு திகதி 2024.01.31 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 64,193,193.92
ஆங்கில எழுத்து S — வெற்றி இலக்கங்கள் 01 16 19 67 — விசேட எழுத்து S — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 02414

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1724 — 2024.01.31 — 49989 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 422,474,178.00
ஆங்கில எழுத்து G — சுப்பர் இலக்கம் 19 — வெற்றி இலக்கங்கள் 08 23 54 69
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

Lucky 7 VIP — திகதி 2024.01.31 — சீட்டிழுப்பு இலக்கம் 0202
ஆங்கில எழுத்து C — வெற்றி இலக்கங்கள் 7 2 7 9 7 1
L7 எழுத்து C
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.24,349,363.32

ராசி சுப பலன் — திகதி 2024.01.31 — சீட்டிழுப்பு இலக்கம் 685 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,853,865.56
வெற்றி இலக்கினம் ரிஷபம் — வெற்றி இலக்கங்கள் 22 36 45 60 — தனயோக இலக்கம் 34248 — நாளுக்கான விதி எண் 08

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1406 — 2024.01.31 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 133,340,672.00
ஆங்கில எழுத்து U — வெற்றி இலக்கங்கள் 07 27 68 74 — விசேட எழுத்து U — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 12299

# கிழக்கின் குரல்



## மஹதிவுல்வெவவில் 2 கடைகளில் திருட்டு

**றொட்டவெவ குறூப் நிருபர்**

திருகோணமலையின் மொரவெவ, மஹதிவுல்வெவ பிரதேசத்திலுள்ள இரண்டு சில்லறைக் கடைகளில் நேற்று வியாழக்கிழமை அதிகாலை (01) திருட்டுப் போயுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

பணம், பிஸ்கட்டுகள், சிகரெட்டுகள் உள்ளிட்ட பொருட்களே திருட்டுப் போயுள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

கடைகளில் பொருத்தப்பட்டுள்ள சி.சி.டி.வி. கமெராவின் முக்கிய பாகங்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த பெட்டியை உடைத்துவிட்டு, இந்தத் திருட்டுச் சம்பவத்தை திருடர்கள் புரிந்துள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த திருட்டுச் சம்பவம் தொடர்பாக மொரவெவ பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

## கிராமங்களில் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டியது அவசியம்

### இராஜாங்க அமைச்சர் சி.சந்திரகாந்தன்

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**



"கிராம மட்டங்களில் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டிய சூழ்நிலை உள்ளதுடன், அதற்காக நாம் பிள்ளைகளை நம்பிக்கையுடன் வளர்க்கும் போதே, எமது நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சி அடையும். அதற்காக நாம் அனைவரும் பாடுபட வேண்டும்" என, இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

"தற்போது எமது நாட்டில் நம்பிக்கை கீற்று உருவாகியுள்ளது. ஆயினும், இயற்கை அனர்த்தங்களுக்கு நாம் முகங்கொடுக்க வேண்டியுள்ள போது, தற்போது பொருளாதார அச்சத்தையும் நாம் எதிர்நோக்கி இருக்கின்றோம்" எனவும், அவர் தெரிவித்தார்.

வவுணதீவில் நேற்று முன்தினம் புதன்கிழமை (31) நடைபெற்ற நிகழ்வொன்றின் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மேலும் தெரிவித்த அவர்,

"மனிதனின் வாழ்வில் ஆரோக்கியத்துக்கு நிகராக ஒழுக்கம் இருக்க வேண்டும். அதேபோன்று சேமிப்பும் மிக முக்கியமாகும். எமது பிள்ளைகளின் எதிர்காலத்துக்காக நாம் நம்பிக்கையுடன் பயணிக்க வேண்டியுள்ளது.

மட்டக்களப்பில் பின்தங்கிய கிராமங்களில் போசாக்கு மட்டம் என்பது மிக முக்கியமாக உள்ளதுடன், ஆரோக்கியமான சிசுப் பிரசவத்துக்கும் போசாக்கு மிக முக்கியமானதாகும்" எனத் தெரிவித்தார்.

## சேனநாயக்க சமுத்திர நீர்ப்பாசனம்

## உட்கட்டமைப்பு பொறிமுறைக்கு பைசால் காசிம் எம்.பி. கோரிக்கை

**ஒலுவில் விசேட நிருபர்**



அம்பாறை டீ.எஸ்.சேனநாயக்க சமுத்திர நீர்ப்பாசனத் திட்டத்தின் உட்கட்டமைப்பு நிர்மாணத்துக்கான பொறிமுறையை உருவாக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் பைசால் காசிம் கோரிக்கை விடுத்தார்.

அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்த திங்கட்கிழமை (29) மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற போதே, அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

இந்தக் கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய அவர்,

"மகாவலி நீர்ப்பாசனத் திட்டத்தில் காணப்படும் சிறந்த உட்கட்டமைப்பு மூலம் நீர் சேமிப்பு மற்றும் நீர் வழங்கல் எவ்வாறு இடம்பெறுகிறதோ, அதை முன்னோடியாகக் கொண்ட உட்கட்டமைப்பை டீ.எஸ்.சேனநாயக்க சமுத்திர நீர்ப்பாசனத் திட்டத்திலும் அமைப்பதன் மூலம் எதிர்காலத்தில் விவசாயத்துக்காக நீர் சேமிப்பு மற்றும் நீர் வழங்கலை கட்டமைக்கப்பட்ட வகையில் மேற்கொள்வது சாத்தியமாகும்.

முறையான உட்கட்டமைப்பு இல்லாததால் நீர் விரயமாகுதல், அனர்த்த நிலைமைகளின் போது பாரிய சேதங்கள் ஏற்படுதல் நெடுங்காலமாக உள்ளது. இது தொடர்பாக நீர்ப்பாசன அமைச்சின் ஆலோசனைக் குழுக் கூட்டத்திலும் கோரிக்கை முன்வைத்துள்ளேன்" என்றார்.

## செப்டெம்பர் அல்லது ஒக்டோபரில்

## நாட்டின் தலைவரை தெரிவு செய்யும் தேர்தல் நடைபெறும்

### பாலித ரங்கே பண்டார எம்.பி.

**ஏறாவூர் நிருபர்**



எதிர்வரும் செப்டெம்பர் அல்லது ஒக்டோபர் மாதத்தில் இந்த நாட்டின் தலைவரை தெரிவு செய்வதற்கான தேர்தல் நடைபெறவுள்ளதுடன், அத்தேர்தல் நடைபெற்று சூடு ஆறுவதற்கிடையில் பொதுத் தேர்தல் நடைபெறும். அடுத்த வருடத்தில் உள்ளூராட்சிமன்றத் தேர்தலும் மாகாண சபைத் தேர்தலும் நடைபெறவுள்ளதாக, ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

மட்டக்களப்பு பொது நூலகக் கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்ற விசேட நிகழ்வொன்றில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றிய போதே, அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்நிகழ்வின் போது, ஐ.தே.க.வின் செயற்பாட்டாளர்களுக்காக வரையறுக்கப்பட்ட வட்டாரங்கள் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டதுடன், இதற்காக செயற்பாட்டாளர்களின் இணக்கமும் கோரப்பட்டது. இதன்போது, ஐ.தே.க.வின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றிய போது,

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டைப் பொறுப்பேற்று, பொருட்களுக்கான தட்டுப்பாட்டை நீக்கியதுடன், மக்களின் வாழ்வில் சுமூக நிலைமையை ஏற்படுத்தினார்.

இன்று நாட்டை அபிவிருத்தி செய்யும் கடமையே எஞ்சியுள்ளது. வங்குரோத்து நிலையிலிருந்த நாட்டை அடுத்த ஒருவருட காலத்துக்குள் மீட்சி பெறச் செய்ய முடியுமென்றால், ஐந்து வருடங்களுக்கு தலைமைப் பொறுப்பை வழங்கினால், எமது நாடு மீள்ளெழுச்சி பெறுமென்பதில் ஐயமில்லை" என்றார்.

## கல்முனையில் வீடுகளுக்கு சேதமேற்படுத்தும் தென்னைகளை தறிக்க பணிப்பு

**நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்**

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பிரதேசங்களில் அதிகளவில் வீடுகள் கட்டப்படும் நிலையில் அவ்வீடுகளுக்கு அருகிலுள்ள தென்னை மரங்களிலிருந்து விழும் இளநீர் குரும்பை, தேங்காய்களால் அவ்வீடுகளுக்கு சேதம் ஏற்பட்டு நட்டம் ஏற்படுவதை தவிர்க்க கல்முனை மாநகர ஆணையாளர் முகம்மட் அஸ்மி நடவடிக்கை எடுத்துள்ளார்.

விலை உயர்ந்த சீட்டுகள், ஓடுகள், கதவுகள் ஆகியன இவற்றால் சேதம் அடைவதாக கல்முனை ஆணையாளரின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது.

இந்நிலையில், உடனடியாக தொழில்நுட்ப உத்தியோகத்தர் உரிய இடத்துக்கு வரவழைக்கப்பட்டு, ஆய்வு அறிக்கை பெற்று 14 நாட்களுக்குள் வீடுகளுக்கு சேதம் விளைவிக்கும் தென்னைகளை தறிக்குமாறும், தவறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் உரிய வீட்டு உரிமையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக முறைப்பாட்டாளருக்கும் கல்முனை தலைமை பொலிஸ் நிலைய சுற்றாடல் பிரிவினருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கொக்கட்டிச்சோலை பிரதேசத்தில் வெள்ளத்தால் 4,354 ஏக்கர் பெரும்போக நெற்செய்கை பாதிப்பு

**மட்டக்களப்பு குறூப் நிருபர்**

அண்மையில் நாட்டில் நிலவிய சீரற்ற காலநிலையைத் தொடர்ந்து பெய்த அடை மழையால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தின் கொக்கட்டிச்சோலை கமநல சேவைப் பிரிவில் 4,354 ஏக்கர் பெரும்போக நெற்செய்கை அழிவடைந்துள்ளதாக, அக் கமநல சேவை அபிவிருத்தி நிலையம் தெரிவித்தது.

இதன் காரணமாக சுமார் 1,500 விவசாயிகள் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளதாகவும், இவர்களுக்கான நட்டஈட்டை வழங்குவதற்கு அரசாங்கத்திடம் தாம் கோரிக்கை விடுப்பதாகவும் அந்நிலையம் மேலும் தெரிவித்தது. இம்முறை மட்டக்களப்பில் சுமார் 13,000 ஆயிரம் ஏக்கரில் பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டதாகவும், கொக்கட்டிச்சோலை கமநல சேவை அபிவிருத்தி நிலையம் தெரிவித்தது.

## இறக்காமத்தில் காணி உறுதிப்பத்திரம் வழங்கல்



**ஒலுவில் கிழக்கு தினகரன், அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்கள்**

அம்பாறையின் இறக்காமம் பிரதேச செயலகப் பிரிவில் 150 குடும்பங்களுக்கான காணி உறுதிப்பத்திரங்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை (31) வழங்கி வைக்கப்பட்டன.

இறக்காமம் பிரதேச செயலாளர் எம்.எஸ். றஸான் தலைமையில் இறக்காமம் பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் இதற்கான நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது தேசிய காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம். அதாஉல்லா மற்றும் திகாமடுல்ல மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் பைசால் காசிம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்களுக்கு காணி உறுதிப்பத்திரங்களை வழங்கி வைத்தனர்.

## கல்முனை மருத்துவமனையில் தொழுநோய் தின நிகழ்வு



**காரைதீவு குறூப் நிருபர்**

உலக தொழுநோய் தினத்தையிட்டு கல்முனை ஆதார வைத்தியசாலையில் கடந்த செவ்வாய்க்கிழமை (30) தொழுநோய் தின நிகழ்வொன்று நடைபெற்றது.

கல்முனை ஆதார வைத்தியசாலையினுடைய தோல் நோய் பிரிவின் ஏற்பாட்டில் வைத்திய சாலை பணிப்பாளர், வைத்திய கலாநிதி இரா.முரளீஸ்வரன் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றதுடன், இதில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் தோல் வைத்திய நிபுணர் என்.தமிழ்வண்ணன் கலந்து சிறப்பித்தார்.

தொழுநோயின் வரலாறு, அதன் வகைகள், அறிகுறிகள், முக்கியமாக தொடுகை உணர்வு, தோலின் நிற மாற்றம், நரம்புத்திரள், தோலின் மாற்றம், சிகிச்சை முறை, மருந்துகள் உள்ளிட்டவை தொடர்பாக தோல் வைத்திய நிபுணர் என்.தமிழ் வண்ணன் விளக்கமளித்தார்.

## பாலமுனையில் இரத்ததான நிகழ்வு



**பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்**

பாலமுனை இளைஞர்கள் சபையின் ஏற்பாட்டிலும் மெமன் எயிட் அமைப்பின் அனுசரணையிலும் இரத்ததானம் செய்யும் நடவடிக்கையும் இரத்ததானம் செய்தவர்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கும் நடவடிக்கையும் பாலமுனை மஹாசினுல் உலூம் இஸ்லாமியக் கல்லூரி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

பாலமுனை இளைஞர்கள் சபையின் தலைவர் ஏ.எல்.சீத் தலைமையில் இரத்ததானம் செய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதுடன், இதில் பலர் கலந்துகொண்டு இரத்ததானம் செய்தனர்.

## இராஜாங்க அமைச்சர் சி. சந்திரகாந்தன் தலைமையில்

## வவுணதீவு, ஆரையம்பதியில் பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டங்கள்

**பெரிய போரதீவு தினகரன், புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்கள்**



மண்முனை மேற்கு வவுணதீவு மற்றும் மண்முனைப்பற்று ஆரையம்பதி பிரதேச செயலகப் பிரிவுகளுக்கான பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள், இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் நேற்று நடைபெற்றன.

இந்த வருடத்துக்கான முதலாவது பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களாக இவை நடைபெற்றன.

மேற்படி பிரதேச செயலகப் பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும் இந்த வருடத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு முன்மொழியப்பட்ட திட்டங்களுக்கான அனுமதியை பெற்றுக்கொள்வது தொடர்பாகவும் இந்தக் கூட்டங்களில் விரிவாக ஆராயப்பட்டன.

விசேடமாக காணிப் பிரச்சினை, வீதி அபிவிருத்தி தொடர்பாக கூடிய கவனம் செலுத்தப்பட்டது. இந்த விடயங்கள் தவிர விவசாயம், நீர்ப்பாசனம், கல்வி, சுகாதாரம், சுற்றாடல் உட்பட ஏனைய அனைத்து திணைக்களங்கள்சார் விடயங்கள் தொடர்பாகவும் அவற்றில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வது தொடர்பாகவும் இந்தக் கூட்டங்களில் கவனம் செலுத்தப்பட்டன.

## கல்முனையில் வீதிகளுக்கு பெயர்ப்பலகை இடும் திட்டம்

**கல்முனை விசேட, சாய்ந்தமருது விசேட நிருபர்கள்**



கல்முனை மாநகர சபை பிரிவுக்குட்பட்ட வீதிகளுக்கு பெயர்ப்பலகை இடும் வேலைத்திட்டம் நேற்று முன்தினம் புதன்கிழமை (31) அம்மாநகர ஆணையாளர் ஏ.எல். எம்.அஸ்மி தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நகர அழகுபடுத்தல் திட்டத்தின் ஓரங்கமாக இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுவதுடன், பொறியியலாளர் ஏ.ஜே.ஏ.எச்.ஜெளஸி, பிரதி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. கல்முனை மாநகர சபை பிரிவுக்குட்பட்ட 150 வீதிகளுக்குள் கல்முனை மட்டக்களப்பு, கல்முனை அக்கரைப்பற்று பிரதான வீதிகளிலிருந்து ஆரம்பிக்கும் 40 வீதிகளுக்கு இந்தத் திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக பெயர்ப்பலகை இடப்படவுள்ளன.

இந்த வேலைத்திட்டத்துக்கு அமானா வங்கி அனுசரணை வழங்கியதுடன், இதற்கான ஒப்பந்தம் அண்மையில் கைச்சாத்தனது.

## வெருகலில் பால்மா வழங்கல்

**தோப்பூர் தினகரன் நிருபர்**

திருகோணமலையின் வெருகல் பிரதேச செயலாளர் பிரிவில் சிறு பிள்ளைகளைக் கொண்ட 54 குடும்பங்களுக்கு ஜனாதிபதி செயலகத்தால் நேற்று முன்தினம் புதன்கிழமை (31) பால்மா வழங்கப்பட்டது.

போசாக்கு குறைந்த பிள்ளைகளின் நன்மை கருதி இப்பால்மா வழங்கப்பட்டதுடன், ஒவ்வொரு குடும்பத்துக்கும் 400 கிராம் நிறை கொண்ட இரண்டு பால்மா பைக்கட்டுகள் படி வழங்கப்பட்டன.

வெருகல் பிரதேச செயலகத்தில் அப்பிரதேச செயலாளர் எம்.ஏ.அனஸ் தலைமையில் இப்பால்மா பைக்கட்டுகள் வழங்கி வைக்கப்பட்டன.

# இலங்கையின் 76ஆவது சுதந்திர தின நிகழ்வின் ஒத்திகை












இலங்கையின் 76ஆவது சுதந்திர தின நிகழ்வின் ஒத்திகை நேற்று (01) காலி முகத்திடலில் நடைபெற்றது. இதில் முப்படையினரும் கலந்துகொண்டு பயிற்சிகளில் ஈடுபட்டுள்ளதை படங்களில் காணலாம்.
படங்கள் : ருக்மல் கமகே

# ஐ.எல்.எம் சம்சுதீன் வித்தியாலயத்தில் இடம்பெற்ற இரு பெரும் நிகழ்வுகள்



நூற்றாண்டு விழாவினை கடந்து கல்வி, கலாசார இணைப் பாடவிதான செயற்பாடுகளில் பல முன்னேற்ற படிகளை தாண்டி வீறுநடைபோடும் பாடசாலை பேருவளை, மஹகொடை ஐ. எல்.எம். சம்சுதீன் வித்தியாலயமாகும். இதன் தற்போதைய அதிபராக திருமதி எம்.எச்.எப் சிஹானா கடமையாற்றிக் கொண்டிருக்கின்ற நிலையில் இப்பாடசாலை இன்று தன் பழைய மாணவர்களை ஒன்று திரட்டி மிகப்பெரிய வரலாறு காணாத விழாக்கோலம் பூணுகின்றது.

இப்பாடசாலையில் கல்வி கற்று இன்று நாட்டிலும் நாட்டுக்கு வெளியேயும் சேவைகளை புரிந்து கொண்டிருக்கும் பல கல்விமான்களை உருவாக்கி இலைமறைகாயாக தன்னடக்கத்தோடு பயணித்துக் கொண்டிருக்கும் கலையகம்தான் ஐ. எல்.எம். சம்சுதீன் வித்தியாலயமாகும்.

கடந்த ஜனவரி 27 ஆம் திகதி முதல் 03 நாட்கள் தொடர்ச்சியாக பழைய மாணவர்களின் ஒன்று கூடல் நிகழ்வும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியும் பாடசாலை அதிபர் தலைமையின் கீழ் ஆரம்பமானது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பேருவளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அதிபர் யு.கே லலித் பத்மகுமார கலந்து கொண்டார். கௌரவ அதிதியாக பேருவளை கோட்டக் கல்விக் பணிப்பாளர் டபிள்யு. ஏ.யு சோமரத்ன கலந்து சிறப்பித்தார். மேலும் கடந்த 29ஆம் திகதி நிகழ்வில் பிரதம அதிதியாக களுத்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.யு விக்கிரமாரச்சியும் விஷேட அதிதிகளாக பெற்றோர், மற்றும் ஊர் நலன் விரும்பிகள் அனைவரும் கலந்து சிறப்பித்தனர்.

வரலாற்று சிறப்புக்கள் உள்ளடக்கிய இப்பாடசாலையின் வரலாற்றுப் பின்னணியை அறிந்திருப்பது காலத்தின் தேவையாகும். மேல் மாகாணத்தில் களுத்துறை மாவட்டத்தில் பேருவளை நகர சபை எல்லையில் 6 ஆம் வட்டாரமான மஹகொட எனும் கிராமத்தில் அமைய பெற்றுள்ள களு/ ஐ. எல்.எம். சம்சுதீன் வித்தியாலயம் 1917ஆம் ஆண்டு ஜூன் 1 ஆம் திகதி 60 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டது. அன்று பாடசாலையின் முதலாவது அதிபராக திரு சுப்பிரமணியம் கடமையாற்றினார். கலவக்கந்த முஸ்லிம் வித்தியாலயம் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை தரம் 05 வரையான வகுப்புகளை மாத்திரம் உள்ளடக்கியதாக காணப்பட்டது.

ஓலைக் குடிசையில் இயங்கி வந்த இப்பாடசாலை பிற்காலத்தில் முஸ்லிம் வாலிபர் ஒன்றிணைந்த சங்கத்தின் அனுசரணையின் கீழ் நிரந்தரக் கட்டிடம் ஒன்று கட்டிக் கொடுக்கப்பட்டது. இப்பாடசாலையின் முதல் முஸ்லிம் அதிபராக ஜனாப் எம்.ஸி.எம். சரப்தீன் 1956 ஆம் ஆண்டில் கடமையேற்றார். இவருடைய சேவைக் காலத்தில் இப்பாடசாலை கல்வி மற்றும் ஏனைய பல துறைகளிலும் வளர்ச்சி கண்டது.

அவரைத் தொடர்ந்து வந்த ஏனைய அதிபர்களும் பாடசாலையின் முன்னேற்றத்திற்காக அயராது சேவையாற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது. 1992 ஆம் ஆண்டு முதன்முதலாக க.பொ.த சாதாரண தர வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. தற்போது தரம் 1 –11 வரையான கல்வி நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றன. எமது பாடசாலையில் சேவையாற்றிய முன்னைய அதிபர்களின் கடுமையான உழைப்பு மற்றும் அர்ப்பணிப்பால் எமது பாடசாலையின் க.பொ.த சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் தொடர்ச்சியாக அதிகரித்து, உயர்தரத்துக்குச் செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் நாட்டின் பல பகுதிகளிலும் மருத்துவர்களாக கடமை புரியும் பலரும் ஆரம்பக் கல்வி தொடக்கம் இடைநிலை கல்வி வரை இப்பாடசாலையில் கற்றவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பௌதிக வளப்பற்றாக்குறை, இடப்பற்றாக்குறை நிலவிய போதும் மாணவர்களின் கல்வி அடைவு உயர்மட்டத்தில் இருப்பதை காணக்கூடியதாக இருக்கிறது. இதற்கு முன்னுதாரணமாக 2015 ஆம் ஆண்டின் தொடக்க காலங்களில் க.பொ.த சாதாரண தர பரீட்சைகளில் எம் கல்லூரி மாணவர்கள் மாவட்ட, வலய மட்டங்களில் சிறப்பான சித்திகளைப் பெற்றுக் கொண்டமை விசேட அம்சமாகும். அதுமட்டுமன்றி உதைப்பந்தாட்ட போட்டிகளில் பல சாதனைகளை பெற்றுக் கொண்டுள்ளனர். இவ்வெற்றிகளை பெற்றுத் தருவதில் அயராது உழைத்த அன்றைய அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும நினைவூட்டி நன்றி கூறுவது எமது கடமையாகும்.

# சவூதியில் மதுபானத்திற்கு ஒருபோதும் அனுமதி கிடையாது

## வெளிநாட்டு இராஜதந்திரிகளின் மதுப்பாவனை விடயத்தில் புதிய விதிகள்



சார்பு நிலை என்பது மனிதனின் இயல்பாகும். ஏதோவொன்றை அல்லது யாரோ ஒருவரை சார்ந்து பேசுவதும், சிந்திப்பதும், செயல்படுவதும் விடுபட முடியாத, தவிர்க்கவியலாத குணாம்சமாகும். அது நடுநிலை தவறாது, மனோ இச்சை சாராது இருக்கும் வரை தவறுமில்லை.

தற்போது முஸ்லிம் சமூகத்தின் பேசுபொருளாகவும், விவாதத் தலைப்பாகவும் ஆக்கப்பட்டுள்ள விடயம் "70 வருடங்களின் பின் சவூதியில் மதுபான நிலையம்" என்பதாகும்.

இது சவூதி சார்பு மற்றும் சவூதி சாரா அல்லது எதிர்ப்பு மனோ நிலையில் பார்க்கும் அம்சமல்ல. மாறாக மார்க்கத்திற்கும் நம் சமூகத்துக்கும் நமக்குள்ள பொறுப்பு என்ன என்பதை மையப்படுத்தி பார்க்க வேண்டிய விடயமாகும்.

மது அருந்துவது, அருந்தக் கொடுப்பது, தயாரிப்பது, விற்பது அனைத்துமே பெரும் பாவங்களில் உள்ள விடயங்கள் என்பதில் ஒரு முஸ்லிமுக்கு இரண்டாம் கருத்து இருக்க முடியாது. இதை நான் செய்தாலும் சரி எனது தந்தை செய்தாலும் சரி. அல்லது எனது ஜமாஅத்தை, கட்சியை, இயக்கத்தை சார்ந்தவன் செய்தாலும் சரி, எதிர்த்தரப்பு செய்தாலும் சரி பிழை பிழைதான், தவறு தவறுதான், பாவம் பாவம்தான்.

சமூகத்தில் ஒரு பாவச் செயல் இடம்பெற்றால் நடு நிலை தவறாது குறித்த நபரை அவமானப்படுத்தாமல் அவன் திருத்துவதற்கு வழிவைத்து கண்டிக்க வேண்டும், எச்சரிக்க வேண்டும், உபதேசிக்க வேண்டும். அது மார்க்கக் கடமையாகும். அதேவேளை அது சம்பந்தமான செய்திகளை உறுதிப்படுத்திக்கொள்வதும் முக்கியமாகும்.

அதே நேரம் ஒரு தவறு ஒரு அரசாங்கத்தால் நிகழுமாயின் அதில் இஸ்லாம் காட்டிய வழிகாட்டல் பிரகாரம் ஒரு முஃமின் நடந்து கொள்ள வேண்டும்.

பகிரங்கமாக சுட்டிக் காட்டுவது, வசைபாடி திட்டுவது, ஆர்ப்பாட்டம் செய்வது போன்ற தவறான நடைமுறைகளைக் கடைபிடிக்காது ஆர்ப்பரிக்காமல், கொந்தளிக்காமல் முறைப்படி ஆட்சியாளரை முறையே அணுகி உபதேசம் செய்ய முடியுமெனில் செய்வதே இஸ்லாம் காட்டும் வழிமுறையாகும்.

இவற்றில் நபியின் வழிகாட்டுதல் படி அனுமதிக்கப்பட்டது எது? வழிகெட்ட நடைமுறை எது? என்பதை பாமரர்கள் அறியாவிட்டாலும் உலமாக்கள் அறியாமலிருக்க வாய்ப்பில்லை.

வெளிநாட்டு அரசுகள் விடும் தவறுகள் பாவ காரியங்களில் வீராப்பு வசனம் பேசுவதும், பீரங்கிப் பேச்சாளராக முழங்குவதும், தாள் கிழிய வசனம் அமைப்பதும் மார்க்க வரம்புக்கு உட்பட்டதா என்பதையும் தாண்டி பயன் தருமா? என்பதையாவது சிந்திக்க வேண்டும்.

"இஸ்லாமிய ஆட்சியாளரும் குடிமக்களும்" தொடர்பான ஹதீஸ்களை வாசித்து இது பற்றி கற்றுக் கொள்வது முஃமினின் கடமையாகும். இங்கு நமது பேசுபொருளாக மாற்றப்பட்ட விடயம்; மது ஹலாலா? ஹறாமா? என்பதல்ல. அது ஹறாம் என்பதில் ஒரு முஃமினுக்கு இரண்டாம் கருத்து இருக்க முடியாது. மாறாக இங்குள்ள பிரச்சினை என்னவெனில்; சவூதியில் நடந்தது என்ன? மீடியாவில் வந்தது என்ன? என்பதுவே! நடக்காததை நடந்ததாக ஏன் சவூதி மீது அவதூறு பரப்ப வேண்டும்? சவூதி மீது அவ்வளவு வன்மம், காழ்ப்புணர்ச்சி எதற்காக? சவூதி மீது அவதூறு பரப்புவதால் அல்லது சவூதி செய்யும் தவறுகளை பரப்பித்திரிவதால் உங்களுக்கு கிடைக்கும் நன்மை என்ன? இந்த உம்மத்து அடையும் பயன் என்ன?

70 வருடங்களாக சவூதியில் மதுப்பாவனைக்கான சந்தர்ப்பம் இல்லாமல் இருந்தது, அது தற்போது திறக்கப்படுகிறது என்பது அப்பட்டமான பொய்யாகும்.

முஸ்லிமல்லாத வெளிநாட்டு இராஜதந்திரிகள் தமக்குத் தேவையான மதுப்பாவனையை அங்கு நிறைவேற்றிக் கொண்டுதான் இருந்தார்கள். அந்த அனுமதி தொடர்பான சட்டம் தற்போது இறுக்கமாக்கப்படுகிறது. அவ்வளவுதான். அதனால் அங்கு ஹறாம் ஹலாலாகிவிடவுமில்லை, ஹலால் ஹறாமாகிவிடவுமில்லை.

அவர்களது நாட்டு நலனை கவனத்திற் கொண்டு அவர்களது ஈமானிய பலத்திற்கேற்ப அவர்களது நாட்டு சட்டத்தில் ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்துள்ளனர். ஆனால் இருந்த சட்டத்தை விட இது சற்று இறுக்கமானது எனபதே உண்மையாகும்.

வெளிநாட்டு இராஜதந்திரிகள் கட்டுப்பாடில்லாமல் நாட்டுக்குள் மதுவை கொண்டு வருவதும், அவை நாட்டுக்குள் சிலவேளை முறையின்றி ஊடுருவதும் இதனால் கட்டுப்படுத்தப்படுகிறது. வெளிநாட்டு இராஜதந்திரிகளாக இருந்தாலும்

வயதுக் கட்டுப்பாடு இடப்பட்டு வரையறுக்கப்படுகிறது, பாவிக்கும் முஸ்லிமல்லாத எவரும் அதை வெளியில் எடுத்து வருவதோ, வேறு எவருக்கும் பகிர்வதோ, போதையுடன் அவர்களது எல்லையை தாண்டி நாட்டுக்குள் உலாவுவதோ தடை செய்யப்படுகிறது. எனவே சற்று தளர்வு நிலையில் இருந்த ஹறாம் (மது) பாவனை விடயம் சற்று இறுக்கப்பட்டு ஒரு படி முன்னேற்றம் ஏற்பட்டதையிட்டு இருந்ததை விட பரவாயில்லை என்று சொல்வதா? சவூதியில் மதுவுக்கு அனுமதி வழங்கியதாக வதந்தி பரப்புவதா?

மீடியாக்களின் வாய்க்கு வதந்திதான் அவல் என்பது புதிய விடயமல்ல. பொய் ஊடகங்களுக்கு ஒத்தூதப்போன நம்மவர்கள் சற்று நிதானித்து பார்க்க வேண்டாமா?

நீங்கள் சவூதியை துதி பாட தேவையில்லை. அவதூறு பரப்பாமல் இருக்கலாமல்லவா? சவூதி துதிபாடுவோர் என்று கூறப்படுவோர் எவரும் சவூதி தவறுகளுக்கு அப்பாற்பட்ட நாடு என்றோ அங்கு 'கிலாபா ராஷிதா' நடப்பதாகவோ வாதிடவில்லை.

எனவே, அவதூறு பரப்பாதீர்கள், செய்திகளை திரிவுபடுத்தி விளம்பரப்படுத்தாதீர்கள், எந்தப் பயனையும் தராத, இந்த உம்மத்துக்கு எந்த நலவையும் ஏற்படுத்தாத செய்திகளுக்கு தனித்தலைப்பிட்டு கால நேரத்தை விரயமாக்காதீர்கள்.

**அஷ்ரப் ஆப்தீன்**



# புலமைக் கதிர்

தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான





திருமதி.பத்மா சந்திரமோகன்
புனித அந்தோனியார் கல்லூரி
கொழும்பு - 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

**I. பின்வரும் பந்தியை வாசித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை பந்தியில் இருந்து தெரிந்தெடுத்து புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

ஒரு நாட்டின் பெருமை அங்குள்ளவர்களின் கல்வியில் தங்கியுள்ளது. அத்தகைய பெருமையை ஈட்டிக் கொடுப்பதற்குக் காரணமாக அமையும் நூல்களை நாம் கண்கள் போல் போற்றுவது எமது கடமை. எனவே நூல் நிலையங்கள் முதலியவற்றில் காணப்படும் நூல்களைக் கிழிக்காமல் பக்குவமாகப் பயன்படுத்துவோம்.

01. ஒரு நாட்டின் பெருமை அந்நாட்டு மக்களின் எதில் தங்கியுள்ளது? ………………..

02. “சிறுமை” என்ற சொல்லின் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக. …………………

03. நூலகங்கள் என்பதன் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக. ………………………….

04. இங்கு இடம்பெறும் உவமைத் தொடரை எழுதுக. ………………………………….

05. கவனமாக என்ற கருத்தைத் தரும் சொல்லை எழுதுக. …………………………...

06. தன்மை பன்மை எதிர்கால வினைச்சொல்லினை எழுதுக. ………………………….

07. பின்வரும் பழமொழிகளைப் பூரணப்படுத்துக.

   i. ……………………………………… கசக்கிக்கட்டு

   ii. ……………………………………… கற்குழியும்

08. பொருத்தமானவற்றுடன் இணைப்போம்.

| | |
|---|---|
| i. பல் | தொடர் |
| ii. ஆ | கூட்டம் |
| iii. கல் | கொத்து |
| iv. முகில் | நிரை |
| v. பூ | கற்றை |
| vi. மலை | வரிசை |
| vii. புகையிலை | குவியல் |

**II. கீழே தரப்பட்டுள்ளவற்றிற்கு அடைப்புக்குள் இருந்து பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

(நாம், மேசை, மாமா, கத்திகள், நான், பிள்ளைகள்)

09. உயர்திணை பன்மைப் படர்க்கைப் பெயர்ச்சொல் …………………………………

10. உயர்திணை ஒருமை தன்மை பெயர்ச்சொல் ……………………………………

11. தன்மை பன்மைப் பெயர்ச்சொல் ………………………………………………

12. அஃறிணை பன்மைப் பெயர்ச்சொல் ……………………………………………..

13. தரப்பட்ட சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியம் எழுதுவோம்.

   i. சரணாலயத்திற்கு / நாங்கள் / பறவைகள் / சென்றோம்

   ……………………………………………………………………………………

   ii. வீரர்களின் / மைதானத்தில் / இடம்பெற்றது / அணிவகுப்பு

   ……………………………………………………………………………………

14. பொருத்தமான சொல்லை அடைப்பினுள் இருந்து தெரிவுசெய்து புள்ளிக்கோட்டில் எழுதுக.

   i. அவன் ஒரு ……………………….. மனிதன் (பலமான / பளமான / பழமான)

   ii. நான் கடையில் ……………………………… வாங்கினேன். (பலங்கள் / பழங்கள் / பளங்கள்)

15. பின்வரும் கூற்று சரியாயின் (சரி) எனவும் பிழையாயின் (பிழை) எனவும் எழுதுக.

   i. நாய் உயர்திணை ஒருமை ஒன்றன்பால் பெயர்ச்சொல்லாகும். (   )

   ii. மனிதன் உயர்திணை பன்மைப் பெயர்ச்சொல்லாகும் (   )

16. ஆண்பாற் சொற்களை பெண்பாற் சொற்களாக மாற்றி எழுதுக.

   i. மாணவன் - ……………………….. ii. பண்டிதன் - ………………………

   iii. புத்திரன் - ………………………

**III. கீழே தரப்பட்டுள்ள இறந்தகால வாக்கியங்களை நிகழ்கால வாக்கியங்களாக மாற்றி எழுதுக.**

17. நான் ஒரு பாடல் பாடினேன். ……………………………………………………

18. மைனாக்கள் பறந்து சென்றன. ……………………………………………………

19. தரப்பட்டுள்ள வாக்கியங்களின் கருத்தை தமிழில் எழுதுக.

   i. I'm your English teacher ……………………………………………………

   ii. This is my leg ……………………………………………………………

   iii. This is a pond - ……………………………………………………………

20. படங்களுக்குரிய சிங்கள கருத்தை தமிழில் எழுதுக.





   i. ………………………… ii. …………………………

21. i. அருகிலுள்ள திண்ம உரு யாது?



   ……………………………………….

   ii. இதில் செவ்வக வடிவிலான முகங்கள் எத்தனை? ……………………………..

   iii. இதில் உள்ள விளிம்புகளின் எண்ணிக்கை யாது? ……………………………

22. 436 புத்தகங்களை ஒருவருக்கு 4 வீதம் கொடுத்தால் எத்தனை பேருக்குக் கொடுக்க முடியும்?

   ……………………………………………………………………………………

23. அப்பா கடைக்குச் சென்று பி.ப. 4.35 மணிக்கு வீடு திரும்பினார். அப்பா வீட்டிற்கு வருகை தந்த நேரத்தை 24 மணித்தியால கடிகார நேரத்தில் எழுதுங்கள்.

   ……………………………………………………………………………………

24. சினிமா தியேட்டர் ஒன்றில் ஒரு வரிசையில் 25 கதிரைகள் வைக்கப்பட்டுள்ளன. இவ்வாறான 4 கதிரை வரிசைகள் இருந்தால், மொத்த கதிரைகளின் எண்ணிக்கை யாது?

   ……………………………………………………………………………………

25. கீழேயுள்ள விலைப்பட்டியலின் இடைவெளிகளை நிரப்புங்கள்

| பொருள் | அளவு | ஒன்றின் விலை | பெறுமதி |
|---|---|---|---|
| புத்தகம் | 5 | 60.00 | 300.00 |
| பேனை | 2 | 15.00 | …………… |
| பென்சில் | 6 | 12.50 | …………… |
| நிறப்பெட்டி | 2 | 45.00 | …………… |
| முழுத்தொகை | | | …………..... |

26. வீதியொன்றில் ஒரு மணித்தியாலத்தில் பயணித்த வாகனங்களின் விபரம் வரைபில் காட்டப்பட்டுள்ளது. அதற்கேற்ப விடைகளை தருக.




   i. ஒரு மணித்தியாலத்தில் பயணித்த வாகனங்களின் மொத்த எண்ணிக்கை யாது?

   ……………………………………………………………………………

   ii. கார்களை விட எத்தனை உந்துருளிகள் அதிகமாக பயணித்துள்ளன?

   ……………………………………………………………………………

27. 1654 எனும் எண்ணின் எண்பெயரை எழுதுக. ……………………………………

28. 


   எண் கீலங்களால் காட்டப்படும் எண் யாது?

   ……………………………………………...

29. எண் கோலத்தை அறிந்து வெற்றிடங்களைப் பூரணப்படுத்துக.

   11, 16, 21, 26, ………, ………..

**IV. சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

30. மரவேலைகளுக்கு பிரதிசித்திப் பெற்ற இடம்
   i. தம்புள்ள ii. தலதா மாளிகை iii. எம்பக்க

31. இலங்கையின் தேசிய விளையாட்டு எது?
   i. எல்லே ii. கால்பந்து iii. கரப்பந்து

32. பூப்பதற்காக சூரியன் வருகையைப் பார்த்திருக்கும் மலர் வகை
   i. பவள மல்லிகை ii. தாமரை iii. ரோசா

33. கோடை காலத்தில் அருந்துவதற்கு மிகவும் பொருத்தமான பானம்
   i. சோடா ii. செவ்விளநீர் iii. பால்

34. சூழல் நேயக்கிருமி கட்டுப்பாட்டுத் திரவம் தயாரிக்கப் பொருத்தமான வித்து
   i. ஆமணக்கு ii. வேம்பு iii. மிளகாய்

35. கண்களின் ஊடாக தகவல்களைப் பெறுவதற்கு எமக்கு உதவும் ஊடகம்
   i. ஒலிபெருக்கி ii. வானொலி iii. பத்திரிகை

36. ஒலிம்பிக் கொடியின் வளையங்களில் உள்ள ஐந்து நிறங்கள் எவை?
   i. நீலம், மஞ்சள், பச்சை, கறுப்பு, வெள்ளை
   ii. நீலம், மஞ்சள், வெள்ளை, கபிலம், சிவப்பு
   iii. சிவப்பு, பச்சை, கபிலம், நீலம், மஞ்சள்

37. தேய்காய்ப்பூவைப் பிழிந்து பெறப்படும் பாலை அடுப்பில் நன்றாகக் காய்ச்சுவதன் மூலம் பெறக்கூடியது
   i. வெண்ணெய் ii. எண்ணெய் iii. நெய்

38. தாவரங்களுக்கு தீங்கு விளைவிக்கும் பிராணி
   i. வண்ணத்துப்பூச்சி ii. தேனீ iii. நத்தை

39. வனைச்சில்லை பயன்படுத்தும் கைத்தொழில் எது?
   i. மீன்பிடி கைத்தொழில் ii. மட்பாண்டக் கைத்தொழில்
   iii. அகழ்வு கைத்தொழில்

(11ஆம் பக்கம் பார்க்க)

(10 ஆம் பக்கத் தொடர்)

# புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - II

40. சுகாதார விடயங்களை பரிசீலனை செய்யும் அலுவலரின் சுருக்கமான பெயராவது?
i. MOH ii. PHI iii. OIC

41. உடல் வளர்ச்சிக்கான உணவு அல்லாதது
i. பருப்பு ii. பாசிப்பயறு iii. குரக்கன்

42. கம்பளி மற்றும் பால் தரக்கூடிய விலங்கு எது?
i. பசு ii. செம்மறி ஆடு iii. ஒட்டகம்

43. இலங்கையை சுற்றியுள்ள சமுத்திரம் எது?
i. அட்லாண்டிக் ii. பசுபிக் iii. இந்து

44. முற்காலத்தில் இலங்கையின் இராஜதானி அல்லாதது?
i. அநுராதபுரம் ii. கொழும்பு iii. தம்பதெனிய

45. இலங்கையில் அமைந்துள்ள துறைமுகம் அல்லாதது
i. பேருவளை ii. கொழும்பு iii. திருகோணமலை

46. பொம்மைகள் மற்றும் முகமூடிகளுக்கு பிரசித்தி பெற்ற நகரமாவது
i. அம்பாந்தோட்டை ii. அம்பலங்கொடை iii. ஹிக்கடுவை

47. மனதை ஒரு நிலைப்படுத்தும் செயற்பாட்டில் 3ஆவது படிமுறை
i. உள்ளத்தை தளர்த்தல் ii. உதிப்பு iii. திடசித்தம்

48. முற்காலத்தில் உணவை நீண்ட காலம் வைத்திருக்க பின்பற்றப்பட்ட முறை அல்லாதது
i. வெயிலில் உலர்த்துதல் ii. பொதி செய்தல் iii. மணலில் இடுதல்

49. விதைகளை நாற்று மேடையில் இட்டு கன்றுகளை பெற்றுக் கொள்ளக்கூடிய தாவரம் எது?
i. மிளகாய் ii. சிறகவரை iii. போஞ்சி

50. மகாவலி கங்கை கடலில் விழும் பிரதேசத்திற்கு உரிய மாகாணம்
i. மேல் மாகாணம் ii. கிழக்கு மாகாணம் iii. தென் மாகாணம்

51. எமது உடலுக்கு உகந்த ஔடத பானம்
i. நெல்லிரசம் ii. தேநீர் iii. பென்டா

52. உணவு வகைகளை சுத்தமாகவும், பாதுகாப்பாகவும் வைத்துக் கொள்வதன் ஊடாக ........................ ஏற்படும்.
i. பல்வேறு நோய்கள் ii. நோயற்ற வாழ்வு iii. பண விரையம்

53. அதிக இனிப்பு கலந்த மாப்பொருள் உணவுகளை உட்கொள்வதால் ஏற்படும் நோய்
i. வாயுப் பிரச்சினை ii. இரத்த அழுத்தம் iii. சலரோகம்

54. இங்கே தரப்பட்டுள்ள பரிசோதனை குறிப்பது
i. நீரைக் கொதிக்க வைத்தல்
ii. நீரைச் சூடாக்குவதனூடாக நீராவியாதல் நிகழ்தல்
iii. உலோகம் விரைவாக சூடாகும் என்பதால்



55. சூரிய கதிரொளியில் காணப்படும் நிறங்கள்
i. ஐந்து ii. ஆறு iii. ஏழு

56. வர்ணச் சக்கரத்தில் மூலவர்ணங்களில் ஒன்று
i. சிவப்பு ii. வெள்ளை iii. கறுப்பு

57. இப்பாத்திரத்தில் இடப்பட்டுள்ள விதைகள் முளைக்காததன் காரணம் என்ன?
i. காற்று கிடைக்காமை
ii. சூரிய ஒளி கிடைக்காமை
iii. தேவையான உரம் கிடைக்காமை




58. பாதையில் செல்லும் போது விபத்துக்கள் குறைவாக ஏற்படுவதற்கான காரணங்கள்
i. நினைத்த இடத்தில் வீதியை கடத்தல்
ii. வீதியின் வலது பக்கமாக நடந்து செல்லல்
iii. இடது புறமாக நடந்து செல்லல்

59. நாம் உண்ணும் உணவுப் பயிர்களுக்கு இடக்கூடிய பொருத்தமான பசளை வகை
i. இரசாயனப் பசளை ii. இயற்கைப் பசளை
iii. இரசாயனப் பசளையும், இயற்கைப் பசளையும்

60. 'டெங்கு நோயில் இருந்து பாதுகாப்பு பெறுவோம்' எனும் தலைப்பில் மூன்று வாக்கியங்களை எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துப் பிழையுமின்றி இருத்தல் வேண்டும்.

.......................................................................................

.......................................................................................

.......................................................................................

## கடந்த வார (26.01.2024) வினாத்தாள் I இற்கான விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 1 | 11. | 3 | 21. | 2 | 31. | 3 |
| 02. | 3 | 12. | 3 | 22. | 3 | 32. | 2 |
| 03. | 1 | 13. | 1 | 23. | 1 | 33. | 1 |
| 04. | 2 | 14. | 2 | 24. | 2 | 34. | 2 |
| 05. | 3 | 15. | 1 | 25. | 2 | 35. | 1 |
| 06. | 2 | 16. | 3 | 26. | 2 | 36. | 1 |
| 07. | 2 | 17. | 3 | 27. | 3 | 37. | 2 |
| 08. | 1 | 18. | 3 | 28. | 1 | 38. | 1 |
| 09. | 3 | 19. | 1 | 29. | 3 | 39. | 1 |
| 10. | 1 | 20. | 3 | 30. | 1 | 40. | 3 |

# இரத்தினபுரி மாவட்டத்தில் நீர்ப்பாசன அபிவிருத்திப் பணிகளுக்கு ரூ.50 கோடி நிதி ஒதுக்கீடு

(பலாங்கொடை தினகரன் நிருபர்)



இரத்தினபுரி மாவட்டத்தில் நீர்ப்பாசன அபிவிருத்திப் பணிகளுக்காக ரூ.50 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக வனப்பாதுகாப்பு மற்றும் நீர்பாசன அமைச்சர் பவித்ரா தேவி வன்னியாரச்சி தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

இரத்தினபுரி மாவட்டம் இலங்கையின் விவசாயத் துறையில் முன்னணி வகிப்பதுடன் மாவட்டத்தில் 20158 ஹெக்டயார் அளவில் நெற்பயிர்செய்கை இடம்பெறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. வயல் நிலங்களில் விவசாயம் செய்வதற்கு தேவையான நீர் வழங்கப்படவுள்ளது.

நீர்ப்பாசன திணைக்களம், மகாவலி அதிகார சபை ஆகிய ஒன்றிணைந்து ஆரம்பித்துள்ள இவ்வேலைத்திட்டத்தின் கீழ் இரத்தினபுரி மாவட்டத்துக்கு ரூ.50 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்நிதியின் மூலம் நீர்ப்பாசன அபிவிருத்தி வாய்க்கால் புனரமைப்பு, உடைந்த வாவிகளை புனரமைத்தல் மற்றும் அந்தந்த பிரதேசங்களில் பொதுமக்களின் வாழ்வாதாரங்களை உயர்த்தும் நோக்கில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் அமைந்துள்ள 18 பிரதேச செயலகப் பிரிவுகளின் 47 சிறிய நீர்ப்பாசன திட்டங்கள் அபிவிருத்தி செய்யப்படும் என அவர் தெரிவித்தார்.

# மாத்தளை மாசிமகம் திருவிழா கொடியேற்றத்துடன் இன்று ஆரம்பம்

மாத்தளை சுழற்சி, நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்கள்



மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் மாசிமகம் திருவிழாவுக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதாக தேவஸ்தான செய்தி தொடர்பாளர் தியாகராஜ கிஷோகுமார் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

இன்று வெள்ளிக்கிழமை காலை 7.00 மணிக்கு கொடி ஊர்வலமும், காலை 11.00க்கு மேல் கொடியேற்ற நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளதுடன் எதிர்வரும் 24ஆம் திகதி சனிக்கிழமை காலை மக நட்சத்திரத்தில் பஞ்சரதபவனியும், 26ஆம் திகதி காலை தீர்த்தோற்சவமும், அன்றிரவு துவஜஅவரோகணமும் நடைபெறவுள்ளது.

சகல புனித நிகழ்வுகளிலும் அம்பிகையடியார்கள் வருகை தந்து அம்பிகையின் அருட்கடாட்சத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு ஆலய பரிபாலன சபை தலைவர் விக்கினேஸ்வரர் சர்வானந்தா, செயலாளர் செல்லையா ஜெயராஜ், பொருளாளர் பெரியசாமி மனோகரன், மற்றும் சகல பரிபாலன சபை உறுப்பினர்களும் கேட்டுகொண்டுள்ளனர். இன்று முதல் எதிர்வரும் 27ஆம் திகதி வரை பகல் 11.00 மணிக்கும், மாலை 7.00 மணிக்கும் சுவாமி உள்வீதி வெளிவீதி வந்து அருள்பாலிக்கவுள்ளார்.

மண்சரிவினால் பாதிக்கப்பட்ட

# மக்களை நேரில் சென்று சந்தித்த ஜனாதிபதி சிரேஷ்ட ஆலோசகர்



மீதும்பிடிய, ஹொப்டன், டெமேரியா தோட்டங்களில் மண்சரிவு அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட குடும்பங்களை பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான வடிவேல் சுரேஷ் நேரில் சென்று சந்தித்து கலந்துரையாடியுள்ளார். இதன்போது மண்சரிவினால் பாதிக்கப்பட்டு தற்காலிக குடியிருப்புகளில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு காணி ஒதுக்கீடு செய்யப்பட்டதுடன் அவர்களின் பிரச்சினைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன.

மீதும்பிடிய ஏ பிரிவில் பாதிக்கப்பட்ட 78 குடும்பங்களுக்கும் ஸ்ரீ கணேஷா பாடசாலைக்கு அருகில் பாதிக்கப்பட்ட 32 குடும்பங்களுக்கும் டெமேரியா ஏ மூன்றாம் இலக்கப் பகுதியிலும் ஹொப்டன் தோட்டத்திலும் பாதிக்கப்பட்ட 145 குடும்பங்களுக்கும் முதலாம் இலக்க மலையில் காணி ஒதுக்கீடு செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# சடலம் மீட்பு

மஹியங்கனை உல்ஹிட்டி பிரதேசத்தில் ஆற்றில் மிதந்து வந்த நிலையில் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொதுமக்களால் வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் நேற்றுமுன்தினம் மஹியங்கனை பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளனர்.

சுமார் 50 - 55 வயது மதிக்கத்தக்க ஆணொருவரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது. இதுதொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் மஹியங்கணை செனவிகம, ஆராவத்த பிரதேசத்தில் கடந்த 29ஆம் திகதி காணாமல் போன 55 வயது மதிக்கத்தக்க குடும்பஸ்தரின் சடலமாக இது இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

சடலத்தை அடையாளம் காட்டுமாறு பொதுமக்களை பொலிஸார் கோரியுள்ளனர். அதேவேளை இதுகுறித்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



மாத்தளை வை.எம். எம்.ஏ.யின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் அண்மையில் மாத்தளை முஸ்லிம் ரீடிங் ரூம் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. மாத்தளை ஆதார வைத்தியசாலை இரத்த வங்கியில் நிலவும் குருதிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் நோக்கில் இரத்த தான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்நிகழ்வில் கலந்து கொண்ட மாத்தளை மாவட்ட வைத்தியர்கள் மற்றும் வை.எம்.எம்.ஏ உறுப்பினர்களை படத்தில் காணலாம். (படங்கள்; மாத்தளை சுழற்சி நிருபர்)

# வாக்காளர் இடாப்பில் பதிவு செய்வதில் பொதுமக்கள் அலட்சியம்

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

இரத்தினபுரி மாவட்டத்தில் வாழும் தமிழ் பேசும் மக்கள் தமது பெயர்களை வாக்காளர் இடாப்பில் பதிவுசெய்து கொள்ளுமாறு முன்னாள் சப்ரகமுவ மாகாண சபை உறுப்பினர் இப்லார் யெஹியா அறிவுறுத்தியுள்ளார்.

தற்போது வாக்காளர் இடாப்பில் பெயர்களைப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் கிராமசேவை அலுவலர்களால் முன்னெடுக்கப் படுகிறது. இவ்விடயத்தில் அதிக கவனம் செலுத்தி தமது பெயர்களைப் பதிவு செய்ய தவறவிட்டவர்களுக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம் வழங்கப்படும்.

எனவே தமிழ் பேசும் மக்கள் இவ்விடயத்தில் அவதானமாக இருக்கவேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரி மாவட்டத்தில் பெரும்பாலான தமிழ், முஸ்லிம்கள், கிறிஸ்தவ மற்றும் சிறுபான்மை மக்கள் தமது பெயர்களை பதிவு செய்து கொள்ளாமை தெரியவந்துள்ளது. அதுமட்டுமின்றி இரத்தினபுரி மாவட்டத்தில் புதிய வாக்காளர்கள் தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளும் வீதம் குறைவாக இருப்பது தெரியவந்துள்ளது.

இளைஞர் யுவதிகளிடம் காணப்படும் அறியாமை, அலட்சியம் என்பன இதற்கு காரணமாகவுள்ளன.

அத்துடன் வாக்காளர் இடாப்பில் தமது பெயர்கள் இடம்பெறுவது வாக்களிப்பதற்கு மட்டுமே என பெரும்பாலானவர்கள் நினைக்கின்றனர். எதிர்கால தொழில் வாய்ப்புகளுக்கு கூட இப்பதிவு கைகொடுக்கும் என்பதை பலர் அறிவதில்லை என அவர் தெரிவித்தார்.

# இலங்கை மக்களிடம் மன்னிப்புக் கோரல்

வழக்கு இல. 94662/சுகாதாரம்/2024 (பீ2783/2023) என்ற வழக்கின் ஹேலப்பி ஆரச்சிகே தினூக கௌஷல்ய இல. 35, நதீபியச, பம்பரகொட, வெல்லவ என்ற முகவரியில் வசிக்கும் நான், 2015 இல. 05 தேசிய ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகார சபை சட்டம் 131(1)(இ) பிரிவின் பிரகாரம் மேற்படி வழக்கு இலக்கத்தின் கீழ் அதற்கு குற்றவாளியாக நான் ஏற்றுக் கொண்டு அதனோடு சம்பந்தப்பட்ட தண்டத் தொகையான ரூ. 30,000/-ஐ செலுத்தி 2024.01.29 கௌரவ நீதிமன்ற கட்டளையின் பிரகாரம் குறித்த விடயங்களை மேற் கொண்டதாக இத்தால் பொது மக்களுக்கு அறிவித்துக் கொள்கிறேன்.

**2007 இல. 07 கம்பனிகள் சட்டத்தின் 9(1) பிரிவின் கீழ் கீழ்க்காணும் கம்பனிகள் கூட்டிணைக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.**

| | | |
|---|---|---|
| கம்பனியின் பெயர் | : | **ஐபினிட்டி ஒப்டிக்ஸ் (பீவீடீ) எல்டீடி** |
| கம்பனியின் இலக்கம் | : | **PV00286904** |
| கூட்டிணைக்கப்பட்ட திகதி | : | **2023 ஒக்டோபர் 18** |
| பதிவு அலுவலக முகவரி | : | **இல. 162/2, கண்டி வீதி, கேகாலை.** |
| பணிப்பாளர் | : | **எஸ்.எம்.ஏ.டீ. சமரதுங்க** |

## காணி எடுத்தற் சட்டத்தின் ( அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

**லக்கல பிரதேச செயலாளரின் குறிப்பு இல : 11/3/3/1/14T**

**காணி அமைச்சின் குறிப்பு இல : LD/05/2008/MV/408J**

இங்கு கீழே காட்டப்பட்டிருக்கும் அட்டவணையில் விபரிக்கப்படும் காணியை மொரகஹகந்த, களுகங்கை அபிவிருத்தித்திட்டத்திற்காக எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணிருக்கிறார்கள். மேலதிக விபரங்களுக்கு இலக்கம் 2356/36 கொண்ட 2023.11.03 திகதிய இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு அதிவிஷேட வர்த்தமானியைப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| மாவட்டம் | : | மாத்தளை |
| பிரதேச செயலகப் பிரிவு | : | லக்கல - பல்லேகம |
| கிராம அலுவலர் பிரிவு | : | இல.E 396 B அகரஹெடிய |
| கிராமம் | : | புதிய லக்கல பழைய அமுனேவெல (குறிப்பிட்ட ஆரம்ப வரைபடத்திற்கு இணங்க) |
| காணியின் பெயர் | : | மேற்குறித்த இலக்கம் கொண்ட அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் படி |
| வரைபட இலக்கம் | : | க.சீ 310243, வலய இல. 28 பத்திர இல. 4 |
| துண்டு இலக்கம் | : | 1,3,7 |
| விஸ்தீரணம் | : | 23.1688 ஹெக்டயார் |
| வரைபட இலக்கம் | : | க.சீ 310243, வலய இல. 22 பத்திர இல. 3 |
| துண்டு இலக்கம் | : | 1,3 |
| விஸ்தீரணம் | : | 6.1104 ஹெக்டயார் |

**ச்வர்ணா பெரேரா**
**பிரதேச செயலாளர்**
**லக்கல**

**2024.01.29 ஆம் திகதி**
**லக்கல பிரதேச செயலகத்தில்**

## காணி சுவீகரித்தல் சட்டத்தின் (460ஆம் அத்தியாயம்) 33ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

**எனது இல - பென்/2/7/3/11/3**
**பென்/2/7/3/11/2**

தென் மாகாணத்தின் காலி மாவட்டத்தின், பெந்தோட்ட பிரதேச செயலாளர் பிரிவில், பிரதேச செயலாளர் பந்துல பிரீதி ராஜ் அபே சேக்கர ஆகிய என்னால் காணி சுவீகரிப்புச் சட்டத்தின் (460 ஆம் பந்தி) 33ம் பிரிவின் கீழ், குறிப்பிடப்படும் முதலாம் அட்டவணை மற்றும் இரண்டாம் அட்டவணையின் கீழ் விபரிக்கப்படும் காணியை சுவீகரித்தல் சார்பாக கீழ்க்காணும் குறித்த நஷ்டஈடு மற்றும் வட்டித் தொகையை உரிமையாளர்களுக்கு/ உரித்துரிமையாளர்களுக்கு பெற்றுக் கொள்ளும் முகமாக எல்பிட்டிய மாவட்ட நீதிமன்றத்தில் கீழ்க்காணும் வழக்கு இலக்கத்தின் கீழ் வைப்புச் செய்யப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கிறேன்.

**திகதி - 2024.01.24**

**பீ.பி. அபேசேக்கர**
**பிரதேச செயலாளர்**
**பெந்தோட்டை**

**முதலாம் அட்வணை**

தென் மாகாணத்தின், காலி மாவட்டத்தின், பெந்தோட்ட பிரதேச செயலாளர் பிரிவில், இல. 14ஏ, மிரிஸ்வத்த கிராம அதிகாரி பிரிவில் மிரிஸ்வத்த கிராமத்தில் அமைந்துள்ள, சேர்வியர் ஜெனரலின் கா.2898 என்ற அடிப்படை வரைபடத்தின் துண்டு இல. 01 என குறிப்பிடப்படும் முழு அளவில் 5.854 ஹெக்டயர் கொண்ட "மிரிஸ்வத்த மஹகுருந்த" என்ற காணி,

வழக்கு இலக்கம்: SP - 312
வைப்புச் செய்துள்ள நஷ்டஈட்டுத் தொகை ரூ. 8,675,000.00
உரித்துரிமை கோருவரின் பெயர் - துசித்தா தாப்ரூ

**இரண்டாம் அட்வணை**

தென் மாகாண, காலி மாவட்டத்தின், பெந்தோட்ட பிரதேச செயலாளர் பிரிவில், இல.14ஈ, எதுங்கா கொட கிராம அதிகாரி பிரிவில் கனஹேன்தொட்ட கிராமத்தில் அமைந்துள்ள, சேர்வியர் ஜெனராலின் கா. 2886 என்ற அடிப்படை வரைபடத்தின் துண்டு இலக்கம் 01 என குறிப்பிடப்படும் முழு அளவில் 3.705 ஹெக்டயர் கொண்ட முனசிங்ஹவத்த" எனப்படும் "போகஹகொட" எனப்படும் "கஹறேன்தொட்ட கெலே" போகஹகொட" எனப்படும் "கஹஹேன்தொட்ட கெலே" எனப்படும் காணி

**வழக்கு இலக்கம் - SP - 210**
வைப்புச் செய்துள்ள நஷ்ட ஈட்டுத் தொகை - ரூ. 52,380.00
வைப்புச் செய்துள்ள வட்டித் தொகை - ரூ. 25,042.41
உரித்துரிமை கோருபவரின் பெயர் - டி.ஏ.முனசிங்ஹ (இறந்துள்ளார்)

**வழக்கு இலக்கம் - SP - 211**
வைப்புச் செய்துள்ள நஷ்ட ஈட்டுத் தொகை - ரூ. 366,666.67
வைப்புச் செய்துள்ள வட்டித் தொகை - ரூ. 168,068.08
உரித்துரிமை கோருபவரின் பெயர் - டீ.வி.முனசிங்ஹ (இறந்துள்ளார்)

**வழக்கு இலக்கம் - SP - 212**
வைப்புச் செய்துள்ள நஷ்ட ஈட்டுத் தொகை - ரூ. 366,666.67
வைப்புச் செய்துள்ள வட்டித் தொகை - ரூ. 168,068.08
உரித்துரிமை கோருபவரின் பெயர் - டீ.ஈ. முனசிங்ஹ (இறந்துள்ளார்)

**வழக்கு இலக்கம் - SP - 213**
வைப்புச் செய்துள்ள நஷ்ட ஈட்டுத் தொகை - ரூ. 366,666.66
வைப்புச் செய்துள்ள வட்டித் தொகை - ரூ. 168,068.08
உரித்துரிமை கோருபவரின் பெயர் - டீ.டி.முனசிங்ஹ (இறந்துள்ளார்)

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**
**7ஆம் வசனத்தின் கீழ் அறிவித்தல்**

**எனது இலக்கம் : பீஎல்டீஎஸ் / எல்என்டீ / 7 / 1 / 8 / 131**

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியின் ஆட்சி உரிமையை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள். மேலதிக விபரங்களுக்கு இலக்கம் 2365/32 மற்றும் 2024.01.03 ஆந் திகதியிடப்பட்ட இலங்கை அரசாங்கத்தின் அதிவிஷேட வர்த்தமானி பத்திரத்தை III பகுதியைப் பார்க்கவும்.

**லக்ஷிகா மிகெல்ஆரச்சி,**
**பிரதேச செயலாளர்,**
**பலாங்கொடை**

**2024.01.24 திகதி**
**பிரதேச செயலாளர் காரியாலயத்தில்.**

**காணியின் பெயர் :**
அராவ கமகெதரவத்த

**காணியின் இருப்பிடம் :**
சப்ரகமுவ மாகாணத்தின், இரத்தினபுரி மாவட்டத்தின், பலாங்கொடை பிரதேச செயலாளர் பிரிவின், இல. 254 மச்சென்ன கிராம சேவகர் பிரிவின் மச்சென கிராமம்.

**தெரிவும் துண்டு இலக்கமும் :**
காணி வரைபட இல 620083 தொகுதி 07, பத்திரிகை இல. 04 வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட துண்டு இலக்கம் 1,2,3,4,5 மற்றும் 6

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிறைவெட்) லிமிடெட்**
**பெறுகை இல.: 066/T/2022**
**பிதுருதலாகல, ராடார் மற்றும் தொடர்பாடல் நிலையத்தில் VHF வான் தரை தொடர்பாடல் அமைப்பின் வழங்கல், நிறுவுதல் மற்றும் செயற்பட வைத்தலுக்கான விலைமனு கோரல்**

**பிதுருதலாகல, ராடார் மற்றும் தொடர்பாடல் நிலையத்தில் VHF வான் தரை தொடர்பாடல் அமைப்பின் வழங்கல், நிறுவுதல் மற்றும் செயற்பட வைத்தலுக்காக** விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிறைவெட்) லிமிடெட், தலைவரினால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விலைமனுதாரர் மூலம் வழங்கப்படும் உத்தியோகபூர்வ கோரிக்கை கடிதம் ஒன்றுடன் சேர்த்து **மீளளிக்கப்படாத விலைமனு ஆவணக் கட்டணமாக ரூபா இருபதாயிரத்தை (ரூபா 20,000.00)** ரொக்கப்பணமாக செலுத்தி கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிறைவெட்) லிமிடெட், வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவில் இருந்து பெறப்பட்டது அல்லது ஒன்லைனில் (50.00 அமெரிக்க டொலர்) மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்துவதன் மூலம் www.airport.lk என்ற இணையதளத்தில் தரவிறக்கம் செய்த ஆவணங்களில் விலைமனுக்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிறைவெட்) லிமிடெட், வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவு அலுவலகத்தில் இருந்து **2024.02.06 ஆம் திகதி தொடக்கம் 2024.03.26 ஆம் திகதி வரை** எந்த ஒரு வேலை நாட்களிலும் **மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை** விலைமனு ஆவணங்களை கொள்வனவு செய்யலாம். மேலுள்ள முகவரியில் விலைமனு ஆவணங்களை கட்டணம் இன்றி பரீட்சிப்பதற்காக கிடைக்கப்பெறும்.

கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிறைவெட்) லிமிடெட், வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவில் இந்த நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள பெட்டியில் விலைமனுக்களை இடுதல் வேண்டும். விலைமனுதாரர்கள் விரும்பினால் மேலுள்ள முகவரிக்கு முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை நேரடியாக ஒப்படைக்கலாம்.

விலைமனுக்களை ஏற்பது **2024 மார்ச் 27 ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 2.00க்கு** நிறைவடையும் என்பதோடு, அதன் பின் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிறைவெட்) லிமிடெட், வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவில் உடன் திறக்கப்படும். விலைமனுக்களை திறக்கும் நேரத்தில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் முறையான அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் பங்கேற்கலாம்.

விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிறைவெட்) லிமிடெட், தலைவருக்கு செலுத்தக்கூடிய, இலங்கையில் இயங்கும் மத்திய வங்கி மூலம் அங்கீகரிக்கப்பட்ட வங்கி ஒன்றினால் வழங்கப்பட்ட வங்கி உத்தரவாத வடிவத்தில் இலங்கை **ரூபா இரண்டு மில்லியனே எழு நூறாயிரத்திற்கு (ரூபா 2,700,000.00)** நிகரான கோரும்போது பெறத்தக்க விலைமனு பிணை ஒன்றை விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு **2024.02.20 ஆம் திகதி மு.ப. 10.00 க்கு நுவரெலியா, பிதுருதலாகல, ராடார்** மற்றும் தொடர்பாடல் நிலையத்தில் இடம்பெறும். இதில் பங்கேற்க விலைமனுதாரர் அல்லது அவரின் பிரதிநிதி கோரப்படுவதோடு (அதிகபட்சம் மூன்று (03) நபர்கள்) விலைமனுவுக்கு முந்திய சந்திப்புக்கு ஏழு (07) நாட்களுக்கு முன்னர் தமது விபரங்களை (பெயர்/தே.அ.அ./வாகன இல.) வழங்க வேண்டும்.

வேறு மேலதிக விபரங்களை **www.airport.lk** என்ற எமது இணையதளத்திற்கு பிரவேசிப்பதன் மூலம் அல்லது : head.scm@airport.lk என்ற மின்னஞ்சல், 011-2264103 / 011-2264102 என்ற தொலைபேசி இலக்கங்களில் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிறைவெட்) லிமிடெட், வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவில் இருந்து பெற முடியும்.

**தலைவர்,**
**விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிறைவெட்) லிமிடெட்,**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்,**
**கட்டுநாயக்க**

# வாகனங்கள் விற்பனைக்கு

| வாகன இல. | வகை | மாதிரி | வருடம் |
|---|---|---|---|
| **கார்** | | | |
| 016 -7XXX | NISSAN | SUNNY HB12 | 1985 |
| 017 -1XXX | MITSUBISHI | C62ASNJR | 1990 |
| HV -4XXX | HONDA | CITY VTEC 4A | 2001 |
| KU -4XXX | MICRO | TREND | 2012 |
| **கெப்** | | | |
| 052 -4XXX | TOYOTA | HILUX | 1991 |
| **வேன்** | | | |
| 48 -9XXX | MITSUBISHI | L300 | 1980 |
| 050 -9XXX | TOYOTA | LITEACE | 1985 |
| **லொறி** | | | |
| LD -7XXX | TATA | ACE | 2007 |
| PP -6XXX | TATA | ACE | 2010 |
| PS -3XXX | TATA | SUPER ACE | 2011 |
| PT -7XXX | TATA | ACE | 2011 |
| PS -6XXX | MAHINDRA | MAXXIMO | 2012 |
| PS -7XXX | MAHINDRA | MAXXIMO | 2012 |
| DAG -2XXX | TATA | SUPER ACE | 2018 |
| **முச்சக்கர வண்டிகள்** | | | |
| GE -9XXX | BAJAJ | BAJAJ AUTO | 2000 |
| GJ -8XXX | BAJAJ | BAJAJ AUTO | 2001 |
| JP -1XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2004 |
| QA -2XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2005 |
| QB -7XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2005 |
| QE -0XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QE -4XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QH -3XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QH -6XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QI -7XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QO -2XXX | BAJAJ | AUTO AR4S | 2008 |
| QW -6XXX | BAJAJ | AR4S-UG | 2010 |
| YC -7XXX | BAJAJ | AR4S-UG | 2010 |
| YF -4XXX | BAJAJ | RE 205 | 2010 |
| ABB -4XXX | PIAGGIO | APE | 2015 |

வாகன பரிசீலித்தல்களுக்கு:
**மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ**
வாகன முற்றம் - இல.176, வாவி வீதி, மஹரகம.
தொ.பேசி : 0112 088 505

**வாகன பரிசீலித்தல்களுக்கான திகதிகள்**

மேற்குறிப்பிட்ட விலாசத்தில் 2024 பெப்ரவரி 2ஆம், 6ஆம், 7ஆம் மற்றும் 8ஆம் திகதிகளில் மு.ப.9.00 முதல் பி.ப.5.00 வரை பரிசீலிக்க முடியும். (கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படுவது 2024 பெப்ரவரி 8ஆம் திகதி பி.ப.5.00 மணியுடன் நிறைவுபெறும்)

மீளப் பெற முடியாத கட்டணமான ரூ.200/-ஐ செலுத்தி கேள்வி படிவங்களை மேற்குறித்த விலாசத்தில் மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ வாகன முற்றத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம். வெற்றிகரமான கேள்விதாரர் தொலைபேசியூடாக அறிவிக்கப்படுவதுடன் அதனுடன் தொடர்பான வாகனம் அறிவிக்கப்பட்டதிலிருந்து 7 நாட்களுக்குள் அப்புறப்படுத்தப்பட வேண்டும். கேள்வியிலிருந்து எந்தவொரு காரணத்தையும் கூறாமல் எந்தவொரு வாகனத்தையும் விலக்கிக் கொள்ள கம்பனிக்கு பூரண உரிமையுண்டு. அத்தோடு வெற்றிகரமான கேள்விதாரர் வாகனத்தை அதன் தற்போதைய நிலையிலேயே பொறுப்பேற்க வேண்டியதோடு, அதனுடன் தொடர்பான அரச வரி மற்றும் வாகன வருமான உத்தரவுப் பத்திரம் போன்றவற்றின் நிலுவைக் கட்டணங்கள் இருப்பின் அவற்றையும் கேள்விதாரரே பொறுப்பேற்க வேண்டும்.

இக் கேள்விகள் தொடர்பான மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ இன் முடிவுகளே இறுதியானதாகும்.

மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சி

Mercantile Investments and Finance PLC

தலைமை அலுவலகம்
236, காலி வீதி, கொழும்பு - 03
தொ.பேசி: 2343720 - 7 நீட்சி: 210

தொடர்பு:
ஜானக்க - 071 1624559 / மொதித - 071 9530350

www.skillsads.com

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### கல்வி அமைச்சு

**இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்**
**(SLIATE)**

**பெறுகை அறிவித்தல்**

SLIATE

**பாதுகாப்பு சேவையைப் பெற்றுக்கொள்ளல் - 2024/25**

இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் தலைமை அலுவலகம் மற்றும் நாடு முழுவதும் அமைந்துள்ள உயர் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு பாதுகாப்புச் சேவையைப் பெற்றுக்கொள்வதற்காக பாதுகாப்பு அமைச்சில் பதிவைப் பெற்றுள்ள தகைமை வாய்ந்த பாதுகாப்பு சேவை நிறுவனங்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

பாதுகாப்பு சேவைகள் வழங்குதல் தொடர்பில் ஆர்வம் காட்டும் நிறுவனங்கள் இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் (தலைமை அலுவலகம்) கணக்காளரிடம் 6000.00 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தை ரொக்கப் பணமாகச் செலுத்துவதன் பேரில் இயைபுடைய கேள்விப் படிவங்களை இல. 320, ஜனவத்து பியச, டீ. பீ. ஜாயா மாவத்தை, கொழும்பு-10 எனும் இடத்தில் அமைந்துள்ள இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் மாத்திரம் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பப் படிவங்கள் 2024-02-02ஆம் திகதி முதல் 2024-02-22ஆம் திகதி வரையான வேலை நாட்களில் பி.ப. 3.00 மணி வரையான அலுவலக நேரங்களில் விநியோகிக்கப்படும்.

கணக்காளரிடம் பணம் செலுத்தியதன் பின் வழங்கப்படும் பற்றுச்சீட்டின் பிரதியை விலைமனுவுடன் இணைத்து 2024-02-22ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம், இல. 320, ஜனவத்து பியச, டீ. பீ. ஜாயா மாவத்தை, கொழும்பு-10 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது பெறுகை பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

கேள்விப் படிவங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்திற்கு பாதுகாப்புச் சேவையை பெற்றுக்கொள்ளல் 2024'' எனக் குறிப்பிடுதல் வேண்டும். 2022-02-22ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு விலைக்கோரல் விண்ணப்பங்கள் திறக்கப்படும் என்பதுடன் விலைமனுதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் இந்நிகழ்வில் கலந்து கொள்ளலாம்.

**பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்,**
**இல. 320, ஜனவத்து பியச,**
**டீ. பீ. ஜாயா மாவத்தை,**
**கொழும்பு-10**


Marriage Proposals in the Sunday Observer Is the best way to fulfil your Future Dreams


# இலங்கை வங்கி

## இலங்கை வங்கி வரையறுக்கப்பட்ட சேவைக் கிளையை நிறுவுவதற்காக நீண்டகால குத்தகை அடிப்படையில் பொருத்தமான கட்டடமொன்று தேவைப்படுகின்றது

### கொஸ்கம

### உத்தேசக் கட்டடம் பின்வரும் வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்

- கட்டடம் சட்டபூர்வமாக நிர்மாணிக்கப்பட்டிருத்தல் வேண்டும்
- தரைப் பரப்பு குறைந்தபட்சம் 3,700 சதுர அடி அளவைக் கொண்டதாகவிருத்தல் வேண்டும்.
- பிரதான வீதியிலிருந்து கட்டடம் 30 அடிகள் முற்றத்தையும் முகப்பாக குறைந்தபட்சம் 45 அடிகள் முகப்பையும் கொண்டு நகரத்தின் வர்த்தக எல்லைக்குள் அமைந்திருத்தல் வேண்டும்.
- கட்டடத்தின் பின்புறத்தை கிறில் இடப்பட்ட 100 சதுர அடி அளவிலான மின்பிறப்பாக்கி அறை அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அதற்கான நுழை பாதையும் இருத்தல் வேண்டும்.
- வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கு போதுமான இடவசதி இருத்தல் வேண்டும். (குறைந்தபட்சம் 06 வாகனத்திற்கான இடம் விரும்பத்தக்கது)
- ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனத்தின் தொலைபேசி இணைப்பை பெற்றுக்கொள்வதற்கான வசதிகள் இருத்தல் வேண்டும்.
- மூன்று நிலை மின்சாரம் (60A), இருத்தல் வேண்டும் என்பதுடன் மின்சார முறைமையானது அலுவலகத்திற்குப் பொருத்தமான வகையில் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
- தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் நீர் வழங்கல் வசதி இருத்தல் வேண்டும் என்பதுடன் பொருத்தமான உயர்ந்த இடத்தில் ஆகக் குறைந்த 1000 லீற்றர் கொள்ளளவைக் கொண்ட நீர்த் தாங்கியொன்று வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
- ஆகக் குறைந்தது 02 மலசலகூடங்கள் இருத்தல் வேண்டும் என்பதுடன் அவை பெண்கள் மற்றும் ஆண்கள் வெவ்வேறாக பயன்படுத்தக்கூடிய வகையில் இருத்தல் வேண்டும்.
- தரைக்கு முழுமையாக தரையோடுகள் (2x2 அடி) பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் கட்டடத்திற்கு சீலிங் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
- கட்டடத்தின் பின்புறக் கதவு ஜன்னல்களுக்கு பாதுகாப்பு கிறில் இடப்பட்டிருத்தல் வேண்டும்.
- கட்டடத்தின் முன்புறம் டெம்பர்ட் கண்ணாடி இடப்பட்டு மறைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
- கட்டடம் தீக் காப்புறுதி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

இது தொடர்பில் ஆர்வம் காட்டும் கட்டட உரிமையாளர்கள், ஒப்புதல் அளிக்கப்பட்ட கட்டட வரைபடம், காணித்துண்டின் வரைபடம், உரிமைத்துவ உறுதி, இணக்கச் சான்றிதழ் (COC) போன்ற ஆவணங்களின் பிரதிகள் என்பவற்றுடன் எதிர்பார்க்கும் மாதாந்த வாடகையைக் குறிப்பிட்டு இந்த விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட நாள் முதல் 14 நாட்களுக்குள் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''இலங்கை வங்கி கொஸ்கம வரையறுக்கப்பட்ட சேவைக் கிளைக்கான பொருத்தமான கட்டடமொன்று'' எனக்குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

**உதவிப் பொது முகாமையாளர்,**
**(மேல் மாகாணம் தெற்கு),**
**இலங்கை வங்கி,**
**மேல் மாகாணம் (தெற்கு) மாகாண அலுவலகம்,**
**ஹைலெவல் வீதி, நுகேகொட.**

**தொலைபேசி: 011-2809125/0112809126**
**தொலைநகல்: 011-2809238**
**மின்னஞ்சல்: bocwps@boc.lk**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்


The largest Job Market in Sri Lanka

www.observerjobs.lk




Widest reach for your employment advertisement
Email : info@observerjobs.lk Hotline: 1949
For more information
0777270012 / 0777270000 / 0112429314

## மரணசாசனமில்லா சொத்தை உரிமை கோருவதற்கான அறிவித்தல்

### 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்து பதிவுச் சட்டம் பிரிவு 55

காலி மாவட்டத்தின் நான்கு சூழற் பிரதேச செயலாளர் பிரிவில் மகுலுவ 99C கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள கடத்திரள் வரைபட இல. 810013, பிரிவு இல 02, தாள் இல 02, துண்டு இல 64 ஐக் கொண்ட காணியையும் மற்றும் வெலிவத்த 97A கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள கடத்திரள் வரைபட இல. 810029, பிரிவு இல .06, தாள் இல 01, துண்டு இல 157 ஐக் கொண்ட காணியையும் உடைமை கொண்டிருந்த இல. 97/6, ஜெமீல் மாவத்தை, கனம்பிட்டிய, காலி எனும் முகவரியைச் சேர்ந்த முகம்மது சஹீத் முகம்மது கைசர் என்பவர் 05.01.2023 ஆந் திகதி மரணமடைந்துள்ளார். அவரது உரித்தாளர் எவரேனும் இல. 25/1, பத்தேகம வீதி, ஹிரிம்புர, காலி என்ற இடத்தில் அமைந்துள்ள காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்துக்கு 04.03.2024 ஆந் திகதிக்கு முன்னர் சமுகம் தரவும்.

**ஆணையாளர் நாயகம்**
**காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்.**

## மரணசாசனமில்லாத சொத்தை உரிமை கோருவதற்கான அறிவித்தல்

### 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்து பதிவுச் சட்டம் பிரிவு 55

கம்பஹா மாவட்டத்தின் அத்தனகல்லை பிரதேச செயலாளர் பிரிவில் வடத்தர எனும் கிராமத்தில் அமைந்துள்ள கடத்திரள் வரைபட இல. 510617 கண்ட இல. 02 பத்திர இல. - துண்டு இல. 129 ஐக் கொண்ட காணியை உடைமை கொண்டிருந்த

**இல. 129/28, கிந்தமுல்ல தோட்டம், வடத்தர, வேயன்கொட எனும் விலாசத்தைக் கொண்ட திரு. ரத்ணசேகர ஆராச்சிகே ஷெல்டன்**

எனும் ஆள் மரணமடைந்துள்ளார். அவரது உரித்தாளர் எவரேனும் படதொலை வீதி, நிட்டம்புவ என்ற இடத்தில் அமைந்துள்ள காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்துக்கு 2024.02.02 ஆம் திகதிக்கு முன்னர் சமுகம் தரவும்

**ஆணையாளர் நாயகம்,**
**காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்.**

## சர்வதேச போட்டி ரீதியிலான விலைமனுக்களுக்கான அழைப்பு

### இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (சுத்திகரிப்புப் பிரிவு)

### பகிரங்கக் கேள்வி – 4498T

### HAND CHAIN HOISTS வழங்குதல்

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன, இலங்கை, களனிய, சப்புகஸ்கந்த சுத்திகரிப்புப் பிரிவு, திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவரினால் அங்கீகரிக்கப்பட்ட உற்பத்தியாளர்கள், வெளிநாடுகளிலுள்ள அவர்களது அதிகாரம்பெற்ற ஏற்றுமதியாளர்கள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்களிடமிருந்து (உற்பத்தியாளர்கள் அல்லது ஏற்றுமதி முகவர்கள்) விலைகோரல் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரக்குறிப்புகள் மற்றும் நிபந்தனைகளுக்கு முழுமையாக அமையும் வகையில் மேற்குறிப்பிட்ட பொருளை வழங்குவதற்கான முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

எந்தவொரு கேள்விதாரரும் கேள்வியைச் சமர்ப்பிக்கும்போது வேண்டுகோள் கடிதத்துடன் மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாக 1,000.00 ரூபாவை 2024 பெப்ரவரி 26ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரையான அலுவலக நாட்களில் கொழும்பு - 09, இல. 609, டாக்டர் டனிஸ்டர் டீ சில்வா மாவத்தை, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன தலைமை அலுவலகத்தின் 05ஆம் மாடியிலுள்ள காசாளரிடம் செலுத்துதல் வேண்டும் அல்லது களனி, சப்புகஸ்கந்த, சுத்திகரிப்புப் பணியகத்தின் காசாளரிடம் ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும். மேலும் சகல கொடுப்பனவுகளையும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் மக்கள் வங்கியில் பேணப்படும் 004100110208633 எனும் கணக்கிலக்கத்தின் ஊடாக கேள்வி இலக்கம் மற்றும் கேள்விதாரரின் பெயரை சுருக்கமாகக் குறிப்பிட்டு பணத்தை செலுத்தலாம்.

கேள்வி நிபந்தனைகள் மற்றும் விபரக்குறிப்புகள் அடங்கிய கேள்வி ஆவணங்கள் www.ceypetco.gov.lk மற்றும் www.dgmarket.com எனும் இணையதளங்களில் கிடைக்கத்தக்கதாக உள்ளன.

மாற்றுவழியாக கேள்வி ஆவணங்களை கீழ்க்குறிப்பிடப்பட்ட விலாசத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

விலைமனு ஆவணங்கள் 2024 பெப்ரவரி 28ஆம் திகதி பி.ப. 2.30 மணி வரை திணைக்கள பெறுகைக் குழுத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படுவதோடு, அன்றைய தினமே உடனடியாக அவைகள் சுத்திகரிப்பு நிலைய மாநாட்டு மண்டபத்தில் திறக்கப்படும்.

**முகாமையாளர் (பொருள்வளம்),**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**சுத்திகரிப்புப் பிரிவு, சப்புகஸ்கந்த,**
**களனி, இலங்கை.**
**தொலைபேசி: 0094-11-2400110**
**மின்னஞ்சல்: ref.materials@ceypetco.gov.lk**

## மரணசாசனமில்லா சொத்தை உரிமை கோருவதற்கான அறிவித்தல்

### 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டம் பிரிவு 55

கொழும்பு மாவட்டத்தின் ஹோமாகம பிரதேச செயலாளர் பிரிவில் பிட்டிபன தெற்கு எனும் கிராமத்தில் அமைந்துள்ள கடத்திரள் வரைபட இல 520007 கண்ட இல. 11 பத்திர இல. - துண்ட இல. 0105 ஐக் கொண்ட காணியை உடைமை கொண்டிருந்த இல. 10, யு.சி. வீடுகள், வடுகொடவத்த, மீதொட்டமுல்ல எனும் விலாசத்தைக் கொண்ட மல்வத்த மல்தெனியகே ரஞ்சித் (2023.08.31) எனும் ஆள் மரணமடைந்துள்ளார். அவரது உரிமையாளர்கள் 2024.03.02ஆம் திகதிக்கு முன் இல. 06, முதலாம் லேன், ரயில் நிலைய வீதி, ஹோமாகம என்ற இடத்தில் அமைந்துள்ள காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்திற்கு சமுகம் தரவும்

**ஆணையாளர் நாயகம்**
**காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்.**

## அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகிறது.

கம்பனியின் பெயர்:
**சீடெப் டெக்னொலொஜீஸ் (பீவீடீ) எல்டிடி**

பதிவிலக்கம்:
**PV 00290773**

பதிவு முகவரி:
**இல.722, ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க மாவத்தை, கொழும்பு 01400, இலங்கை**

**செயலாளர்**

## மரணசாசனமில்லா சொத்தை உரிமை கோருவதற்கான அறிவித்தல்

### 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்து பதிவுச் சட்டம் பிரிவு 55

பதுளை மாவட்டத்தின் ரித்மாலியத்த பிரதேச செயலாளர் பிரிவில் பெத்தியகொட எனும் கிராமத்தில் அமைந்துள்ள கடத்திரள் வரைபட இல 710012 கண்ட இல 12 பத்திர இல 01 துண்ட இல 61 ஐக் கொண்ட காணியை உடைமை கொண்டிருந்த.

பெத்தியகொட, கெவன்வத்த, மகியங்கனை (விலாசம்)

எனும் விலாசத்தைக் கொண்ட வாசல வன்னி, முதியன்சேலாகே, செனவிரத்ன (முழுப்பெயர்)

எனும் ஆள் 2016.08.21 மரணமடைந்துள்ளார் அவரது உரித்தாளர் எவரேனும் இல. i/118/4, கலகெதர வீதி, கடுகச்தொட என்ற இடத்தில் அமைந்துள்ள காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்திற்கு 2024.03.01 ஆந் திகதிக்கு முன்னர் சமுகம் தரவும்

**ஆணையாளர் நாயகம்**
**காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்.**

## பெறுகை அறிவித்தல்

**(மாகாண வீதிகள், போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தகம், வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில், மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு - மேல் மாகாணம்)**

### கருங்கல் வகைகளை வழங்குதல்

இந்த அதிகார சபையின் பன்னல அஸ்போல்ட் உற்பத்தியகத்திற்கு ஆறு மாதங்களுக்குத் தேவையான கருங்கல் வகைகளை வழங்குவதற்கு அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. பின்வரும் கேள்விச் சுருக்கத்தில் காட்டப்பட்டுள்ள வகையில் படிவத் தொகுதியைக் கொள்வனவு செய்தல் வேண்டும்.

**கேள்விச் சுருக்கம்**

| கேள்வி இலக்கம் | அஸ்போல்ட் உற்பத்தியகம் | வழங்கல் அளவு கியூப் மீற்றர் | | மீளளிக்கப் படாத கேள்விப் படிவக் கட்டணம் (பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் தவிர) | கேள்விப் பிணையின் பெறுமதி ரூபா | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பணமாக | வங்கிப் பிணை மூலம் |
| PRDA/WP/PRO/2024/06 | பன்னல அஸ்போல்ட் உற்பத்தியகம் | 0-5 | 2100 | 2000.00 + வெட் வரி | 107,500.00 | 215,000.00 |
| | | 5-12 | 900 | | | |
| | | 12-20 | 1200 | | | |

02. இதன் பொருட்டான கேள்வி ஆவணத் தொகுதியினை 2024-02-01ஆம் திகதியிலிருந்து 2024-02-14ஆம் திகதி மு.ப. 09.00 முதல் பி.ப. 2.30 மணி வரை மேற்படி கேள்விப்படிவக் கட்டணத்தைச் செலுத்தி இவ்வதிகார சபையின் கேள்விப் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். இதற்கான கேள்விப் பிணையை பணமாக அல்லது வங்கிப் பிணை முறி மூலம் மேற்குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கு கேள்வி ஆவணத்தில் தரப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக சமர்ப்பித்தல் வேண்டும்.

03. இந்தப் பெறுகைக்குத் தகைமை பெறுவதற்கு 5.0 மில்லியன் ரூபாவை விஞ்சும் கேள்வித் தொகைக்கு கேள்விதாரரினால் 1987 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழ் கம்பனிப் பதிவாளரினால் வழங்கப்படும் பொது ஒப்பந்தங்கள் பதிவுச் சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.

04. கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் இறுதி நாள் 2024-02-15ஆம் திகதி பி.ப. 2.30 மணியாகும் என்பதுடன் அவ்வேளையிலேயே இவ்வலுவலகத்தில் கேள்விகள் திறக்கப்படும். அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி. அபிவிருத்தி அதிகார சபை (மே.மா),**
**இலக்கம் 59, புனித செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு -12.**
**தொ. இலக்கம் 011-4849825/45**

லங்கா சதொச LANKA SATHOSA

## விலைமனுக்களுக்கான அழைப்பு

வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு

### லங்கா சதொச லிமிடட் விற்பனையகங்களில் நிலையான சொத்துகளின் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு

தேசிய போட்டிரீதியான விலைமனு

ஓர் ஆண்டு காலத்திற்காக **லங்கா சதொச விற்பனையகங்களின்** பின்வரும் நிலையான சொத்துகளை பழுதுபார்க்க மற்றும் பராமரிக்க அங்கீகரிக்கப்பட்ட, அனுபவம் பெற்ற மற்றும் தகைமையுடைய வர்த்தக நிறுவனங்களிடம் இருந்து **லங்கா சதொச லிமிடட்டின் திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால்** முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| கேள்வி இலக்கம் | உருப்படி விபரம் | உருப்படி அளவு (எண்.) | விலைமனு ஆவணக் கட்டணம் (ரூபா) (மீளளிக்கப்படாதது) | விலைமனு பிணை தொகை (ரூபா) (மீளளிக்கப்படும்) |
|---|---|---|---|---|
| LSL/PRO/05/06/Air Conditions-SA/2024 | ஏசி இயந்திரங்கள் | 347 | 2,500.00 | 20,000.00 |
| LSL/PRO/05/07/Scales-SA/2024 | 15-30 kg டிஜிட்டல் தராசுகள | 333 | 2,500.00 | 31,000.00 |
| | மேடைத் தராசுகள் | 91 | | |
| LSL/PRO/05/08/Freezers & Coolers-SA/2024 | ஆழ் உறைப் பெட்டகங்கள் | 277 | 3,000.00 | 21,000.00 |
| | போத்தல் குளிரூட்டிகள் | 195 | | |

தேவை: விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டவாறு.

ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மேல் குறிப்பிடப்பட்டபடி **மீளளிக்கப்படாத விலைமனு கட்டணத்தை** செலுத்தி **2024 பெப்ரவரி 05 ஆம் திகதி தொடக்கம் 2024 பெப்ரவரி 26 ஆம் திகதி வரை** கீழ் குறிப்பிடப்பட்ட முகவரியில் இருந்து அங்கீகார கடிதத்தை சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணம் ஒன்றை பெறலாம்.

**லங்கா சதொச தலைமை அலுவலகம், பெறுகைப் பிரிவு (3ஆவது மாடி),**
**இல. 27, CWE செயலகக் கட்டிடம்,**
**வொக்ஷோல் வீதி, கொழும்பு 02.**

மேல் குறிப்பிடப்பட்ட அனைத்து பெறுகையின் விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு மேலுள்ள முகவரியில் **2024 பெப்ரவரி 15 ஆம் திகதி மு.ப. 11.00க்கு** இடம்பெறும் (கட்டாயம்)

முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை **2024 பெப்ரவரி 26 ஆம் திகதி பி.ப. 12.30 அல்லது அதற்கு முன்னர்** பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது மேலுள்ள முகவரியில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இட வேண்டும். முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுவை கொண்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **குறித்த கேள்வி இலக்கங்களை குறிப்பிட வேண்டும்.**

விலைமனுக்கள் **2024 பெப்ரவரி 26 ஆம் திகதி பி.ப. 12.30 மூடப்படுவதோடு** மூடப்பட்ட பின் விலைமனுதாரர்கள் முன்னிலையில் உடன் திறக்கப்படும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

ஏதேனும் தெளிவை பெறுவதற்கு தொடர்பு கொள்ளவும்,

திலினி - 070 1560428

இந்த கேள்வி/ ஒப்பந்தம் தொடர்பிலான இறுதி முடிவு **லங்கா சதொச லிமிட்டடின் திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் எடுக்கப்படும்.**

**தலைவர், திணைக்கள பெறுகைக் குழு,**
**லங்கா சதொச லிமிட்டட், இல.27, சதொச பொதுச் செயலகக் கட்டிடம்**
**வொக்ஷோல் வீதி, கொழும்பு 02**

### தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை

### கைத்தொழில் அமைச்சு

## விலைமனுக்களுக்கான அழைப்பு

இரத்தினபுரி தெமுவவத்த ''இரத்தினக்கல் கோபுரத்தில்'' அமைந்துள்ள 11 கடை அறைகளை 30 வருட காலத்திற்கு குத்தகை அடிப்படையில் வழங்குதல்

விலைக்கோரல் இல. **NGJA/18/85/2024**

தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரினால் இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்காக இரத்தினபுரி - தெமுவவத்த இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபைக்குச் சொந்தமான ''இரத்தினக்கல் கோபுரம்'' கடை அறைகளை குத்தகை அடிப்படையில் வழங்குவதற்காக முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**நிபந்தனைகள்-**

| விபரங்கள் | பணம் / திகதி |
|---|---|
| மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணம் | ரூபா 10,000.00 + 2.5% SSCL + 18% VAT |
| விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள் /நேரம் | 2024-02-26ஆம் திகதி பி.ப. 2.00 மணி |
| விலைமனுக்கள் திறக்கப்படுதல் | 2024-02-26ஆம் திகதி பி.ப. 2.05 மணி |

| தொ. இல. | கடை இலக்கம் | மாடி | கடையின் பரப்பளவு (சதுர அடிகள்) | உத்தேச பாவனை | மாதாந்த வாடகைத் தொகை (ரூபா) (வரி இன்றி) | அடிப்படை குத்தகை பெறுமதி (ரூபா) (வரி இன்றி) | பிணை முறி (ரூபா) (வரி இன்றி) |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 04 | 1ஆம் மாடி | 385 | இரத்தினக்கல், ஆபரணங்கள் மற்றும் வைரம் தொழில்சார்ந்த கடை அறைகள் மட்டும் | 95,000.00 | 7,485,000.00 | 420,000.00 |
| 02 | 13 | 2ஆம் மாடி | 341 | | 78,000.00 | 6,146,000.00 | 350,000.00 |
| 03 | 14 | 2ஆம் மாடி | 289 | | 75,000.00 | 5,910,000.00 | 330,000.00 |
| 04 | 15 | 2ஆம் மாடி | 280 | | 75,000.00 | 5,910,000.00 | 330,000.00 |
| 05 | 18 | 2ஆம் மாடி | 136 | | 45,000.00 | 3,546,000.00 | 200,000.00 |
| 06 | 19 | 3ஆம் மாடி | 219 | | 55,000.00 | 4,333,000.00 | 245,000.00 |
| 07 | 21 | 3ஆம் மாடி | 219 | | 55,000.00 | 4,333,000.00 | 245,000.00 |
| 08 | 22 | 3ஆம் மாடி | 385 | | 78,000.00 | 6,146,000.00 | 350,000.00 |
| 09 | 23 | 3ஆம் மாடி | 289 | | 75,000.00 | 5,910,000.00 | 330,000.00 |
| 10 | 24 | 3ஆம் மாடி | 280 | | 75,000.00 | 5,910,000.00 | 330,000.00 |
| 11 | 27 | 3ஆம் மாடி | 136 | | 45,000.00 | 3,546,000.00 | 200,000.00 |

**நிபந்தனைகள்:**

(I) தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் கீழ் பெறுகைகள் மேற்கொள்ளப்படும் (NCB)

(II) மீளளிக்கப்படாத ரூபா 10,000.00 + 2.5% (ரூபா 250.00) SSCL + 18% VAT (ரூபா 1,845.00) தொகையை (ரூபா 12,095.00) கொழும்பு 03, அல்பிரட் ஹவுஸ் கார்டன், ''மெக்சன்ஸ் டவர்'' 12ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபணர அதிகாரசபையின் நிதியாளருக்குச் செலுத்தியதன் பின் உதவிப் பணிப்பாளர் (பெறுகைகள்) அவர்களுக்கு எழுத்துமூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்கள் மற்றும் இயைபுடைய நிபந்தனைகளை 2024-02-02ஆம் திகதி முதல் 2024-02-22ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் வழங்கல் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

(III) முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுப் படிவங்களை 2024-02-26ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை, இல. 12, ''மெக்சன்ஸ் டவர்'', அல்பிரட் ஹவுஸ் கார்டன், கொழும்பு-03 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது 4ஆம் மாடி, வழங்கல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''இரத்தினக்கல் கோபுரத்தின் 11 எண்ணிக்கையான கடை அறைகளை குத்தகை அடிப்படையில் வழங்குதல் - 2024'' எனக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

(IV) பூர்த்தி செய்யப்பட்ட விலைக்கோரல் ஆவணங்களுடன் விலைமனுப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிணை முறியின் பெறுமதியை இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் காசாளரிடம் வைப்புச் செய்து அந்தப் பற்றுச்சீட்டின் மூலப்பிரதியைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(V) விலைமனுக்கள் 2024-02-26ஆம் திகதி பி.ப. 2.05 மணிக்கு தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபையின் 07ஆம் மாடியிலுள்ள கேட்போர்கூடத்தில் திறக்கப்படும் என்பதுடன் பி.ப. 2.00 மணிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே இரத்துச் செய்யப்படும். இந்த விலைமனு திறப்பு நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

**மேலதிக விபரங்களுக்கு:** உதவிப் பணிப்பாளர் (பெறுகைகள்) - 071 5362536 /011 2332197

**தலைவர் - அமைச்சுக் கேள்விக் குழு,**
**தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபை,**
**இல. 12, ''மெக்சன்ஸ் டவர்'', அல்பிரட் ஹவுஸ் கார்டன், கொழும்பு 03.**

**தொலைபேசி 0112-329295, 2325364 மற்றும் 2390645-8 தொலைநகல் 0112320758, 011-2332197**
**இணையதளம்: www.ngja.gov.lk**

வரையறுக்கப்பட்ட (தனியார்) லங்கா மின்சார கம்பனி

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

## வரையறுக்கப்பட்ட (தனியார்) லங்கா மின்சார கம்பனி

**Ref: NG/ADM/PC/SVC/2024(1)**

**2024-2026 ஆண்டுகளுக்காக நீர்கொழும்பு கிளை அலுவலகத்திற்கும் வாடிக்கையாளர் சேவை நிலையங்களுக்கும் பாதுகாப்பு சேவையை வழங்குவதற்காக வளமுள்ள சேவை வழங்குநரிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.**

மீளளிக்கப்படாத கட்டணமாக 2,000 ரூபாவை செலுத்திய பின்னர், **வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும்** நீர்கொழும்பு, தலாதுவ வீதி, 03 ஆம் இலக்கத்திலுள்ள வரையறுக்கப்பட்ட (தனியார்) லங்கா மின்சார கம்பனியின் நிருவாகப் பிரிவிலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்கள் பெறப்படலாம். விலைமனுக்கோரல் ஆவணங்கள் **2024 பெப்ரவரி 02 ஆம் திகதியிலிருந்து 2025 பெப்ரவரி 15 ஆம் திகதியன்று வரையும்** வழங்கப்படும்.

விலைமனு ஆவணத்தின் வரைவானது (விலைமனுவுக்கல்ல) பார்வையிடும் நோக்கத்திற்காக **www.promise.lk** அல்லது **www.leco.lk** என்ற இணையதளங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணங்கள் பிரதான பொறியியலாளர் (கிளை), வரையறுக்கப்பட்ட (தனியார்) லங்கா மின்சார கம்பனி என முகவரியிடப்பட்டு முத்திரையிடப்பட்ட உறையில் அனுப்பப்படல் வேண்டும். விலைமனு ஆவணங்கள் கீழேயுள்ள முகவரியிலுள்ள 1 ஆம் மாடியின் நிருவாக பிரிவிலுள்ள கேள்விப் பெட்டியில் **2024 பெப்ரவரி 16 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு** பிந்தாமல் சேர்க்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் மூடும் நேரத்தின் பின்னர் உடனடியாகவே சமுகமளிக்க விரும்பும் விலைமனுதாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.

LECO

**பிரதான பொறியியலாளர் (கிளை),**
**வரையறுக்கப்பட்ட (தனியார்) லங்கா மின்சார கம்பனி,**
**இல.: 03, தலாதுவ வீதி,**
**நீர்கொழும்பு.**
**தொலைபேசி: 031-2233322 /0312222349**

**மரணசாசனமில்லா சொத்தை உரிமை கோருவதற்கான அறிவித்தல்**

**1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டம் பிரிவு 55**

ஹோமாகம மாவட்டத்தின் ஹோமாகம பிரதேச செயலாளர் பிரிவில் பிட்டிபன தெற்கு எனும் கிராமத்தில் அமைந்துள்ள கடத்திரள் வரைபட இல 520007 கண்ட இல. 26 துண்ட இல. 0088 ஐக் கொண்ட காணியை உடைமை கொண்டிருந்த இல. 484, பிட்டிபன தெற்கு, ஹோமாகம எனும் விலாசத்தைக் கொண்ட மாத்தரகே தொன் சிரிவர்தன (2010.08.14) எனும் நபர் மரணமடைந்துள்ளார். அவரது உரிமையாளர்கள் 2024.03.02ஆம் திகதிக்கு முன் இல. 06, முதலாம் லேன், ரயில் நிலைய வீதி, ஹோமாகம என்ற இடத்தில் அமைந்துள்ள காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்திற்கு சமுகம் தரவும்

**ஆணையாளர் நாயகம்**
**காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்.**

**மரணசாசனமில்லா சொத்தை உரிமை கோருவதற்கான அறிவித்தல்**

**1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டம் பிரிவு 55**

கொழும்பு மாவட்டத்தின் ஹோமாகம பிரதேச செயலாளர் பிரிவில் ஹோமாகம எனும் கிராமத்தில் அமைந்துள்ள கடத்திரள் வரைபட இல 520001 கண்ட இல. 38பத்திர இல. - துண்ட இல. 0038 ஐக் கொண்ட காணியை உடைமை கொண்டிருந்த இல. 378/ஏ கட்டுவான வீதி, ஹோமாகம எனும் விலாசத்தைக் கொண்ட விதானகே பத்மசிரி பெரேரா (2023.07.16) எனும் நபர் மரணமடைந்துள்ளார். அவரது உரிமையாளர்கள் 2024.03.02ஆம் திகதிக்கு முன் இல. 06, முதலாம் லேன், ரயில் நிலைய வீதி, ஹோமாகம என்ற இடத்தில் அமைந்துள்ள காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்திற்கு சமுகம் தரவும்.

**ஆணையாளர் நாயகம்**
**காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்.**

## சிறியளவிலான விவசாய பணியகம் மற்றும் மீண்டெழல் கருத்திட்டம்

## கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

SAQP

சிறியளவிலான விவசாய பணியகம் மற்றும் மீண்டெழல் கருத்திட்டத்தின் மூலம் கீழ்க்காணும் பதவிக்காக சேர்த்துக் கொள்வதற்காக சன்டே ஒப்சவர் பத்திரிகையில் 2024.01.28 பத்திரிகை அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டுள்ளது. குறித்த தகைமைகள் அனுபவம் மற்றும் விண்ணப்பிக்கும் செயன்முறை சம்பள அளவு பற்றிய மேலதிக விபரங்களை தெரிந்து கொள்வதற்கு தயவு செய்து https://www.agrimin.gov.lk இணையதளத்திற்கு பிரவேசியுங்கள். குறித்த இணையதள பக்கத்தை பரிசீலித்து உங்களது விண்ணப்பத்தை கீழ்க்காணும் முகவரிக்கு சமர்ப்பிக்குமாறு SARP செயற்றிட்டம் கேட்டுக் கொள்கிறது.

01. பொறியியல் உதவியாளர் (PS06A) - பதவி 01

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி 2024.02.14

**செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**சிறியளவிலான விவசாய வணிக மற்றும்**
**மீண்டெழல் கருத்திட்டம்,**
**2/2/1, கந்தேவத்த வீதி, பெலவத்த,**
**பத்தரமுல்ல.**

# பெறுகை அறிவித்தல்

## வனசீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சு

## வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்

**உடவளவை யானைகள் இடைக்கால இல்லத்தில் பராமரிக்கப்படும் விலங்குகளுக்குத் தேவையான உணவுகளைக் (மரக்கறிகள், பழங்கள், இறைச்சி, மீன், தயாரிக்கப்பட்ட தானிய உணவுகள், தேங்காய் எண்ணெய் மற்றும் அரிசித் தூள்) கொள்வனவு செய்தல் – 2024**

01. வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவரினால் உடவளவை யானைகள் இடைக்கால இல்லத்தில் பராமரிக்கப்படும் விலங்குகளுக்குத் தேவையான உணவுகளை (மரக்கறிகள், பழங்கள், இறைச்சி, மீன், தயாரிக்கப்பட்ட தானிய உணவுகள், தேங்காய் எண்ணெய் மற்றும் அரிசித் தூள்) வழங்குவதற்காக பொருத்தமான நபர்களிடமிருந்து தேசிய போட்டி முறையின் கீழ் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| லொட் இல. | வகைகள் | | சராசரியாக நாளொன்றுக்கான வழங்கல் (கிலோ கிராம்/ கிராம்/ காய்/ மூடை) | சராசரியாக 2024ஆம் வருடத்திற்கான முழுமையான வழங்கல் (கிலோ கிராம்/ கிராம்/ போத்தல் / காய் / மூடை) | கேள்விப் பிணை முறியின் பெறுமதி (ரூபா) |
|---|---|---|---|---|---|
| லொட் 1 | மரக்கறிகள் | பூசணி / பட்டானா | 75 kg | 27,375 kg | 133,600.00 |
| | | பயற்றங்காய் | 1 kg | 365 kg | |
| | | கங்குங் | (8x400) 8 கட்டுகள் | 2,920 கட்டுகள் | |
| | | சோளம் | 15 kg | 5,475 kg | |
| | | வற்றாழை | 2 kg | 730 kg | |
| லொட் 2 | பழங்கள் | கரும்பு | 33 kg | 12,045 kg | 29,000.00 |
| | | பப்பாசி | 4 kg | 1,460 kg | |
| | | புளி வாழை | 2 kg | 730 kg | |
| | | சீனி வாழை | 2 kg | 730 kg | |
| | | தர்பூசணி (கொமடு) | 10 kg | 3,650 kg | |
| | | மா/கொய்யா | 1 kg | 365 kg | |
| லொட் 3 | இறைச்சி மற்றும் மீன் | மீன் | 2 kg | 730 kg | 38,100.00 |
| | | கோழியிறைச்சி | 5 kg | 1,825 kg | |
| லொட் 4 | தேங்காய் எண்ணெய் | தேங்காய் எண்ணெய் | 4 L | 1,460L | 46,400.00 |
| | தயாரிக்கப்பட்ட தானிய உணவுகள் | தயாரிக்கப்பட்ட தானிய உணவுகள் | 10 kg | 3,650 kg | |

1. விலைமனுதாரர்கள் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட விடயங்களுக்காகவும் விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம்.
2. கடந்த 03 வருடங்களினுள் இத்துறையில் அனுபவத்தை உறுதி செய்யும் ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் சாதாரண புரள்வு 12 மில்லியன் ரூபாவாகவிருத்தல் வேண்டும். அத்தோடு 03 வருடங்களுக்கான நிதி அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. பத்தரமுல்ல, ஜயந்திபுர வீதி, 811/ஏ எனும் இடத்திலுள்ள வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் (நிதி) அவர்களிடமிருந்து 011-2871537 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக மேலதிகத் தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் அவ்வலுவலகத்திலேயே 2024-02-21ஆம் திகதி வரையான வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையில் விலைமனுக்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
4. இதில் ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள் சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள விலைமனு ஆவணங்களை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரை கடமை நேரத்தினுள் எழுத்து மூலமான வேண்டுகோளொன்றை பணிப்பாளர் (நிதி) அவர்களுக்குச் சமர்ப்பித்து, மீளளிக்கப்படாத 5,000.00 ரூபா தொகையை தலைமை அலுவலகத்தின் சிறாப்பருக்குச் செலுத்தி 2024-02-21ஆம் திகதி வரையில் விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
5. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணங்களை 2024-02-22ஆம் திகதி 2.30 மணிக்கு முன் பத்தரமுல்ல, ஜயந்திபுர வீதி, 811/ஏ எனும் இடத்திலுள்ள வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் (நிதி) அவர்களின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம் அல்லது பதிவுத் தபால் மூலம் கிடைக்கச் செய்யலாம். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
6. விலைமனுக்கள் 2024-02-22ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
7. விலைமனுக்களுடன் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் பெற்றுக்கொண்ட 120 நாட்கள் வரையில் செல்லுபடியாகும் விலைமனுப் பிணை முறியொன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறல்லாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
8. விலைமனுக்கள் 2024-02-22ஆம் திகதி முதல் (விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளும் நாள் முதல்) 90 நாட்களுக்கு செல்லுபடியாதல் வேண்டும்.
9. எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக்கொள்ளும், நிராகரிக்கும், ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் அல்லது எவ்வித காரணமும் காட்டாமல் நிராகரிக்கும் உரிமையை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.
10. விலைமனுக்களைத் தயாரித்தல், ஒப்படைத்தலுக்காக விலைமனுதாரர்களுக்கு ஏற்படும் செலவுகள் தொடர்பில் பெறுகைக் குழுவின் தலைவர் பொறுப்புக் கூற மாட்டார்.

**தலைவர் - பெறுகைக் குழு,**
**வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்,**
**இல. 811/ஏ, ஜயந்திபுர வீதி,**
**பத்தரமுல்ல.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## ஜாஎல பிரதேச சபை

ஜாஎல பிரதேச சபையின் ராகம உப அலுவலகக் கட்டிடம் மற்றும் நூலகத்தை நிர்மாணிப்பதற்கான உத்தேச இரண்டு மாடிக் கட்டிடம் (பெறுகை இலக்கம்: JPS/01/DI/SF/03/2023) மற்றும் பட்டுவத்த உப அலுவலகத்தின் 3ஆம் கட்டத்தை நிர்மாணித்தல் (JPS/01/D1/டென்.பட்டு/3/2023) எனும் இரண்டு செயற்றிட்டத்திற்காக அனுபவம் மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

❖ செயற்றிட்ட இடம் -

01. ராகம நகரத்தில் தற்போது பிரதேச சபை உப அலுவலகம் செயற்பட்டு வரும் கட்டிடத்திற்கு அடுத்துள்ள காணி.
02. பட்டுவத்த பழைய உப அலுவலகம் அமைந்துள்ள காணி

❖ செயற்றிட்டத்தின் தன்மை -

01. புதிய இரண்டு மாடி அலுவலகம் மற்றும் நூலகக் கட்டிடம்
02. தற்போது ஸ்லெப் மட்டம் வரை நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டிடத்தின் தரை மாடியின் மிகுதி வேலைகள்

❖ நிர்மாணக் காலம் -

01. ராகம உப அலுவலகக் கட்டிடம் மற்றும் நூலகத்தை நிர்மாணிப்பதற்கான உத்தேச இரண்டு மாடிக் கட்டிடத்திற்கு 09 மாதங்கள் (நாட்காட்டி மாதங்கள்)
02. பட்டுவத்த உப அலுவலகத்தின் 3ஆம் கட்டத்தை நிர்மாணிப்பதற்கு 04 மாதங்கள் (நாட்காட்டி மாதங்கள்)

❖ நிதியின் தன்மை -

**பிரதேச சபையின் நிதி**

1. விலைக்கோரல் செயற்பாடுகள் CIDA - SBD/01 (இரண்டாம் பதிப்பு, 2007 ஜனவரி) பிரகாரம் இடம்பெறும்.
2. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகைமையைப் பெறுவதற்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலபடுத்தப்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன், ராகம உப அலுவலகத்தின் அலுவலகக் கட்டிடம் மற்றும் நூலகத்தை நிர்மாணிப்பதற்கான உத்தேச இரண்டு மாடிக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு கட்டிட நிர்மாணத் துறையில் CIDA தரம் C4 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

   பட்டுவத்த உப அலுவலகத்தின் 3ஆம் கட்டத்தை நிர்மாணிப்பதற்கு CIDA தரம் C6 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்குத் தேவையான தகைமைகள்:
   - ❖ ராகம உப அலுவலகத்தின் அலுவலகக் கட்டிடம் மற்றும் நூலகத்தை நிர்மாணிப்பதற்கான உத்தேச இரண்டு மாடிக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு கடந்த ஐந்து வருடங்களினுள் மேற்கொள்ளப்பட்ட நிர்மாண வேலைகளின் சாதாரண வருடாந்த அளவு குறைந்தபட்சம் 120.0 மில்லியன் ரூபாவாகவிருத்தல் வேண்டும்.
   - ❖ பட்டுவத்த உப அலுவலகத்தின் 3ஆம் கட்ட நிர்மாணத்திற்கு கடந்த ஐந்து வருடங்களினுள் மேற்கொள்ளப்பட்ட நிர்மாண வேலைகளின் சாதாரண வருடாந்த அளவு குறைந்தபட்சம் 40 மில்லியன் ரூபாவாகவிருத்தல் வேண்டும்.
   - ❖ கடந்த 5 வருடங்களினுள் குறைந்தபட்சம் ஒரு ஒப்பந்தத்தை அல்லது பிரதான ஒப்பந்தக்காரராக ஒப்பந்தப் பெறுமதிக்குச் சமமான ஒப்பந்தமொன்றை வெற்றிகரமான நிறைவு செய்திருத்தல் வேண்டும்.
   - ❖ ஒப்பந்தத்தின் கீழ் எந்தவொரு முற்பணச் செலுத்தல்கள் அல்லது ஏனைய கடப்பாடுகள் தவிர்த்து திரவச் சொத்து / அல்லது கடன் வசதி ராகம உப அலுவலகத்தின் அலுவலகக் கட்டிடம் மற்றும் நூலகத்தை நிர்மாணிப்பதற்கு 20.0 மில்லியன் ரூபாவிற்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.
   - ❖ பட்டுவத்த உப அலுவலகத்தின் 3ஆம் கட்டத்தை நிர்மாணிப்பதற்கு 10.0 மில்லியன் ரூபாவிற்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இலக்கம்: 011 2239566 மின்னஞ்சல் முகவரி: jaelapradeshiyasaba@gmail.com ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றை கடிதத் தலைப்பில் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பித்து செயலாளர், ஜா-எல பிரதேச சபை, நீர்கொழும்பு வீதி, கந்தானை எனும் முகவரியில் கொள்ளவனவு செய்யலாம். 2024 பெப்ரவரி 02ஆம் திகதி முதல் 2024 பெப்ரவரி 22ஆம் திகதி வரையில் எந்தவொரு வார நாட்களிலும் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை ராகம உப அலுவலகத்தின் அலுவலகக் கட்டிடம் மற்றும் நூலகத்தை நிர்மாணிப்பதற்காக உத்தேச இரண்டு மாடிக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு பன்னிரண்டாயிரத்து ஐந்நூறு ரூபா (ரூபா 12,500.00) பட்டுவத்த உப அலுவலகத்தின் 3ஆம் கட்டத்தை நிர்மாணிப்பதற்கு ஏழாயிரத்து ஐந்நூறு ரூபா (ரூபா 7,500.00) மீளளிக்கப்படாத கட்டணத்தை ரொக்கப் பணமாகச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
5. இரு பிரதிகளில் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை 2 உறைகளில் இட்டு முத்திரைக் குறி பொறித்து மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டு 2024-02-26ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் பதிவுத் தபாலில் செயலாளர், ஜா-எல பிரதேச சபை, நீர்கொழும்பு வீதி, கந்தானை எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும் அல்லது கந்தானை, நீர்கொழும்பு வீதி, ஜா-எல பிரதேச சபையின் பிரதான அலுவலகத்தின் செயலாளரின் அறையில் செயலாளரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ள முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட பெட்டியில் மேற்கூறப்பட்ட நிர்ணயிக்கப்பட்ட திகதி மற்றும் நேரத்திற்கு முன் உள்ளிடல் வேண்டும். மேலும் 2 செயற்றிட்டத்திற்கும் வெவ்வேறாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் செயற்றிட்டத்தின் பெயரை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் மற்றும் முழுமையற்ற விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
6. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் ஜா-எல பிரதேச சபையின் பெறுகைக் குழுவினால் ஜா-எல பிரதேச சபை, பிரதான அலுவலகத்தில் 2024-02-26ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு திறக்கப்படும் என அறிவிக்கப்படுவதுடன் இந்நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
7. விலைமனுக்களின் செல்லுபடிக்காலம் 2024-06-26ஆம் திகதிய மட்டுமேயாகும்.
8. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் 2024-02-20ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு ஜா-எல பிரதேச சபையின் கந்தானை பிரதான அலுவலகத்தில் இடம்பெறும்.
9. விலைக்கோரல் பிணை முறி பின்வரும் அட்டவணையின் பிரகாரம் இருத்தல் வேண்டும் என்பதுடன், இந்தக் கட்டணத்தை ரொக்கப் பணமாக அல்லது இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட வங்கிப் பிணை முறியொன்று அல்லது காப்புறுதி பிணை முறியின் மூலம் அல்லது CGF (Construction Guaranty Fund) பிணை முறியின் மூலம் செலுத்தலாம் என்பதுடன் அது 2024-06-26ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும். (குறித்த பிணை முறி SBDI மாதிரியின் பிரகாரமாகவிருத்தல் வேண்டும்)

| செயற்றிட்டத்தின் பெயர் | CIDA தரம் (கட்டிடம்) | விலைமனு ஆவணக் கட்டணம் | விலைக்கோரல் பிணை முறி | விலைக் கோரல் பிணை முறி செல்லுபடிக் காலம் |
|---|---|---|---|---|
| ராகம உப அலுவலகத்தின் அலுவலகக் கட்டிடம் மற்றும் நூலகத்தை நிர்மாணிப்பதற்கான உத்தேச இரண்டு மாடிக் கட்டிடம் | C4 அல்லது அதற்கு மேல் | 12,500.00 | ரூபா 700,000.00 | 2024-06-26 |
| பட்டுவத்த உப அலுவலகத்தின் 3ஆம் கட்டத்தை நிர்மாணித்தல் | C6 அல்லது அதற்கு மேல் | 7,500.00 | ரூபா 200,000.00 | 2024-06-26 |

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**ஜா-எல பிரதேச சபை,**
**கந்தானை.**

**தொலைபேசி இல. 011 2239566**
**மின்னஞ்சல்: jaelapradeshiyasaba@gmail.com**

2024-02-01

## மக்கள் வங்கி

# சுத்திகரிப்பு வேலைகளுக்கான விலைமனு கோரல்

### மக்கள் வங்கி - கொழும்பு தெற்கு பிராந்திய பிரதான அலுவலகம் கிளைகள் மற்றும் சேவை நிலையங்கள்

கொழும்பு தெற்கு மக்கள் வங்கி பிராந்திய பிரதான அலுவலகம், அதற்கு உட்பட்ட 16 கிளைகள் மற்றும் 8 சேவை நிலையங்களில் 01.03.2024ம் திகதி தொடக்கம் ஒரு வருட (01) காலத்திற்கு சுத்திகரிப்பு வேலைகளை நடாத்திச் செல்வதற்காக தகைமை பெற்ற நிறுவனம் / நபர்களிடம் இருந்து விலை மனு கோரப்படுகின்றது.

இதற்காக விலை மனு நிபந்தனைப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு உட்பட, எங்களால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்தி 22.02.2024 திகதி பி.ப 2.30 மணிக்கு முன்னர் பிராந்திய முகாமையாளர், பிராந்திய பிரதான அலுவலகம், மக்கள் வங்கி கொழும்பு தெற்கு, இல.11, டியூக் வீதி, கொழும்பு 01 என்ற முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பவும். அல்லது பிராந்திய பிரதான அலுவலகத்தில் உள்ள விலை மனு கோரல் பெட்டிக்குள் இடுவதற்கு நடவடிக்கை எடுக்கவும்.

இதற்கான விண்ணப்பப்படிவத்தை வங்கியின் சாதாரண வேலை நாட்களில் கொடுக்கல் வாங்கல் நடைபெறும் நேரத்தில் ரூபா 1000/- பணத்தொகையை செலுத்தி அதற்கான பண வைப்புச் சீட்டை சமர்ப்பித்த பின்னர் பிரதான அலுவலகத்தில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

விலை மனு சமர்ப்பிக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் மக்கள் வங்கி சுத்திகரிப்பு நடவடிக்கைகள் சம்பந்தமாக 2024 என்று குறிப்பிடப்பட வேண்டும். 22.02.2024ம் திகதி பி.ப 2.30 மணிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்வதுடன் அந்த சந்தர்ப்பத்திலேயே விலை மனு கோரல் பத்திரங்கள் திறப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

சமர்ப்பிக்கப்படும் விலை மனுக்களில் இருந்து சுத்திகரிப்பு நடவடிக்கைகளுக்கு பொருத்தமான தகைமையுள்ளவர்களைத் தேர்வு செய்வது பிராந்திய பிரதான அலுவலகத்தின் விலை மனு கோரல் சபைக்கு உரித்தானது. இச் சபையின் தீர்மானம் கடைசித் தீர்மானம் ஆகும்.

**பிராந்திய முகாமையாளர்**
**மக்கள் வங்கி**
**கொழும்பு தெற்கு பிராந்திய பிரதான அலுவலகம்**
**இல. 11, டியூக் வீதி,**
**கொழும்பு 01.**
**தொலைபேசி இலக்கம் : 011-2327847-8**

www.peoplesbank.lk 1961 PEOPLE'S BANK Pride of the Nation

## இலங்கை வங்கி

**1968 ஆம் ஆண்டு 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21 ஆம் பிரிவின் (397 ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.**

2023 டிசெம்பர் 18 இல் நடைபெற்ற இலங்கை வங்கி பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது,

1. பிரசித்த நொத்தாரிசு டி.யு. மனோதர அத்தாட்சிப்படுத்திய 2020.09.10 திகதியிட்ட ஈட்டு முறி இல. 2778 இன் பேரில் அநுராதபுரம், குருணாகல றோட், 2ஆம் மைல் கல் லஹிரு அயன் வேர்க்ஸ் எனும் முகவரியில் அமைந்த லஹிரு ரூபிங் பிரைவேற் லிமிடெற்றிடமிருந்து (பீவீ109022) (பணிப்பாளர்கள்: அநுராதபுரம், குருணாகல றோட், 2ஆம் மைல் கல், லஹிரு அயன் வேர்க்ஸ் எனும் முகவரியைச் சேர்ந்த திரு. பத்திரன கம்மாச்சாரிகே திலக் நந்தசிறி, அநுராதபுரம், குருணாகல றோட், 2ஆம் மைல் கல், லஹிரு அயன் வேர்க்ஸ் எனும் முகவரியைச் சேர்ந்த திருமதி தூல்வல கெதர மானெல் திலக்கரத்ன, அநுராதபுரம், குருணாகல றோட், 2ஆம் மைல் கல், லஹிரு அயன் வேர்க்ஸ் எனும் முகவரியைச் சேர்ந்த திரு. பல்லேவல கம்மச்சாரிகே லஹிரு சத்துரங்க நந்தசிறி, அநுராதபுரம், குருணாகல றோட், 2ஆம் மைல் கல், லஹிரு அயன் வேர்க்ஸ் எனும் முகவரியைச் சேர்ந்த திரு. பல்லேவல கம்மச்சாரிலாகே விஹாக சாருக்க நந்தசிறி) **1ஆவது தவணைக் கடன் வசதி மீது** 2023.10.30 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ. 40,283,048.31 (நாற்பது மில்லியன் இருநூற்று எண்பத்து மூன்று ஆயிரத்து நாற்பத்தெட்டு ரூபாய் முப்பத்தொரு சதமும்) அத்துடன் **ரூ. 26,468,000.00** (இருபத்தாறு மில்லியன் நானூற்று அறுபத்தெட்டு ஆயிரம் ரூபாய்) மீது ஆண்டுக்கு இருபத்து மூன்று தசம் இரண்டு ஐந்து (23.25%) வீதத்தில் 2023.10.31 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும், **2ஆவது தவணைக் கடன் வசதி** மீது 2023.10.30 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ. 14,805,217.39 (பதினான்கு மில்லியன் எண்ணூற்று ஐந்து ஆயிரத்து இருநூற்றுப் பதினேழு ரூபாய் முப்பத்தொன்பது சதமும்) அத்துடன் ரூ. **9,633,128.27** (ஒன்பது மில்லியன் அறுநூற்று முப்பத்து மூன்று ஆயிரத்து நூற்று இருபத்து எட்டு ரூபாய் இருபத்தேழு சதம்) மீது ஆண்டுக்கு இருபத்து மூன்று தசம் இரண்டு ஐந்து **(23.25%)** வீதத்தில் **2023.10.31** தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,

2. பிரசித்த நொத்தாரிசு டி.யு. மனோதர அத்தாட்சிப்படுத்திய 2020.09.10 திகதியிட்ட ஈட்டு முறி இல. 2778 இன் பேரில் **தவணைக் கடன்** 1 மீது ரூ. **40,283,048.31** (நாற்பது மில்லியன் இருநூற்று எண்பத்து மூன்று ஆயிரத்து நாற்பத்தெட்டு ரூபாய் முப்பத்தொரு சதமும்), **தவணைக் கடன் 2** மீது **ரூ.14,805,217.39** (பதினான்கு மில்லியன் எண்ணூற்று ஐந்து ஆயிரத்து இருநூற்றுப் பதினேழு ரூபாய் முப்பத்தொன்பது சதமும்) **2023.10.31** தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும், இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த இங்கு கீழ் முதலாவது அட்டவணையில் விபரித்த சொத்தை இரண்டாவது அட்டவணையில் விபரித்த பாதை ஒதுக்கம் நெடுகவும் மற்றும் அதன் மீதான வழி உரிமையும் சம்பந்தப்பட்ட சகல உரிமைகளுடன் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19 ஆம் பிரிவு (397 ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவை எனும் முகவரியைச் சேர்ந்த T.&.H. ஒக்ஷன் நிறுவனத்தின் ஏலதாரர் திரு. MHT கருணாரத்னவுக்கும், மேற்கூறிய இலங்கை வங்கி கட்டளைச்சட்டத்தின் பிரிவு 21ற்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி ரஜின சந்திக் கிளை முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட முதலாவது அட்டவணை.**

வடமத்திய மாகாணம் அநுராதபுரம் மாவட்டம் நுவரகம் பலாத்த மத்தி பிரதேச செயலகப் பிரிவு மற்றும் பிரதேச சபை எல்லைகளுள் நுவரகம் பலாத்த, நுவரகம் பலாத்த கோரளை கிராம சேவகர் பிரிவு, 258 இல் மஹதிம்பிரிகடவலயில் அமைந்த “திம்பிரிகடவல கெலே” என அழைக்கும் காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் டீ.எம்.ஜீ. திசாநாயக்க தயாரித்த 1991.06.22 திகதியிட்ட வரைபடம் இல. 2096 இல் எல்லை நிர்ணயித்த காணித்துண்டு இல. 01 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட காணித்துண்டு 01, வடக்கில் லயனல் உயன்கே உரிமை கோரும் காணியும் கிழக்கில் வரைபடம் இல. 384 இல் காணித்துண்டு இல. 1 மற்றும் 2இன் மீதிப்பாகமும் தெற்கில் உத்தரவு பெற்ற நில அளவையாளர் டீ.எம்.ஜீ. திசாநாயக்க தயாரித்த வரைபடம் இல. 2097இல் காதர் மொஹிதீன் உரிமை கோரும் காணித்துண்டு 1 உம் மேற்கில் பாதை மற்றும் பாதை ஒதுக்கமும் எல்லைகளாகக் கொண்டு ஒரு றூட் (ஏ.0, றூ.1, பே.0) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி அநுராதபுரம் மாவட்ட காணிப் பதிவகத்தில், F 32/13 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ். பாலேந்திரன் தயாரித்த 2008.03.28 திகதியிட்ட அண்மைய அளவை வரைபடம் இல. 2008/2/63இன் பிரகாரம் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்டவாறு மஹதிம்பிரிகடவல கிராமத்தில் அமைந்த “திம்பிரிகடவல கெலே” என அழைக்கும் காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ். பாலேந்திரன் தயாரித்த 2008.03.28 திகதியிட்ட அளவை வரைபடம் இல. 2008/2/63 இல் எல்லை நிர்ணயித்த காணித்துண்டு இல. 01 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட காணித்துண்டு 01, வடக்கில் லயனல் உயன்கே உரிமை கோரும் காணியும் கிழக்கில் வரைபடம் இல. 384 இல் காணித்துண்டு இல. 1 மற்றும் 2இன் பாகமும் (பீ.ஜீ.றீ. நந்தசிறியின் காணி) தெற்கில் வரைபடம் இல. 2097இல் காணித்துண்டு 1உம் (டபிள்யு.எஸ்.ஆர். சேனாநாயக்கவின் காணி) மேற்கில் பாதை நெடுகவும் ஒதுக்கமும் எல்லைகளாகக் கொண்டு ஒரு றூட் (ஏ.0, றூ.1, பே.0) அல்லது ஹெக்டெயார் பூச்சியம் தசம் ஒன்று பூச்சியம் ஒன்று இரண்டு (ஹெக்.0.1012) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும்.

**இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி,**
**திருமதி பீ.எம்.டீ.டீ. பத்திராஜா**
**முகாமையாளர்**
**இலங்கை வங்கி**
**ரஜின சந்திக் கிளை**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

**நக்கில்ஸ் மலைத்தொடரின் வாழ்வாதார பயிர்செய்கையாளர்கள் மற்றும் கமத்தொழில் பெருந்தோட்ட சமூகங்களின் காலநிலைக்கு தாக்குபிடித்தலை வலுவூட்டல் (GCF நக்கில்ஸ் செயற்றிட்டம்) நீர்ப்பாசன அமைச்சு**

GCF Knuckles PROJECT

## (தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல்)

## IFB No.: GCFKP/PMU/PROC/2024/GOODS/04

### தகவல் தொழில்நுட்பவியல் உபகரணங்களை வழங்கல் மற்றும் ஒப்படைத்தல் (மடிக்கணனிகள், நிழல்படப்பிரதியாக்கல் இயந்திரங்கள்)

01. இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது IUCN தரஅங்கீகாரம் பெற்ற முகவராண்மையுடன் நக்கில்ஸ் மலைத்தொடரின் வாழ்வாதார பயிர்செய்கையாளர்கள் மற்றும் கமத்தொழில் பெருந்தோட்ட சமூகங்களின் காலநிலைக்கு தாக்குபிடித்தலை வலுவூட்டல்ஆகுசெலவிற்காக நிதியிடலைப் பெற்றுள்ளதுடன் இந்நிதியத்தின் பகுதியொன்றை மேலேயுள்ள உரித்தான வழங்கலுக்கான கொடுப்பனவுகளுக்காக செலவிடப்படும்.
02. நக்கில்ஸ் மலைத்தொடரின் வாழ்வாதார பயிர்செய்கையாளர்கள் மற்றும் கமத்தொழில் பெருந்தோட்ட சமூகங்களின் காலநிலைக்கு தாக்குபிடித்தலை வலுவூட்டல் செயற்றிட்ட பெறுகைக் குழுத்தலைவரின் சார்பாக செயற்றிட்டப் பணிப்பாளர், மடிக்கணனிகள் (20 எண்ணிக்கைகள்) மற்றும் பிரதியாக்கல் இயந்திரம் (01 எண்ணிக்கை) ஆகியவற்றின் வழங்கல் மற்றும் ஒப்படைத்தலுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
03. தகவல் தொழில்நுட்பவியல் உபகரணத்தின் வழங்கல் மற்றும் ஒப்படைத்தல் (மடிக்கணனிகள், நிழல்படபிரதியாக்கல் இயந்திரம்) ஆகியன கேள்வியை வழங்கும் திகதியிலிருந்து மூன்று (3) மாதங்களுள் பூர்த்தியாக்கப்படல் வேண்டும்.
04. விலைமனுக்கள் முதலில் விலைமனுக்கோரல் ஆவணத்தில் திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டுள்ள தகவுத்திறன் மற்றும் செயல்முறைத்திறன் அடிப்படையில் கண்டிப்பாக மதிப்பீடு செய்யப்பட்டு அவ்வாறு மதிப்பீடு செய்யப்பட்ட விலைமனுக்கள் போதுமானளவு பதிலிறுக்கக்கூடியளவில் ஆகக் குறைந்த விலைமனுவை மதிப்பீடு செய்வதற்காக ஒப்பிட்டுப் பார்க்கப்படும்.
05. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடத்தப்படும்.
06. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை நீர்ப்பாசன அமைச்சின் GCF நக்கில்ஸ் செயற்றிட்டம், செயற்றிட்டப் பணிப்பாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு இலக்கம்: 0112672223. மின்னஞ்சல்: tenderknuckles@gmail.com
07. 2024.02.02 ஆம் திகதியிலிருந்து 2024.02.19 ஆம் திகதியன்று வரையும் அலுவலக நேரங்களில் (மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும்) மீளளிக்கப்படாத கட்டணமாக 3500 இலங்கை ரூபாவை செலுத்திய பின்னர் வழங்குநரின் வியாபார பதிவுச் சான்றிதழுடன் வியாபார தலைப்புக் கடிதத்தில் (மூலப்பிரதி) நீர்ப்பாசன அமைச்சின் GCF நக்கில்ஸ் செயற்றிட்டம், செயற்றிட்டப் பணிப்பாளருக்கு முகவரியிடப்பட்ட எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம் கொழும்பு-10, T.B. ஜாயா மாவத்தை, 500 ஆம் இலக்கத்திலுள்ள 12 ஆம் மாடியின் நீர்ப்பாசன அமைச்சின் GCF நக்கில்ஸ் செயற்றிட்ட அலுவலகத்திலிருந்து ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கொள்வனவு செய்யப்படலாம்.
08. விலைமனுவை திறந்த பின்னர் விலைமனுக்கள் 60 நாட்கள் காலஎல்லைக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும் (விலைமனு உத்தரவாதம் செல்லுபடியாகும் காலமானது 88 நாட்களாகும்). அனைத்து விலைமனுக்களும் 150,000 ரூபா பெறுமதியான விலைமனு உத்தரவாதமானது நீர்ப்பாசன அமைச்சு, GCF நக்கில்ஸ் செயற்றிட்டம், செயற்றிட்டப் பணிப்பாளரின் பெயரில் வழங்கப்பட்டதாகவுமிருத்தல் வேண்டும். விலைமனு உத்தரவாதமானது நிபந்தனையற்றவொரு கோரும் போது பெற்றுக் கொள்ளக்கூடிய உத்தரவாதமாகவும் விலைமனு ஆவணத்திற்கமைவாக வர்த்தக வங்கியொன்றினால்/காப்புறுதிக் கம்பனியொன்றினால்(கூட்டுறவு காப்புறுதி கம்பனி லிமிட்டட் நீங்கலானது) வழங்கப்பட்டதாகவும் இலங்கை மத்திய வங்கியுடன்/ இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுடன் பதிவு பெற்றதாகவுமிருத்தல் வேண்டும்.
09. விலைமனுதாரர் விலைமனுவின் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி ஆகியன முத்திரையிடப்பட்டு இரு உள்ளக தனித்தனியான உறைகளிலும் ஒரு வெளியக உறையிலும் சேர்க்கப்பட்டு இடது பக்க மேல் மூலையில் விலைமனு இலக்கத்தை குறிப்பிட்டு அத்துடன் உள்ளக உறையில் ‘மூலப்பிரதி’ மற்றும் ‘நகல்பிரதி’ என உரிய முறையில் அடையாளமிடப்படல் வேண்டும்.
10. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் 2024.02.20 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் செயற்றிட்டப் பணிப்பாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது வந்தடையும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்பட்டு பெற்றுக் கொள்ளப்பட்ட விலைமனுக்கள் மூடும் நேரத்தின் பின்னர் ஒப்பந்தக்காரர்களின் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் 7 ஆம் பந்தியில் வழங்கப்பட்டுள்ள முகவரியில் திறக்கப்படும்.
11. விலைமனுக்களின் தயாரித்தல் அல்லது ஒப்படைத்தல் தொடர்பாக விலைமனுதாரர்களுக்கேற்படும் எந்தவொரு ஆகுசெலவு அல்லது செலவினங்களுக்கு கொள்வனவுக்காரர் பொறுப்பேற்க மாட்டார்.

**தலைவரின் சார்பாக,**
**செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**செயற்றிட்ட பணிப்பாளர்,**
**நக்கில்ஸ் மலைத்தொடரின் வாழ்வாதார பயிர்செய்கையாளர்கள்**
**மற்றும் கமத்தொழில் பெருந்தோட்ட சமூகங்களின்**
**காலநிலைக்கு தாக்குபிடித்தலை வலுவூட்டல்**
**(GCF நக்கில்ஸ் செயற்றிட்டம்),**
**நீர்ப்பாசன அமைச்சு,**
**12 ஆம் மாடி, இல. 500, T.B. ஜாயா மாவத்தை,**
**கொழும்பு-10**

**Repeat Your ad For Better Offers**

**மரணசாசனமில்லா சொத்தை உரிமை கோருவதற்கான அறிவித்தல்**
**1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டம் பிரிவு 55**

கொழும்பு மாவட்டத்தின் ஹோமாகம பிரதேச செயலாளர் பிரிவில் பிராஹ்மனகம எனும் கிராமத்தில் அமைந்துள்ள கடத்திரள் வரைபட இல. 520014 கண்ட இல. 08 பத்திர இல. - துண்ட இல. 0020 ஐக் கொண்ட காணியை உடைமை கொண்டிருந்த இல. 78/டி/4, பொதுஜன மாவத்த, பிராஹ்மனகம, பன்னிப்பிட்டிய எனும் விலாசத்தைக் கொண்ட கருணா பேடிகே நிமல் கருணாரத்ன (2015.11.28) எனும் நபர் மரணமடைந்துள்ளார். அவரது உரிமையாளர்கள் 2024.03.02ஆம் திகதிக்கு முன் இல. 06, முதலாம் லேன், ரயில் நிலைய வீதி, ஹோமாகம என்ற இடத்தில் அமைந்துள்ள காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்திற்கு சமுகம்தரவும்.

**ஆணையாளர் நாயகம்**
**காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்.**

**1986ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தின் திருத்தப்பட்ட 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29D பிரிவின் கீழான விற்பனை**

PEOPLE'S BANK

**மக்கள் வங்கி - கண்டி கிளை**
**மதிப்புமிக்க வணிகச் சொத்தின் ஏலம்**

மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டம், கண்டி மாநகரப் பகுதி எல்லைக்குள் கண்டி கங்கவட கோரலே, பிரதேச செயலகப் பிரிவு மற்றும் அனிவத்தை மேற்கு பகுதி கிராம அலுவலர் பிரிவில் உள்ள ஜோர்ஜ் ஈ. டி சில்வா மாவத்தையில் அமைந்துள்ள “பிரிம்ரோஸ் ஹில் எஸ்டேட்” என பெயரிடப்பட்ட காணிக்காக 21.09.1995 அன்று அங்கீகரிக்கப்பட்ட நில அளவையாளர் திரு. ஜி.எஸ்.பி. லெனகலவினால் அளவீடு செய்யப்பட்ட திட்ட இலக்கம் 684 இல் காணப்பட்ட பகுதி இலக்கம் 25.

**காணியின் விஸ்தீரணம் A : 00 R: 00 P: 11.5 காணி (ஹெக்டெயார்** 0.0291) மற்றும் கட்டிடங்கள், பயிர்கள் போன்ற அதற்கு சொந்தமான அனைத்தும்.

(இந்த காணி கண்டி காணி பதிவு அலுவலகத்தில் படிவம் இலக்கம் A/585/141இல் பதிவு செய்யப்பட்டுள்ளது). மக்கள் வங்கியினால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ்

2024 பெப்ரவரி 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணிக்கு கண்டி மக்கள் வங்கி வளாகத்தில் என்னால் பொது ஏலத்தில் விற்கப்படுகிறது.

**பணம் செலுத்தும் முறை:**

விலை முடிவு செய்யப்பட்டவுடன், வெற்றிகரமான வாங்குபவர் ஏலத்தின் முடிவில் பின்வரும் முழுத்தொகையையும் பணமாகச் செலுத்த வேண்டும்.

1. கொள்முதல் விலையில் 10% (பத்து சதவீதம்)
2. மாகாண அதிகாரசபைக்கு செலுத்த வேண்டிய 1% (ஒரு சதவீதம்) விற்பனை வரி
3. ஏலதாரர் கமிஷன் 2½% (இரண்டரை சதவீதம்) மற்றும் அந்த கமிஷன் தொடர்பான அனைத்து வரிகளும்
4. 5000.00 ரூபா எழுதுவினைஞர் மற்றும் (ஒலிபெருக்கி) கூவுனர் கட்டணம்
5. விற்பனை செலவு ஏதேனும் இருந்தால், மற்றும் பிற கொடுப்பனவுகள் அடங்கும்
6. விற்பனை சான்றிதழின் முத்திரை வரி
7. கொள்முதல் விலையில் மீதியான 90% தொகையை ஏலம் விடப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் முகாமையாளர், மக்கள் வங்கி, கண்டி கிளைக்கு செலுத்த வேண்டும்.

மேலே குறிப்பிட்டுள்ளபடி, 30 நாட்களுக்குள் மேற்கண்ட தொகை செலுத்தப்படாவிட்டால், ஏற்கனவே செலுத்தப்பட்ட விற்பனை விலையில் 10% ஐ பறிமுதல் செய்து மீண்டும் ஏலம் விட வங்கிக்கு உரிமை உள்ளது.

உரிமைப் பத்திரங்கள் மற்றும் பிற தொடர்புடைய தகவல்களை முகாமையாளர், மக்கள் வங்கி, கண்டி கிளையில் அல்லது கண்டி பிராந்திய முகாமையாளரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

**“முன் அறிவிப்பு இல்லாமல் மேலே உள்ள ஏலத்தை இடைநிறுத்த / இரத்து செய்ய வங்கிக்கு உரிமை உள்ளது.”**

**பிரேமசிறி வடுகே**
**அங்கீகரிக்கப்பட்ட ஏலதாரர், நீதிமன்ற ஆணையாளர்**
**“உத்பலா” சண்டகிரிவத்த, கம்பஹா, தொலைபேசி :- 0777003939, 0716172804, 0711659616**

## நரக அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

# நரக அபிவிருத்தி அதிகாரசபை

## கேள்வி அறிவித்தல்

### 05 ஆண்டுகள் காலம் ஒன்றுக்காக மாதாந்த வாடகை அடிப்படையில் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் ஓய்வுநேர திட்டங்களில் காலியான கடைகளை ஒதுக்குவதற்காக கேள்விமனு

- ஐந்து (05) ஆண்டுகள் காலம் ஒன்றுக்காக மாதாந்த வாடகை அடிப்படையில் பின்வரும் கடைகளை ஒதுக்குவதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபை, வருவாய் கேள்வி சபை (கனிஷ்ட), தலைவரினால் கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

| இடம் | கடை இல. | தரை அளவு (சதுர அடி) | அடிப்படை தொகைகள் (ரூபா). கூறுவிலை ஒன்றை மேற்கொள்வதற்கு விலைமனுதாரர் ஒரு விருப்பை தேர்வு செய்தல் வேண்டும் | | | விலைமனு பிணை (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| | | | விருப்பு 01 அடிப்படை பெறுமதி - மாதாந்த வாடகை (ரூபா) | | விருப்பு 02 | |
| | | | அடிப்படை பெறுமதி (மீளளிக்கப்படாதது) | மாதாந்த வாடகை | அடிப்படை மாதாந்த வாடகை (ரூபா) | |
| காலி கோட்டை, முன்னாள் டச்சு வைத்தியசாலை கடை வளாகம் | UF-08-01 (மேல் மாடி) | 737.98 | 2,028,000.00 | 43,000.00 | 86,000.00 | 52,000.00 |
| | UF-08-02 (மேல் மாடி) | 510.00 | 1,400,000.00 | 30,000.00 | 60,000.00 | 36,000.00 |
| | UF-08-03 (மேல் மாடி) | 314.00 | 863,000.00 | 18,000.00 | 36,000.00 | 22,000.00 |
| கொழும்பு 01, முன்னாள் சந்தைப்படுத்தல் திணைக்கள கட்டடம் | A, B மற்றும் C (மேல் மாடி) | 5543.00 | 45,800,000.00 | 320,000.00 | 1,275,000.00 | 765,000.00 |
| கொழும்பு 01, முன்னாள் டச்சு வைத்தியசாலை கடை வளாகம் | 12 (தரைத் தளம்) | 1175.53 | 9,000,000.00 | 179,000.00 | 303,000.00 | 200,000.00 |
| கொழும்பு 07, Racecourse promenade (கிராண்ட் ஸ்டான்ட் கட்டிடம்) | GS-07 (முதலாவது மற்றும் இரண்டாம் மாடி) | 4995.00 | 22,723,000.00 | 450,000.00 | 900,000.00 | 540,000.00 |

- இந்தக் கடைகள் மாதாந்த வாடகை அடிப்படையில் 05 ஆண்டு காலம் ஒன்றுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. விலைமனுதாரர்கள் மேலுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்ட 02 தேர்வுகளில் ஒன்றை தேர்வு செய்து தமது கூறுவிலைகளை மேற்கொள்ளலாம்.
  - கேள்விமனு ஆவணங்கள் 2024 பெப்ரவரி 05 ஆம் திகதி தொடக்கம் 2024 பெப்ரவரி 19 ஆம் திகதி பி.ப. 2.00 வரை வழங்கப்படும்.
  - கேள்விமனுக்களை ஏற்பது 2024 பெப்ரவரி 22 ஆம் திகதி மு.ப. 11.00க்கு நிறைவடையும்.
- இந்த கேள்வி தொடர்பில் மற்ற விபரங்கள் கேள்விமனு ஆவணங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.
- ஆர்வமுடைய தரப்புகள் இலங்கை ரூபா பத்தாயிரம் (ரூபா 10,000/-) மற்றும் அதன் மீது 2.5% சமூக பாதுகாப்பு உதவித்தொகை அறவீடு (SSCL) + 18% வெட் இனை செலுத்தி மேல் குறிப்பிடப்பட்ட காலத்தில் வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 2.30 வரை பத்தரமுல்லை, செத்சிறிபாய - கட்டம் 1, 8ஆவது மாடி, நகர அபிவிருத்தி அதிகாரசபை, மெய் ஆதன முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்திப் பிரிவில் இருந்து கேள்விமனு ஆவணத்தை கொள்வனவு செய்யலாம்.
- 011-2875921, 011-2875916-20 (நீடிப்பு 2960-2968) என்ற தொலைபேசி இலக்கங்களில் 2024 பெப்ரவரி 05 ஆம் திகதி மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை பத்தரமுல்லை, செத்சிறிபாய - கட்டம் 1, 8ஆவது மாடி, நகர அபிவிருத்தி அதிகாரசபை, பணிப்பாளர் (மெய் ஆதன அபிவிருத்தி) இடமிருந்து மேலதிக விபரங்களை பெற முடியும்.

**தலைவர், வருவாய் கேள்வி (கனிஷ்ட) நகர அபிவிருத்தி அதிகாரசபை**
**செத்சிறிபாய - கட்டம் 1, பத்தரமுல்லை.**

## ஐ.சி.சி. பொதுக் குழு கூட்டம் இலங்கையில்




சர்வதேச கிரிக்கெட் கௌன்சிலின் (ஐ.சி.சி.) வருடாந்த பொதுக் குழுக் கூட்டம் எதிர்வரும் ஜூலை 19 ஆம் திகதி தொடக்கம் 22 ஆம் திகதி வரை இலங்கையில் நடைபெறவிருப்பதாக விளையாட்டுத் துறை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இந்தக் கூட்டம் இலங்கையில் நடைபெறுவது இலங்கையின் கிரிக்கெட் விளையாட்டு மற்றும் சுற்றுலாத் துறைக்கு சாதகமானதாக அமையும் என்று அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் கௌன்சில் இலங்கை கிரிக்கெட் மீது தடை விதித்திருந்த காலத்தில் இந்தக் கூட்டத்தை இலங்கையில் நடத்தும் வாய்ப்பு பறிபோகும் நெருக்கடி இருந்து வந்தது. எனினும் இலங்கை கிரிக்கெட் மீதான தடை தற்போது நீக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனினும் ஐ.சி.சி. தடையினால் இலங்கையில் நடைபெறவிருந்த 19 வயதுக்கு உட்பட்ட உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி தென்னாபிரிக்காவுக்கு மாற்றப்பட்டது.

## இலங்கை – ஆப்கான் அணிகளின் டெஸ்ட் போட்டி இன்று ஆரம்பம்



இலங்கை மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு இடையிலான ஒரே ஒரு டெஸ்ட் போட்டி கொழும்பு, எஸ்.எஸ்.சி. மைதானத்தில் இன்று (02) ஆரம்பமாகவுள்ளது.

இரு அணிகளும் முதல் முறையாகவே டெஸ்ட் போட்டி ஒன்றில் சந்திக்கவுள்ளன. தவிர, புதிய டெஸ்ட் அணித் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கும் தனஞ்சய டி சில்வா இலங்கை அணியை முதல் முறையாக வழிநடத்தும் ஆட்டமாகவும் இன்றைய போட்டி அமையவுள்ளது.

ஆப்கானிஸ்தான் அணி இதுவரை 7 டெஸ்ட் போட்டிகளில் ஆடியிருக்கும் நிலையில் அதில் 3 போட்டிகளில் வெற்றியீட்டி நான்கு ஆட்டங்களில் தோல்வியை சந்தித்துள்ளது. கடைசியாக கடந்த ஜூன் மாதம் பங்களாதேஷை எதிர்கொண்ட அந்த அணி 546 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியை சந்தித்தது. போதிய அனுபவம் அற்ற அணி என்றபோதும் ஒருநாள் மற்றும் டி20 கிரிக்கெட்டில் எதிரணிக்கு சவால் விடுத்து வரும் ஆப்கான் அணி, டெஸ்ட் கிரிக்கெட்டிலும் திருப்பம் காட்டக் கூடியதாக உள்ளது. இலங்கை ஆடுகளங்களில் உதவக் கூடிய வலுவான சுழற்பந்து வரிசையை கொண்டிருக்கும் அந்த அணியில் திறமையான துடுப்பாட்ட வீரர்களும் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

தனஞ்சய டி சில்வாவுடன், அஞ்சலோ மத்தியூஸ், தினேஷ் சந்திமால், திமுத் கருணாரத்ன என வலுவான துடுப்பாட்ட வரிசை மற்றும் பிரபாத் ஜயசூரிய, கசுன் ராஜித என டெஸ்ட் போட்டிகளுக்கான பிரத்தியேக பந்து வீச்சு வரிசையுடன் இலங்கை அணி களமிறங்கவுள்ளது.

இதில் இலங்கையின் 18ஆவது டெஸ்ட் அணித் தலைவராக களமிறங்கவிருக்கும் தனஞ்சய டி சில்வா மீது அதிக அவதானம் சென்றுள்ளது.

எனினும் இந்தப் போட்டி ஐ.சி.சி. டெஸ்ட் சம்பியன்சிப் புள்ளிப் பட்டியலில் உள்ளடக்கப்படவில்லை.

இன்று காலை 10 மணிக்கு ஆரம்பமாகும் இந்த டெஸ்ட் போட்டியை மைதானம் சென்று இலவசமாக பார்ப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இளையோர் உலகக் கிண்ணம்

## அரையிறுதிக்குத் தகுதி பெற இலங்கைக்கு கடைசி வாய்ப்பு



தென்னாபிரிக்காவில் நடைபெற்று வரும் 19 வயதுக்கு உட்பட்ட உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் அரையிறுதிக்கு முன்னேறும் கடைசி எதிர்பார்ப்புடன் இலங்கை இளையோர் அணி போட்டியை நடத்தும் தென்னாபிரிக்கவை இன்று (02) எதிர்கொள்ளவுள்ளது.

ஏற்கனவே சுப்பர் சிக்ஸ் சுற்றின் முதல் போட்டியில் மேற்கிந்திய தீவுகளிடம் 3 விக்கெட்டுகளால் தோல்வியை சந்தித்த இலங்கை அணி சுப்பர் சிக்ஸ் குழு 2 புள்ளிப் பட்டியலில் 4 ஆவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில் பொட்செப்ஸ்ட்ரூமில் இன்று நடைபெறும் போட்டி இலங்கை அணியின் கடைசி சுப்பர் சிக்ஸ் ஆட்டமாகும். இலங்கை அரையிறுதிக்கு முன்னேறுவதற்கு இன்றைய போட்டியில் வெற்றி பெறுவது கட்டாயம் என்பதோடு மற்ற போட்டிகளின் முடிவுகளும் தமக்கு சாதகமாக அமைய வேண்டும்.

புள்ளிப்பட்டியலில் சினெத் ஜயவர்தன தலைமையிலான இலங்கை தற்போது 2 புள்ளிகளுடன் காணப்படுவதோடு முதல் இடத்தில் இருக்கும் அவுஸ்திரேலியா 6 புள்ளிகளுடன் கிட்டத்தட்ட அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இந்நிலையில் அடுத்த இரண்டு இடங்களில் இருக்கும் தென்னாபிரிக்கா மற்றும் மேற்கிந்திய தீவுகள் அணிகள் தலா 4 புள்ளிகளை பெற்றுள்ளன. அரையிறுதிக்கும் இந்தக் குழுவில் இருந்து இரண்டு அணிகளே தகுதி பெறும்.

இந்நிலையில் இலங்கை அணி அரையிறுதிக்கு முன்னேறுவதற்கு இன்றைய ஆட்டத்தை வெல்வது மாத்திரமன்றி நிகர ஓட்ட விகிதத்திலும் பின்தங்கி இருப்பதால் அதிக இடைவெளியில் வெற்றியீட்டுவது அவசியமாகும். மறுபுறம் மேற்கிந்திய தீவுகள் அணி தனது கடைசிப் போட்டியில் இன்று அவுஸ்திரேலியாவிடம் தோல்வியை சந்திக்க வேண்டும்.

இளையோர் உலகக் கிண்ண அரையிறுதிப் போட்டிகள் எதிர்வரும் 6 மற்றும் 8 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.



## சர்வதேச செய்திகள்

# போர் நிறுத்தப் பேச்சு: ஹமாஸ் தலைவர் கெய்ரோவுக்கு விரைவு

### காசாவில் உயிரிழப்பு 27,000ஐ தாண்டியது

முற்றுகையில் உள்ள காசா மீது இஸ்ரேலின் தாக்குதல்கள் தொடரும் நிலையில் காசாவில் முன்மொழியப்பட்ட போர் நிறுத்தம் தொடர்பில் பேசுவதற்காக ஹமாஸ் தலைவர் நேற்று (01) எகிப்து தலைநகர் கெய்ரோவை சென்றடைந்தார்.

இஸ்ரேலுடன் போரிட்டு வரும் ஹமாஸ் அமைப்பு முன்மொழியப்பட்டிருக்கும் ஆறு வார போர் நிறுத்த உடன்படிக்கையை மீளாய்வு செய்து வருகிறது. பாரிஸில் அண்மையில் இடம்பெற்ற சந்திப்பிலேயே இந்தப் போர் நிறுத்த முன்மொழிவு தயாரிக்கப்பட்டது.

எனினும் நான்கு மாதங்களை நெருங்கும் இந்தப் போரில் காசா மீதான இஸ்ரேலின் தாக்குதல் எந்தத் தணிவும் இன்றி நீடிக்கிறது. தெற்கு நகரான கான் யூனிஸை மையப்படுத்தி அங்கு போர் உக்கிரமடைந்திருக்கும் நிலையில், உயிரிழப்பு எண்ணிக்கை 27,000ஐ தாண்டியுள்ளது.

இதன்படி காசாவில் குறைந்தது 27,019 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டிருப்பதோடு மேலும் 66,139 பேர் காயமடைந்துள்ளனர் என்று பலஸ்தீன சுகாதார அமைப்பு நேற்று வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தெற்கின் பிரதான நகரான கான் யூனிஸில் கடந்த புதன் இரவிலும் இஸ்ரேலின் வான் தாக்குதல்கள் உக்கிரமாக நீடித்ததாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன. குறிப்பாக இரு மருத்துவமனைகளைச் சூழவே தாக்குதல்கள் இடம்பெற்றுவதாக உதவியாளர்கள் மற்றும் சுகாதார பணியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதில் கடந்த புதன்கிழமை தொடக்கம் இடம்பெற்ற தாக்குதல்களில் காசாவில் மேலும் 119 பேர் கொல்லப்பட்டதாக அந்தப் பகுதிக்கான சுகாதார அமைச்சு கூறியது.

இஸ்ரேலின் புதிய தாக்குதல்கள் குறிப்பாக காசா உள்துறை மற்றும் ஊடக அமைச்சு தலைமையகங்கள் மீது நடத்தப்பட்ட வான் தாக்குதல்களால் காசா நகர வானில் கரும்புகை எழுந்ததாக அங்குள்ள குடியிருப்பாளர்கள் விபரித்துள்ளனர்.

மத்திய காசாவில் அல் நுஸைரத் அகதி முகாம் கடும் தாக்குதலுக்கு இலக்கானதோடு தெற்கு காசாவில் மிகப் பெரியதும் தொடர்ந்து இயங்கி வருவதுமான கான் யூனிஸ் நகரில் இருக்கும் நாசர் மருத்துவமனையைச் சூழ டாங்கிகள் குண்டு மழை பொழிந்ததாக பார்த்தவர்களை மேற்கோள் காட்டி ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

கான் யூனிஸ் நகரில் உள்ள அகதி முகாம் ஒன்றில் இருந்து இஸ்ரேலிய வாகனங்கள் வெளியேறியதை அடுத்து அந்தப் பகுதியில் இருந்து 14 சடலங்களை பொதுமக்கள் மற்றும் அம்பூலன்ஸ் பணியாளர்கள் மீட்டுள்ளனர். இவ்வாறு மீட்கப்பட்ட உடல்கள் நாசர் மருத்துவமனைக்கு எடுத்துவரப்பட்டு அடக்கம் செய்வதற்காக தயார்படுத்தப்பட்டிருப்பதாக அல் ஜசீரா தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளது.

“இங்கே இப்போது படுகொலை ஒன்று இடம்பெற்று வருகிறது” என்று பலஸ்தீன பகுதிக்கான எல்லைகளற்ற மருத்துவர்கள் அமைப்பின் தலைவர் லியொ கேன்ஸ் குறிப்பிட்டார்.



காசாவில் உள்ள மருத்துவமனைகளின் கீழ் சுரங்கப்பாதைகளை செயற்படுத்தி வருவதாகவும் மருத்துவ வசதிகளை கட்டளை மையங்களாக பயன்படுத்தி வருவதாகவும் ஹமாஸ் மீது இஸ்ரேல் குற்றம்சாட்டியபோதும் அதற்கான ஆதாரங்களை முன்வைக்க அதனால் இது வரையில் முடியாமல் போயுள்ளது. ஹமாஸ் அமைப்பு இந்தக் குற்றச்சாட்டுகளை மறுத்து வருகிறது.

மனிதாபிமான உதவிகள் தடைப்பட்டு வருவதன் காரணமாக மக்களிடையே பட்டினிச் சாவு ஏற்படும் சாத்தியம் பற்றி உலக சுகாதார அமைப்பின் அவசரப் பிரிவுக்கான பணிப்பாளர் மைக்கல் ரியான் புதனன்று (31) எச்சரித்திருந்தார்.

“காசாவின் பொதுமக்கள் இந்தப் போரின் பாங்குதாரர்கள் அல்ல என்பதோடு அவர்களும் அவர்களின் சுகாதார வசதிகளும் பாதுகாக்கப்பட வேண்டும்” என்று அவர் கூறினார்.

**மூன்று கட்டத் திட்டம்**

கட்டார் மற்றும் எகிப்து தலைமையிலான மத்தியஸ்த முயற்சிகள் தீவிரப்படுத்தப்பட்டிருப்பதோடு, ஹமாஸ் தலைவர் இஸ்மைல் ஹனியே நேற்று கெய்ரோவை சென்றடைந்தார். கடந்த வார இறுதியில் அமெரிக்க உளவுப் பிரிவான சி.ஐ.சி. தலைவர் வில்லியம் பர்ன்ஸ் பாரிஸ் நகரில் நடத்திய பேச்சுவார்த்தை அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருக்கும் போர் நிறுத்த முன்மொழிவு குறித்தே அவர் கெய்ரோவில் பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளார்.

காசா பகுதியில் மேலும் உதவி விநியோகங்களுடன் ஆரம்பத்தில் ஆறு வார போர் நிறுத்தத்துடன் ஆரம்பிக்கும் மூன்று கட்டத் திட்டம் ஒன்று பற்றி ஆராயப்பட்டு வருவதாக ஹமாஸ் வட்டாரத்தை மேற்கோள்காட்டி ஏ.எப்.பி. செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதன் முதல் கட்டத்தில் காசா போராளிகள் தடுத்து வைத்திருக்கும் “பெண்கள், சிறுவர்கள் மற்றும் நோயுற்ற ஆண்கள் என 60க்கு மேற்பட்ட” பணயக்கைதிகள் மாத்திரம் விடுவிக்கப்படவுள்ளனர். இதற்கு பகரமாக இஸ்ரேலிய சிறையில் இருக்கும் பலஸ்தீன கைதிகள் விடுவிக்கப்படவிருப்பதாக மேற்படி வட்டாரம் குறிப்பிட்டுள்ளது.

மேலும் பணயக்கைதிகள் பரிமாற்றத்துடன் தொடர்புபட்ட சாத்தியமான அடுத்த கட்டங்களில் இஸ்ரேலிய படைகள் வாபஸ் பெறுவது தொடர்பிலும் பேச்சுவார்த்தைகள் இடம்பெறுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் இஸ்ரேலிய தாக்குதலால் அழிக்கப்பட்டிருக்கும் காசா பகுதியை கட்டியெழுப்புவதும் இந்தப் பேச்சுவார்த்தையில் இடம்பெற்றுள்ளது.

சுமார் 1,140 இஸ்ரேலியர் கொல்லப்பட்ட கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி பலஸ்தீன போராளிகள் நடத்திய தாக்குதலை அடுத்தே இந்தப் போர் வெடித்தது. இதில் போராளிகளால் கடத்தப்பட்ட சுமார் 250 பணயக்கைதிகளில் தொடர்ந்து 132 பேர் காசாவில் பிடிக்கப்பட்டிருப்பதாக நம்பப்படுகிறது. இதில் குறைந்தது 29 பேர் கொல்லப்பட்டிருப்பதாக நம்பப்படுகிறது.

இஸ்ரேல் கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக நடத்திவரும் தாக்குதல்களால் காசா பகுதியில் பாதிக்கும் அதிகமான கட்டுமானங்கள் தரைமட்டமாக்கப்பட்டு அல்லது சேதமாக்கப்பட்டு மனிதர்கள் வாழ முடியாத பகுதியாக மாறி உள்ளது.

உதவி விநியோகம்

எனினும் காசாவில் இருந்து துருப்புகளை வாபஸ் பெறுவதை நிராகரித்திருக்கும் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, ஹமாஸ் அமைப்பை ஒழிப்பதாக மீண்டும் ஒருமுறை சூளுரைத்துள்ளார். அதே போன்று உடன்படிக்கையின் ஓர் அங்கமாக ஆயிரக்கணக்கான பலஸ்தீன கைதிகளை விடுவிப்பதற்கும் நெதன்யாகு எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

காசாவில் பிடிக்கப்பட்டிருக்கும் பணயக்கைதிகளின் உறவினர்கள் தொடர்ந்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருவதால் நெதன்யாகு அரசு கடும் அழுத்தத்தை எதிர்கொண்டு வருகிறது. முன்கூட்டியே தேர்தல் ஒன்றை நடத்துவதற்கான குரலும் இஸ்ரேலில் வலுத்து வருகிறது.

பலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா நிறுவனத்தின் ஊழியர்கள் சிலர் ஒக்டோபர் தாக்குதலுடன் தொடர்புபட்டிருப்பதாக இஸ்ரேல் குற்றம் சாட்டியதை அடுத்து பல நாடுகளும் உதவிகளை நிறுத்தியது காசாவில் மனிதாபிமான நெடிக்கடியை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது.

இஸ்ரேலின் நெருங்கிய கூட்டாளியான அமெரிக்க உட்பட முக்கிய நன்கொடை நாடுகள் ஐ.நா நிறுவனத்திற்கான நிதியை நிறுத்தியுள்ளன.

இந்நிலையில் ஐக்கிய நாடுகள் குழுக் கூட்டத்தில் பேசிய அதன் செயலாளர்நாயகம் அன்டோனியோ குட்டரஸ், நன்கொடை நாடுகளை சந்தித்து அவைகளின் கவலைகளை கேட்டறிந்ததாகவும் நாம் எடுத்த நடவடிக்கைகள் பற்றி கோடிட்டுக் காட்டியதாகவும் கூறினார்.

இந்த நிதி நெருக்கடிக்குக் காரணமான இஸ்ரேலின் குற்றச்சாட்டு குறித்து சுயாதீன விசாரணைக்கு ஆதரவு வழங்குவதாக பலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா நிறுவனத்தின் பேச்சாளர் டமரா அல்ரிபாய் ஏ.எப்.பி. இற்கு குறிப்பிட்டுள்ளார்.

ஜெரூசலத்தில் ஐ.நா தூதுவர்களை சந்தித்த நெதன்யாகு, பலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா நிறுவனத்தில் ஹமாஸ் முழுமையாக ஊடுருவிவிட்டதாகவும் மற்ற நிறுவனங்கள் மூலம் அது மாற்றப்பட வேண்டும் என்றும் கூறினார்.

இந்தப் போர் பரந்த அளவில் தாக்கத்தை செலுத்தி வரும் சூழலில், மத்திய கிழக்கில் இயங்கும் ஈரான் ஆதரவு போராட்டக் குழுக்கள் இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவை இலக்கு வைத்து தாக்குதல்களை நடத்தி வருகின்றன.

மறுபுறம் காசாவில் போர் வெடித்தது தொடக்கம் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையிலும் இஸ்ரேலிய படையினரின் சுற்றிவளைப்புகள் மற்றும் வான் தாக்குதல்கள் அதிகரித்துள்ளன.

## ஹூத்தி தாக்குதலுக்கு அஞ்சி 16,000 கால்நடைகள் நிர்க்கதி



பேர்த் துறைமுகம் ஒன்றுக்குத் திரும்பியுள்ள கப்பல் ஒன்றில் உள்ள 16,000 செம்மறியாடுகள் மற்றும் மாடுகள் கடும் வெப்பத்திற்கு மத்தியில் அவுஸ்திரேலிய கடற்கரைக்கு அப்பால் நிர்க்கதியாகியுள்ளன.

செங்கடல் வழியாக இஸ்ரேலை நோக்கி கடந்த மாதம் பயணத்தை ஆரம்பித்த எம்.வி. பஹிஜா என்ற இந்தக் கப்பல் யெமன் ஹூத்திக் கிளர்ச்சியாளர்களின் தாக்குதலுக்கு இலக்காகும் அச்சம் காரணமாக அந்தப் பயணத்தை கைவிட்டது. இதனால் கப்பலில் உள்ள கால்நடைகள் பல வாரங்களால் கடலில் தவித்து வருகின்றன.

இந்த கால்நடைகளை கப்பலில் இருந்து இறக்குவது தொடர்பில் அவுஸ்திரேலியாவின் முடிவுக்காக கப்பல் காத்து நிற்கிறது.

கப்பலில் உள்ள கால்நடைகள் நலத்துடன் இருப்பதாகக் கூறப்பட்டது.

ஆனால் 40 டிகிரி செல்சியஸ் வெப்பத்தில் கால்நடைகள் சிரமப்படுவது குறித்து விலங்கு நல ஆர்வலர்கள் ஆதங்கத்தை வெளிப்படுத்தி வருகின்றனர்.

மீண்டும் இஸ்ரேலுக்கு அனுப்புவதாக இருந்தால் அந்தக் கப்பல் ஆபிரிக்காவைச் சுற்றி ஒரு மாதம் கடந்த பின்னரே சென்றுசேர முடியும் என்று ரோய்ட்டர்ஸ் கூறுகிறது.

## அமெரிக்க கப்பல் மீது ஹூத்திக்கள் தாக்குதல்



செங்கடலில் செல்லும் கப்பல்கள் மீது நடத்தப்பட்டு வரும் தாக்குதல்களின் தொடர்ச்சியாக அமெரிக்க வர்த்தகக் கப்பல் ஒன்றை தாக்கியதாக யெமன் ஹூத்தி அமைப்பு அறிவித்துள்ளது.

அமெரிக்காவால் இயக்கப்படும் கே.ஓ.ஐ. என்ற கப்பலையே தாக்கியதாக அந்த அமைப்பு கூறியது.

யெமனின் அதென் துறைமுகத்தின் தெற்காக இயங்கும் கப்பல் ஒன்று தீப்பற்றி இருப்பதாக கடல் சார் பாதுகாப்பு நிறுவனமான அம்ப்ரே குறிப்பிட்டபோதும் அந்தக் கப்பலின் பெயர் வெளியிடப்படவில்லை.

இதேநேரம் அனுப்புவதற்கு தயாராக வைக்கப்பட்ட 10 ஆளில்லா விமானங்களை இலக்கு வைத்து யெமன் மீது அமெரிக்கா புதிய வான் தாக்குதல்களை நடத்துள்ளது.

இதில் தாக்குதலுக்கு இலக்காகி இருக்கும் கே.ஓ.ஐ. கப்பல் லைபீரிய நாட்டு கொடியுடனான பிரிட்டனைத் தளமாகக் கொண்ட ஓசியானிக்ஸ் சேவைகள் நிறுவனத்தினால் இயக்கப்படும் கொள்கலன் கப்பல் என்று ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

பலஸ்தீனத்திற்கு ஆதரவாக இஸ்ரேலுடன் தொடர்புபட்ட கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தி வரும் ஹூத்திக்கள் தம் மீது தாக்குதல் தொடுக்கும் அமெரிக்க மற்றும் பிரிட்டன் நாட்டு கப்பல்களையும் இலக்கு வைத்து வருகின்றனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்டட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 பெப்ரவரி மாதம் 2ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

## அமைச்சரவையில் அங்கம் வகிக்காத அரச பெருந்தோட்ட தொழில்முயற்சி மறுசீரமைப்பு அமைச்சு

### இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்

### பச்சைத் தேயிலைக் கொழுந்து / இறப்பர் பால் விற்பனை செய்தல்

### மார்ச் – ஏப்ரல் 2024

**கேள்வி இல. SLSPC/PL/Green Leaf/Latex/ T-22-35/March - April-2024**

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குரித்தான கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்களில் அமைந்துள்ள பின்வரும் தோட்டங்களில் பச்சைத் தேயிலைக் கொழுந்து மற்றும் காலி மாவட்டத்திலுள்ள வலஹந்துவ தோட்டத்தின் பச்சைத் தேயிலைக் கொழுந்து மற்றும் இறப்பர் பாலை இரண்டு மாதத்திற்கு விற்பனை செய்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| பச்சைத் தேயிலைக் கொழுந்து | கேள்வி இலக்கம் | மீளளிக்கப்படாத வைப்புத் தொகை |
|---|---|---|
| அலகொல்ல அரச தோட்டம் | SLSPC/PL/Green Leaf/T-22 / March - April -2024 | 100,000.00 |
| கொட்டகஹ அரச தோட்டம் | SLSPC/PL/Green Leaf/T-23 / March - April -2024 | 100,000.00 |
| கல்பிஹில்ல அரச தோட்டம் | SLSPC/PL/Green Leaf/T-24 / March - April -2024 | 100,000.00 |
| ரங்கல அரச தோட்டம் | SLSPC/PL/Green Leaf/T-25 / March - April -2024 | 100,000.00 |
| ஹுன்னஸ்கிரிய அரச தோட்டம் | SLSPC/PL/Green Leaf/T-26 / March - April -2024 | 100,000.00 |
| ஹெயார்பார்க் அரச தோட்டம் | SLSPC/PL/Green Leaf/T-27 / March - April -2024 | 50,000.00 |
| விகாரகல அரச தோட்டம் | SLSPC/PL/Green Leaf/T-28 / March - April -2024 | 25,000.00 |
| வைத்தலாவ அரச தோட்டம் | SLSPC/PL/Green Leaf/T-29 / March - April -2024 | 100,000.00 |
| வுட்சைட் அரச தோட்டம் | SLSPC/PL/Green Leaf/T-30 / March - April -2024 | 50,000.00 |
| வலஹந்துவ அரச தோட்டம் | SLSPC/PL/Green Leaf/T-31 / March - April -2024 | 10,000.00 |
| மின்லன்ட் அரச தோட்டம் | SLSPC/PL/Green Leaf/T-32 / March - April -2024 | 100,000.00 |
| ஓபல்கல் அரச தோட்டம் | SLSPC/PL/Green Leaf/T-33 / March - April -2024 | 50,000.00 |
| நிகொலோய அரச தோட்டம் | SLSPC/PL/Green Leaf/T-34 / March - April -2024 | 25,000.00 |
| இறப்பர் பால் (Latex) | | |
| வலஹந்துவ | SLSPC/PL/Latex/ T-35/ March - April -2024 | 25,000.00 |

மேற்படி விலைக்கோரலுக்கான நிபந்தனைகள் மற்றும் விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கான படிவங்களை உள்ளடக்கிய கேள்வி ஆவணங்களை 5000.00 ரூபாவைச் செலுத்தி 2024-02-02ஆம் திகதி முதல் 2024-02-16ஆம் திகதி வரையில் பி.ப. 4.00 மணி வரையான நாட்களில் பன்விலயில் அமைந்துள்ள இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் பிரதேச அலுவலகத்திலிருந்து அல்லது 2024-02-02ஆம் திகதி முதல் 2024-02-19ஆம் திகதி வரையில் பி.ப. 12.30 மணி வரையில் இல. 257, ஸ்ரீ தம்ம மாவத்தை, கொழும்பு - 10 எனும் முகவரியில் அமைந்துள்ள இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகத்தில் கொள்வனவு செய்யலாம்.

மீளளிக்கப்படும் வைப்புத் தொகையை ஒவ்வொரு தோட்டத்திற்காகவும் வெவ்வேறாகச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன், இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினால் மக்கள் வங்கி முதலாம் நகரக் கிளையில் பேணப்படும் 046-1-002-4-0000933 எனும் கணக்கிலக்கத்திற்கு வைப்புச் செய்து அல்லது ரொக்கப் பணமாக காசாளருக்குச் செலுத்தி பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் பற்றுச்சீட்டின் பிரதியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தை வைப்புப் பற்றுச்சீட்டு சகிதம் கொழும்பு-10, இல. 257, ஸ்ரீ தம்ம மாவத்தையில் அமைந்துள்ள இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2024-02-19ஆம் திகதி பி.ப. 1.00 மணிக்கு முன் உள்ளிடுதல் வேண்டும். தெரிவு செய்யப்படும் கேள்விதாரரினால் உடன்படிக்கை கைச்சாத்திடும் தினத்திற்கு முன் இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட கடந்த மாதங்களில் பச்சைத் தேயிலைக் கொழுந்து அளவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட விலையின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தினால் சமர்ப்பிக்கப்படும் பெறுமதிக்கு 03 மாதங்கள் வரையில் செல்லுபடியாகும் வங்கிப் பிணை முறியொன்றை வழங்குதல் கட்டாயமாகும்.

2024-02-19ஆம் திகதி பி.ப. 1.00 மணிக்கு கேள்விகள் ஏற்றுக்கொள்ளும் காலம் நிறைவடைந்தவுடன் கேள்விகளைத் திறக்கும் குழுவின் முன்னிலையில் இந்தக் கேள்விகள் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் கொள்வனவாளர் அல்லது அவர்களின் பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம். நிர்ணயிக்கப்பட்ட தினம் மற்றும் நேரத்திற்குக் கிடைக்கப்பெறாத கேள்விப் படிவங்கள் தொடர்பில் கூட்டுத்தாபனம் பொறுப்புக்கூற மாட்டாது என்பதுடன் பெறுகைக் குழுத் தலைவரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்,**
**இல. 257, ஸ்ரீ தம்ம மாவத்தை,**
**கொழும்பு-10.**
**0114-194879.**

## NALLUR PRADESHIYA SABHA
## LOCAL DEVELOPMENT SUPPORT PROJECT
## RENOVATION OF OFFICE BUILDING AT KOKKUVIL

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received a **credit** from the **World Bank & European Union** towards the cost of **Local Development Support Project**, and intends to apply part of the proceeds of this credit to payments under the Contract for the work stated in the Table below.
2. The **Chairman, Local Authority Procurement Committee** on behalf of the **Nallur Pradeshiya Sabha** now invites sealed bids from eligible and qualified bidders for the work stated in the Table below.

| No | Contract No | Contract Name | Employer's Estimated Cost (Rs. Mn) | CIDA Grade & Specialty | Contract Period (Days) | Bid Security Amount (Rs) | Bid Validity Period | Bid Security Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | LDSP/NP/JAF/NPS/2024/PT3/01 | Renovation of Office Building at Kokkuvil | 10.76 | C6 & C5 Building Construction | 90 | 162,000.00 | 15-May-2024 | 12-Jun-2024 |

3. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** Procedure.
4. Interested bidders may obtain further information from **Secretary, Nallur Pradeshiya Sabha, 14/5 Karuvappulam Road, Kokkuvil (T.P No: 0212222700, Fax No: 0212220138)** and inspect the bidding documents at **Nallur Pradeshiya Sabha, 14/5 Karuvappulam Road, Kokkuvil** from **2-Feb-2024** until **28-Feb-2024** between **09:00 Hrs** to **14:00 Hrs** on public working days.
5. Qualification requirements include to qualify for contract award are included in Section 4 (Qualification Information) and Section 5 (Bidding Data and Contract Data) in the Bidding Document.
6. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the specialty mentioned in Schedule for grade mentioned in the table above with the Construction Industry Development Authority (CIDA).
7. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Secretary, Nallur Pradeshiya Sabha, 14/5 Karuvappulam Road, Kokkuvil** from **2-Feb-2024** until **28-Feb-2024** between **09:00 Hrs** to **14:00 Hrs** on public working days and upon payment of a non-refundable fee of **Rs.6,000.00**. The method of payment will be **by cash or card.**
8. Bids must be deliveredin Original and Duplicate to **The Chairman, Local Authority Procurement Committee (LAPC), Nallur Pradeshiya Sabha, 14/5 Karuvapulam Road Kokkuvil, Jaffna** on or before **10.00** Hrs on **29-Feb-2024.** Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend. Bids must be accompanied by a **Bid Security** as stated in the Table above
9. The pre bid meeting will be held on **16.02.2024** at **10.00hrs** at Nallur Pradeshiya sabha. Interested Bidders may participate in this meeting their own expenses.

**The Chairman**
**Local Authority Procurement Committee**
**Nallur Pradeshiya sabha**
**14/5 Karuvapulam Road**
**Kokuvil** 02-Feb-2024

## பெறுகை அறிவித்தல்

## மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை (மே.மா)

### (மாகாண வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தக, வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு – மேல்மாகாணம்)

### ஏபிசி கல் (கலப்பு கல் பெற்றுக் கொள்ளல்)

மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ்க்காணும் நிறைவேற்று பொறியியல் அலுவலகத்திற்கு தேவையான ஏபிசி கல் (கலப்புக்கல்) வழங்குவதற்காக திறந்த விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**கேள்விச் சுருக்கம்**

| கேள்வி இலக்கம் | விபரம் | ABC கலப்புக்கல் $M^3$ | Quarry Muck $M^3$ | கேள்விப் படிவக் கட்டணம் ரூ. | கேள்விப் பிணையின் பெறுமதி | | கேள்விகள் திறத்தல் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | காசாக ரூ. | வங்கி / காப்புறுதி பிணை மூலம் ரூ. | |
| PRDA/Wp/PRO/2024/07 கேள்வி விநியோகித்தல் 2024.02.02 2024.02.16 மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை | **கம்பஹா மாவட்டம்** நீர்கொழும்பு நி.பொ. அலுவலகம் உடுகம் பொல நி.பொ. அலுவலகம் நிட்டம்புவ நி.பொ. அலுவலகம கிரிந்திவெல நி.பொ. அலுவலகம் (பட்டகொல்ல களஞ்சியம்) | 1000 2000 2000 2000 | | 1,000.00 + SSCL + VAT 18% | 175,000.00 | 350,000.00 | 2024/2/19 பி.ப. 2.30 |
| PRDA/Wp/PRO/2024/08 கேள்வி விநியோகித்தல் 2024.02.02 2024.02.16 மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை | **கொழும்பு மாவட்டம்** கொழும்பு நி.பொ. அலுவலகம் மொறட்டுவ நி.பொ. அலுவலகம் (மடபாத்த களஞ்சியம்) அவிசாவளை நி.பொ. அலுவலகம் | 500 2000 2000 | 200 | 1,000.00 + SSCL + VAT 18% | 115,000.00 | 230,000.00 | |
| PRDA/Wp/PRO/2024/09 கேள்வி விநியோகித்தல் 2024.02.02 2024.02.16 மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை | **களுத்துறை மாவட்டம்** அகலவத்த நி.பொ. அலுவலகம் களுத்துறை நி.பொ.அ. (தெல்துவ களஞ்சியம்) ஹொரண நி.பொ.அ. | 2000 1500 1500 | 100 | 1,000.00 + SSCL + VAT 18% | 130,000.00 | 260,000.00 | |

02. மேற்படி கேள்விப் படிவக் கட்டணத்தை செலுத்துவதன் பேரில் (அதிகாரசபையில் பதிவு செய்த வழங்குநர்கள் தவிர்த்து) இவ் அதிகாரசபையின் பெறுகைப் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம். இதற்கான கேள்விப் பிணையை காசாக பெறுகை ஆவணங்களில் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக மேற்படி பெறுமதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.
03. கேள்வி வழங்குவதற்கு தகைமை பெறுவதற்கு கேள்வித் தொகை ரூபா. 5.0 மில்லியனுக்கு மேற்படும் வேளையில் கேள்விதாரரால் 1987 இல.03 பொது ஒப்பந்த சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழ் கம்பனி பதிவாளரால் வழங்கப்படும் பதிவுச் சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.
04. கேள்விகள் திறத்தல் மேற்கண்டவாறு இவ் அலுவலகத்தில் இடம்பெறுவதுடன், இவ் வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை (மே.மா)**
**இல. 59, சென் செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு - 12,**
**தொலைபேசி இலக்கம்: 011 - 4849825, 011 - 4849845**

### இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
### வன சீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சு
### வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்

## விலைமனுக்களுக்கான அழைப்பு

வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவரினால் நிர்மாணிக்கப்பட்டுள்ள மின்சார வேலி பராமரிப்புக்குத் தேவையான மரத் தூண்களைக் கொள்வனவு செய்வதற்கு தகைமை மற்றும் தகுதி வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய போட்டி ரீதியிலான கேள்வி கோரலின் கீழ் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| பெறுகை இலக்கம் | உருப்படிகள் | எண்ணிக்கை | மீளளிக்கப் படாத கேள்விப் படிவத்தின் பெறுமதி ரூபா | கேள்விப் பிணை முறியின் பெறுமதி ரூபா | கேள்விப் பிணை முறியின் செல்லுபடிக் காலம் (கேள்வி திறக்கப்படும் நாள் முதல்) |
|---|---|---|---|---|---|
| WL/02/09/T.P./2024 Supply & Delivery Timber Post | வேலித் தூண் (நீளம் 7'6", சுற்றளவு 16" - 19" | 4,366 | 12,000.00 | 730,000.00 | 120 நாட்கள் |
| | முழுத் தூண் (நீளம் 7'6", சுற்றளவு 16" - 19" | 1,435 | | | |
| | ஆதாரத் தூண் (நீளம் 10', சுற்றளவு 14" - 15" | 02 | | | |

01. இதில் ஆர்வம் காட்டும் கேள்விதாரர்கள் கேள்விகள் தொடர்பான மேலதிக விபரங்களை திணைக்களத்தின் உதவி நிதிப் பணிப்பாளர் (0112-871537) அவர்களைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம். ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள கேள்வி ஆவணங்களை 2022-02-02ஆம் திகதி முதல் 2024-02-21ஆம் திகதி வரையான அரச வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரையில் பத்தரமுல்லை, வன சீவராசிகள் திணைக்களத்தின் கணக்கியல் பிரிவில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
03. இதில் ஆர்வம் காட்டும் கேள்விதாரர்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள கேள்வி ஆவணங்களை 2022-02-02ஆம் திகதி முதல் 2024-02-21ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரையில் கடிதத் தலைப்பில் எழுத்து மூலமான கோரிக்கை சகிதம் மீளளிக்கப்படாத கட்டணத்தை திணைக்களத்தின் சிறாப்பருக்கு ரொக்கப் பணமாகச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
04. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென வெவ்வேறாக கடித உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து மீண்டும் அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அக்கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பெறுகை இலக்கத்தைக் குறிப்பிட்டு 2024-02-22ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நிதிப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம் என்பதுடன் கேள்விகள் அன்றைய தினமே பி.ப. 3.00 மணிக்குத் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் நீங்கள் அல்லது உங்களது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
05. கேள்விப் படிவங்களைத் தயாரிப்பதற்கு ஏற்படும் எந்தவொரு செலவுக்காகவும் திணைக்களப் பெறுகைக் குழுவின் தலைவர் பொறுப்புகூற மாட்டார்.
06. எந்தவொரு கேள்வியையும் ஏற்றுக்கொள்ளும், நிராகரிக்கும், ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்ளும் அல்லது எக்காரணமும் காட்டாமல் நிராகரிக்கும் உரிமையை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**வனசீவராசிகள் திணைக்களம்,**
**இல. 811/ஏ, ஜயந்திபுர வீதி,**
**பத்தரமுல்லை.**

Daily News Classifieds, the Housewives' companion

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7ம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1) ஆம் பிரிவின் கீழ் அறிவிக்கப்படுகிறது.

கம்பனியின் பெயர் : ஆர் என் இம்போர்ட்ஸ் என்ட் எக்ஸ்போர்ட்ஸ் (பிவீட) எல்டிடி

பதிவிலக்கம் : PV 00287959

பதிவு முகவரி: இல: 80, மத்திய சந்தை, மாத்தளை.

செயலாளர்

**மரணசாசனமில்லா சொத்தை உரிமை கோருவதற்கான அறிவித்தல்**

**1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டம் பிரிவு 55**

கொழும்பு மாவட்டத்தின் ஹோமாகம பிரதேச செயலாளர் பிரிவில் மத்தேகொட எனும் கிராமத்தில் அமைந்துள்ள கடத்திரள் வரைபட இல. 520008 கண்ட இல. 19 பத்திர இல. - துண்ட இல. 0079 ஐக் கொண்ட காணியை உடைமை கொண்டிருந்த இல. 12/50, சுமுது உயன, புபுது மாவத்த, மத்தேகொட எனும் விலாசத்தைக் கொண்ட மடிகே ஆரச்சிகே இந்ரா குணவர்தன (2023.09.19) எனும் நபர் மரணமடைந்துள்ளார்கள் அவரது உரிமையாளர் 2024.03.02ஆம் திகதிக்கு முன் இல. 06, முதலாம் ஒழுங்கை, ரயில் நிலைய வீதி, ஹோமாகம என்ற இடத்தில் அமைந்துள்ள காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்திற்கு சமுகம் தரவும்.

**ஆணையாளர் நாயகம்**
**காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்.**

Repeat Your ad For Better Offers

**சர்வதேச போட்டி ரீதியிலான விலைமனுக்களுக்கான அழைப்பு**

**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (சுத்திகரிப்புப் பிரிவு)**

**பகிரங்கக் கேள்வி – 4497T**

**LEVER CHAIN HOISTS வழங்குதல்**

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன, இலங்கை, களனிய, சப்புகஸ்கந்த சுத்திகரிப்புப் பிரிவு, திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவரினால் அங்கீகரிக்கப்பட்ட உற்பத்தியாளர்கள், வெளிநாடுகளிலுள்ள அவர்களது அதிகாரம்பெற்ற ஏற்றுமதியாளர்கள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்களிடமிருந்து (உற்பத்தியாளர்கள் அல்லது ஏற்றுமதி முகவர்கள்) விலைகோரல் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரக்குறிப்புகள் மற்றும் நிபந்தனைகளுக்கு முழுமையாக அமையும் வகையில் மேற்குறிப்பிட்ட பொருளை வழங்குவதற்கான முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

எந்தவொரு கேள்விதாரரும் கேள்வியைச் சமர்ப்பிக்கும்போது வேண்டுகோள் கடிதத்துடன் மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாக 1,000.00 ரூபாவை 2024 பெப்ரவரி 26ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரையான அலுவலக நாட்களில் கொழும்பு - 09, இல. 609, டாக்டர் டனிஸ்டர் டீ சில்வா மாவத்தை, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன தலைமை அலுவலகத்தின் 05ஆம் மாடியிலுள்ள காசாளரிடம் செலுத்துதல் வேண்டும் அல்லது களனி, சப்புகஸ்கந்த, சுத்திகரிப்புப் பணியகத்தின் காசாளரிடம் ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும். மேலும் சகல கொடுப்பனவுகளையும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் மக்கள் வங்கியில் பேணப்படும் 004100110208633 எனும் கணக்கிலக்கத்தின் ஊடாக கேள்வி இலக்கம் மற்றும் கேள்விதாரரின் பெயரை சுருக்கமாகக் குறிப்பிட்டு பணத்தை செலுத்தலாம்.

கேள்வி நிபந்தனைகள் மற்றும் விபரக்குறிப்புகள் அடங்கிய கேள்வி ஆவணங்கள் www.ceypetco.gov.lk மற்றும் www.dgmarket.com எனும் இணையதளங்களில் கிடைக்கத்தக்கதாக உள்ளன.

மாற்றுவழியாக கேள்வி ஆவணங்களை கீழ்க்குறிப்பிடப்பட்ட விலாசத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

விலைமனு ஆவணங்கள் 2024 பெப்ரவரி 28ஆம் திகதி பி.ப. 2.30 மணி வரை திணைக்கள பெறுகைக் குழுத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படுவதோடு, அன்றைய தினமே உடனடியாக அவைகள் சுத்திகரிப்பு நிலைய மாநாட்டு மண்டபத்தில் திறக்கப்படும்.

**முகாமையாளர் (பொருள்வளம்),**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**சுத்திகரிப்புப் பிரிவு, சப்புகஸ்கந்த,**
**களனி, இலங்கை.**
**தொலைபேசி: 0094-11-2400110**
**மின்னஞ்சல்: ref.materials@ceypetco.gov.lk**

**காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460)**

**7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

**லக்கல பிரதேச செயலாளரின் குறிப்பு இல. :** 11/3/31/145/1

**காணி அமைச்சின் குறிப்பு இல :** LD/05/2008/MV/408F

இங்கு கீழே காட்டப்பட்டிருக்கும் அட்டவணையின் விபரிக்கப்படும் காணியை மொரகஹகந்த, களுகங்கை அபிவிருத்தி திட்டத்திற்காக எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார். மேலதிக விபரங்களுக்கு இலக்கம் 2363/06 கொண்ட 2023.12.18 திகதிய இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு அதிவிசேட வர்த்தமானியைப் பார்க்கவும்

**அட்டவணை**

மாவட்டம் : மாத்தளை

பிரதேச செயலகப் பிரிவு : லக்கல - பல்லேகம

கிராம அலுவலகர் பிரிவு : இல. E396B அகரஹெடிய

கிராமம் : அகரஹெடிய (குறிப்பிட்ட ஆரம்ப வரைபடத்திற்கு இணங்க)

காணியின் பெயர் : மேற்குறித்த இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் படி.

வரைபட இல. : க.சீ 310243 வலய இல. 22 பத்திர இல.1

துண்டு இல. : 2

விஸ்தீரணம் : 22.1279 ஹெக்டயார்

வரைபட இலக்கம் : க.சீ 310243 வலய இல. 16 பத்திர இல.1

துண்டு இல.: 1,2,3,5

விஸ்தீரணம் : 34.2007 ஹெக்டயார்

**ச்வர்ணா பெரேரா**
**பிரதேச செயலாளர்**
**லக்கல.**

**2024.01.31 ஆம் திகதி**
**லக்கல பிரதேச செயலகத்தில்**

## நீர்கொழும்பு மாநகரசபை

## பெறுகை அறிவித்தல்

நீர்கொழும்பு மாநகர சபைக்கு சொந்தமான கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் செயற்றிட்டங்களை பூர்த்தி செய்வதற்காக தகைமையுள்ள ஒப்பந்த நிறுவனங்களிலிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

1. கேள்வி விபரம்
   i. கேள்வி ஆவணங்களை விநியோகித்தல்
      2024.02.20 பி.ப. 3.00 வரை
   ii. கேள்வி ஆவணங்களை ஏற்றுக் கொள்ளல்
      2024.02.21 பி.ப. 2.00 வரை
   iii. கேள்வி ஆவணங்களை திறத்தல்
      2024.02.21 பி.ப. 2.00 வரை
2. தகைமைகள்
   i. அட்டவணையில் உள்ளவாறு நிர்மாண மற்றும் அபிவிருத்தி பயிற்சி நிறுவனத்தின் (CIDA) குறைந்தபட்சம் பதிவு செய்தல் வேண்டும்.
   ii. கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதற்கு நாளதுவரைக்கு உட்படுத்தப்பட்ட நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை CIDA (Construction industry Development Authority) பதிவுப் புத்தகத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.
3. கேள்விகளைச் சமர்ப்பித்தல்
   i. கேள்விகள் உள்ளிடும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் செயற்றிட்டத்தின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும்.
   ii. மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியை வேறுவேறு உறைகளில் இட்டு இவ் உறைகளை மீண்டும் ஒரு உறையில் உள்ளிடல் வேண்டும்.
4. கேள்வி ஆவணங்கள் ஏற்றுக் கொள்ளல் முடிவடையும் குறித்த நேரத்திற்கு முன்னர் கிடைக்குமாறு "மாநகர ஆணையாளர், மாநகர சபை, நீர்கொழும்பு" முகவரிக்கு தபாலில் அல்லது கொண்டுவந்து ஒப்படைக்கலாம்.
5. எந்தக் கேள்வி ஆவணத்தையும் ஏற்றுக் கொள்ளல் அல்லது நிராகரிக்கும் உரிமை நீர்கொழும்பு மாநகர சபைக்கு உரியது.
6. கேள்வி ஆவணங்கள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரருக்கு அல்லது கேள்விதாரரின் எழுத்துமூல அனுமதியளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு மாத்திரம் சமுகமளிக்கலாம்.

* மேலதிக விபரங்களுக்கு மாநகர பொறியியலாளரிடம் அலுவலக நேரங்களில் கீழ்க்காணும் தொ.பே. இலக்கத்தை அழைத்து தெரிந்து கொள்ளலாம்.
தொலைபேசி இலக்கம்: 031 - 2233190

**அட்டவணை**

| தொடர் இல. | செயற்றிட்டம் | CIDA பதிவின் குறைந்தபட்ச எல்லை | கேள்வி மாதிரிப் பத்திரக் கட்டணம் (ரு) | கேள்வி வைப்புத் தொகை (ரு) |
|---|---|---|---|---|
| 01 | நீர் கொழும்பு, கெலிசன் வீதி, இல. 19 இல் அமைந்துள்ள தென்னைப்பயிர்ச் செய்கை சபைக்கு சொந்தமான விதை உற்பத்தி பிரிவில் காணப்படும் கட்டிடத்தின் கூரை மற்றும் ஏனைய பழுதுபார்த்தல் விடயங்களை மேற்கொள்ளல் | C -7 | 5000 | 198,000.00 |

**டபிள்யூ.ஏ.டி. பிரபாத் லக்ஷ்மன்**
**மாநகர ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**நீர் கொழும்பு**
**2024.01.31ம் திகதி**
**நீர் கொழும்பு மாநகர அலுவலகத்தில்**

## தென் மாகாண சபை - முதலமைச்சு

## பெறுகை அறிவித்தல்

தென் மாகாண சபையின் முதலமைச்சு பெறுகைக்குழுத் தலைவரால் கீழ்க்காணும் நிர்மாண வேலை விடயங்களுக்காக திறன் உடைய மற்றும் தகைமையுடைய கேள்விதாரர்களிடமிருந்து வேறுவேறாக பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இல | வேலைகள் | மானிய தன்மை | மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா (வெட் இன்றி) | தேவைப் படும் பதிவு | கேள்விப் பிணை (ரூபா) | மீளளிக்கப் படாத கேள்வி வைப்புத் தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | ரஜ்கம மொன்ரோவியா வத்த கொம்போஸ்ட் களஞ்சியத்தில் Block A-2 கட்டிடம் - பழுது பார்த்தல் மற்றும் மேலதிக கூரையை நிர்மாணித்தல் | 306-3-2-0-2001 | 30,878,868.35 | C- 4<br>C -5 | 309,000.00 | 6,000.00 |

02. தேசிய போட்டி கேள்வி முறைமையின் ஊடாக கேள்விகளை சமர்ப்பித்தல் வண்டும். ஒப்பந்தங்களை வழங்கும் போது, தகைமை பெறும் சித்திகரமான கேள்விதாரர்கள் அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்படாது இருப்பதுடன் நிர்மாண, கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் மேற்படி வகுதிகளின் கீழ் பதிவு செய்திருத்தல் வேண்டும்.
03. அரச நிதி சுற்றுநிருப இல 03/2020 மற்றும் 2020.10.09ம் திகதிய மற்றும் 03/2020(i) மற்றும் 2021.01.11ம் திகதிய சுற்றுநிருபங்களில் குறிப்பிடப்படும் நிபந்தனைகளும் செல்லுபடியாவதுடன் மாகாண முன்னுரிமை மற்றும் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA Grade) முன்னுரிமை, கேள்வி மதிப்பீட்டின்போது கவனத்தில் கொள்ளப்படும்.
04. கேள்வி விண்ணப்பங்கள் 2024.02.02 முதல் 2024.02.20 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை லபுதுவ, தக்ஷினபாய, தென் மாகாண முதலமைச்சின் திட்டமிடல் பிரிவில் இருந்து பெற்றுக்கொள்ளலாம். தற்போதுள்ள சிரமங்கள் காரணமாக கேள்விப் பத்திரங்களை மின்னஞ்சல் மூலம் பெற்றுக்கொள்வதற்கு அமைச்சின் இவ் இலக்கங்களுக்கு வேலை நாட்களில் அழைத்துப் பெற்றுக்கொள்ளலாம். 091-4946620, 091-4946844
05. பொறியிடப்பட்ட கேள்வி பத்திரங்கள் 2024.02.21 மு.ப. 10.00 இற்கு முன் கிடைக்குமாறு செயலாளர், தென் மாகாண முதலமைச்சு, 5ஆம் மாடி, தக்ஷினபாய், லபுதுவ, காலி. என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கையோடு கொண்டு வந்து முதலமைச்சின் திட்டமிடல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.
06. கேள்விப் பத்திரங்கள் திறத்தல் 2024.02.21 மு.ப. 10.30 இற்கு தென் மாகாண முதலமைச்சு பெறுகைக் குழுத் தலைவரின் தலைமையில் அமைச்சில் இடம்பெறுவதுடன் அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது கேள்விதாரரின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிக்கு சமுகமளிக்கலாம்.
07. கேள்வியுடன் சமர்ப்பிக்கப்படும் பிணையை இலங்கையின் வர்த்தக வங்கியிலிருந்து தென் மாகாண முதலமைச்சின் செயலாளரின் பெயருக்கு பெற்றுக் கொண்ட 2024.02.21 முதல் 2024.06.19 வரை செல்லுபடியாகும். கேள்விப் பிணையொன்றை அல்லது முதலமைச்சின் கணக்குப் பிரிவிற்கு காசு செலுத்திய பின்பு வழங்கப்படும் நிதிப்பற்றுச்சீட்டை கேள்விப் பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். காசோலை அல்லது வங்கிக் கட்டளையாக சமர்ப்பிக்கப்படும் கேள்விப் பிணைகள் நிராகரிக்கப்படும்
08. கேள்வி செல்லுபடியாகும் காலம் 2024.05.22 வரையாகும்
09. சமர்ப்பிக்கப்படும் வேலையுடன் சம்பந்தப்பட்ட கேள்விகள், இரு பிரதிகளுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் அதன் மூலப் பிரதியில் "மூலப் பிரதி" என குறிப்பிட வேண்டியதுடன் நகல் பிரதியில் "நகல் பிரதி" என குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகளின் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியை வேறுவேறு உறைகளில் இட்டு பொறியிட்டு அவ் உறைகள் இரண்டையும் ஒரு உறையில் இட்டு அவ் உறையையும் பொறியிட்டு உறையின் இடது பக்க மேல் மூலையில் கைத்தொழிலின் பெயரைக் குறிப்பிட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.
10. கேள்விக்கு முன்னரான கூட்டம் 2024.02.14 மு.ப. 10.30 இற்கு ZOOM தொழில்நுட்பத்தின் ஊடாக நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. குறித்த இணைப்பினை மேற்படி தொ.பே இலக்கத்தின் ஊடாக விசாரித்துப் பெற்றுக் கொள்ளலாம்.
11. குறைபாடு உடைய கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படுவதுடன் விண்ணப்பங்களைப் பெற்றுக் கொண்டு கேள்விகளை சமர்ப்பிக்காத விண்ணப்பதாரிகளின் கேள்விப் பிணைத் தொகை அரசுடமையாக்கப்படும். குறித்த கேள்விப் பத்திரங்களை முழுமையாக ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரிக்கும் உரிமை பெறுகைக்குழுவிற்கு உரியது. இப்பெறுகை சம்பந்தமாக பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும் என்பதை கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**தென் மாகாண முதலமைச்சு,**
**5ஆம் மாடி, தக்ஷினபாய, லபுதுவ, காலி.**
**2024.02.01**

# பெறுகை அறிவித்தல்

**மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை (மே.மா.)**

(மாகாண வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தக, வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு – மேல் மாகாணம்)

**மங்கள திரிய போகமுவ 1/5 பாலத்திற்கு ரெடி மிக்ஸ் கொங்கிறீட் GRADE 25/20 /120 mm பெற்றுக் கொள்ளல்**

**கேள்வி இலக்கம் PRDA/WP/PRO/2024/12**

இவ் அதிகாரசபையில் மேற்படி செயற்றிட்டத்திற்கு தேவையான ரெடிமிக்ஸ் கொங்கிறீட் GRADE 25/20/120mm கொள்வனவு செய்வதற்கு வழங்குநர்களிடமிருந்து திறந்த விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**கேள்விச் சுருக்கம்**

| உருப்படி | அளவு (கியூபிக் மீட்டர்) | கேள்விப் படிவக் கட்டணம் (பதிவு செய்த வழங்குநர்கள் தவிர்த்து) | காசாக பிணை முறி அல்லது (ரூ.) | வங்கிப் பிணையோடு (ரூ.) |
|---|---|---|---|---|
| 1. மங்களதிரிய போகமுவ 1/5 பாலம் | 126 | 1000.00 + 2.5 + 18% வெட் | 20,000.00 | 40,000.00 |

02. இதற்கான கேள்வி ஆவணத்தொகுதியை 2024.01.22 முதல் 2024.02.05ம் திகதிகளில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை உட்பட்டு, இவ் அதிகாரசபையின் பெறுகைப் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம். இதற்கான கேள்விப் பிணையை காசாக அல்லது வங்கி காப்புறுதி பிணை மூலம் பெறுகை ஆவணங்களில் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக மேற்படி பெறுமதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.
03. கேள்வி வழங்குவதற்கு தகைமை பெறுவதற்கு கேள்வித் தொகை ரூபா 5.0 மில்லியனுக்கு மேற்படும் வேளையில் கேள்விதாரரால் 1987 இல. 03 பொது ஒப்பந்த சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழ் கம்பனி பதிவாளரால் வழங்கப்படும் பதிவுச் சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.
04. கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் 2024.02.06 பி.ப. 2.30 இற்கு இடம்பெறுவதுடன், இவ் வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி, அபிவிருத்தி அதிகாரசபை (மே.மா),**
**இலக்கம் 59, புனித செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு -12.**
**தொ. இலக்கம் 011 - 4849825 / 011 - 4849845**

## இலங்கை துறைமுக அதிகாரசபை

**விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)**

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகாரசபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக்கப் பட்டுள்ளது) | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/04/PT/6451(MP) | Spares for Niigata Engine Coupled to Nishishiba Generator | 1,800,000.00 | 20,000.00 | 14-03-2024 மு.ப. 10.00 மணி |
| CES/FP/03/PT/6530(MP) | 375M Main and Auxiliary Hoist Wire Rope for Kato KA-900 (CR28) Mobile Crane | 35,000.00 | 1,000.00 | 14-03-2024 மு.ப. 10.00 மணி |
| CMS/LP/23/PT/22/018 | MS "I" Sectional Beams | 92,000.00 | 1,000.00 | 22-02-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/23/PT/01/063 | 5397 Mtrs Cloth Polyester Brown Suiting | 83,000.00 | 1,000.00 | 22-02-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/23/PT/03/061 | Items to Upgrade UG50 Telephone System | 16,000.00 | 1,000.00 | 22-02-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/23/PT/08/074 | Spares for Kato NK 250 E – III, 25 Ton Mobile Crane | 20,000.00 | 1,000.00 | 26-02-2024 பி.ப. 1.30 மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை (PCA 03 படிவம்) கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை பிரதான முகாமையாளர் (வழங்கல்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2024 பெப்ரவரி 02ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் முடிவுறுத்தப்படும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்துமூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.
6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் முடிவுறுத்தப்படும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்படப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருள் வள முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகாரசபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**

**தொலைபேசி எண்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் எண்: 2381652, 2470443**

## 1986ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தின் திருத்தப்பட்ட 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29D பிரிவின் கீழான விற்பனை

PEOPLE'S BANK

### மக்கள் வங்கி - தெல்தெனிய கிளை, மதிப்புமிக்க வணிகச் சொத்தின் ஏலம்

மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டம், வகபனஹ உடசியபத்து கோரலே, நாஉல பிரதேச செயலகப் பிரிவு மற்றும் பெனெலபொட (143D) கிராம சேவையாளர் பிரிவு ஆகிய பிரதேச சபையின் எல்லைக்குள் "போகஹலந்தஹேன" 21.03.2021 திரு. டபிள்யூ.எம்.எஸ்.ஆர். பண்டார அங்கீகரிக்கப்பட்ட நில அளவையாளரால் அளவீடு செய்யப்பட்ட திட்ட இலக்கம் 00211 இன் படி பகுதி எண்.01 க்கு எல்லை வடக்கே பெனெலகொட கிராமத்திலிருந்து, நாஉல பகுதி செல்லும் சாலையில் உள்ள காடு கிழக்கே ஏ.எம். அபேசிங்க மற்றும் பலருக்கு சொந்தமான காணி, தெற்கே: திட்ட எண். 00211-ன் பகுதி எண். 03 மற்றும் மேற்கே திட்ட எண். 00211-ன் பகுதி எண். 01 எல்லைக்குள்

**காணியின் விஸ்தீரணம் A: 00 R: 03 P: 4.8 காணி மற்றும் கட்டிடங்கள்,பயிர்கள் போன்ற அதற்கு சொந்தமான அனைத்தும்.**

**இந்த காணி மாத்தளை காணி பதிவு அலுவலகத்தில் படிவம் இலக்கம் Q17/136 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது. மக்கள் வங்கியினால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் 2024 பெப்ரவரி 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 2.00 மணிக்கு நாஉல மக்கள் வங்கி வளாகத்தில் என்னால் பொது ஏலத்தில் விற்கப்படுகிறது.**

இந்த சொத்து தம்புள்ளை கண்டி வீதியில், நதித ரஜமஹா விகாரை சந்தியிலிருந்து இடதுபுறமாக பெனெலபொட வீதியில் சுமார் 150 மீற்றர் தொலைவில் (நாஉல நகரத்திலிருந்து நதித ரஜமஹா விகாரை சந்தி வரை சுமார் 450 மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது)

**பணம் செலுத்தும் முறை:**

விலை முடிவு செய்யப்பட்டவுடன், வெற்றிகரமான வாங்குபவர் ஏலத்தின் முடிவில் பின்வரும் முழுத் தொகையையும் பணமாகச் செலுத்த வேண்டும்.

